# சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2024 – 2025

மானியக் கோரிக்கை எண்.45


**திருமதி. பி.கீதா ஜீவன்**

சமூக நலன் - மகளிர் உரிமைத் துறை அமைச்சர்



©

தமிழ் நாடு அரசு

2024

பொருளடக்கம்


| வ. எண் | அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | முன்னுரை | | 1–17 |
| 2. | சமூக நலன் | | 18–94 |
| 3. | அ) | முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் | 95–101 |
| | ஆ) | புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் | 102–122 |
| 4. | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் | | 123–187 |
| 5. | குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் | | 188–257 |
| 6. | நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள் | | 258–274 |
| 7. | சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்கள் | | 275–280 |
| 8. | சமூக சீர்திருத்தத் துறை | | 281–288 |
| 9. | இணைப்பு–1 | | 289 |
| 10. | இணைப்பு – 2 | | 290–292 |

## மானியக் கோரிக்கை எண் – 45
## சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை

## கொள்கை விளக்க குறிப்பு, 2024–2025

## அத்தியாயம்–1

### முன்னுரை

" உறுதியான பெண்கள் சாதாரணமாக பிறப்பதில்லை
அவர்கள் கடந்து வரும் புயல்களினால்
உருவாக்கப்படுகின்றனர் "

என்பது புகழ்பெற்ற சொல்லாடல் ஆகும். வாழ்க்கையில் ஏற்படும் புயல்களினால் உறுதியாக்கப்படும் பெண்கள், நலத் திட்டங்கள் வழங்கப்படும்போது மேலும் வலுவாக்கப்படுகின்றனர். சமூக நீதி, சமூக சமத்துவம் மற்றும் உள்ளடக்குதல் ஆகிய அரசின் அடித்தள கொள்கையினால் "சமூக நலன்" இந்த ஆட்சியின் செயல்பாட்டில் முக்கியத்துவம் பெற்றுள்ளது. இதனால் மகளிருக்கு சம உரிமை, வளத்தினை அணுகிட வாய்ப்புகள் மற்றும் முடிவெடுக்கும் அதிகாரம் பெறும் சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. சமுதாயத்தில் நலிவுற்ற,

பின்தங்கிய, விளிம்பு நிலை பிரிவினர் குறிப்பாக கல்வி அறிவு மறுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, சுரண்டப்பட்ட பெண்கள், பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படும் குழந்தைகள், மறுவாழ்வு, பாதுகாப்பு, ஊட்டச்சத்து மற்றும் உடல் நலன் தேவைப்படும் மூத்த குடிமக்கள் மற்றும் சமூக உள்ளடக்குதல், உணர்வறிதல், பொருளாதார ஆதரவு தேவைப்படும் திருநங்கைகள் ஆகியோருக்கு சிறப்பு கவனம் சென்றடைவதை, மாநில நலனில் முக்கிய அங்கம் வகிக்கும் "சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை" தலையாய செயல்பாடாக கொண்டுள்ளது.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் சமூக நல இயக்குநரகம், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் இயக்குநரகம் மற்றும் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் இயக்குநரகம் என மூன்று இயக்குநரகங்கள் செயல்படுகின்றன.

**சமூக நல இயக்குநரகம்** மகளிர் மேம்பாடு மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தல், குழந்தைகள், திருநங்கைகள், மூத்த குடிமக்கள் மற்றும் சத்துணவு தொடர்பான பல்வேறு திட்டங்களையும் செயல்படுத்தியும் கண்காணித்தும் வருகிறது.

**ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்குநரகம்** 0–6 வயது குழந்தைகளின் உயிர் வாழ்வாதார வளர்ச்சி மற்றும் மேம்பாட்டினை உறுதி செய்யும் வகையில் செயல்பட்டு வருகிறது. 0–6 வயது குழந்தைகள், கருவுற்ற மற்றும் பாலூட்டும் பெண்களுக்கு ஒரு நலத்திட்டமாக ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் 1975–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மேலும், குழந்தைகளின் வளர்ச்சி குறைபாட்டினை நிவர்த்தி செய்தல் இத்திட்டத்தின் நோக்கமாகும். கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு சுகாதார பாதுகாப்பு பணிகளையும் இவ்வியக்குநரகம் வழங்குகிறது.

**குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் இயக்குநரகம்** குழந்தைகளுக்கு சாதகமான நலன் மற்றும் வளர்ச்சியை வழங்குகிறது. சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாக கருதப்படும் குழந்தைகளுக்கு தேவையான கவனிப்பு, பாதுகாப்பு, சீர்திருத்தம் மற்றும் மறுவாழ்வு ஆகியவற்றை நிறுவனம் மற்றும் நிறுவனம் சாரா பணிகள் மூலம் வழங்குகிறது. மேலும், இல்லங்களை விட்டு விடுபட்டவர்கள் தன்னிறைவு பெறுவதற்கான திட்டங்கள் மற்றும் பின்கவனிப்பு சேவைகளை வழங்குகிறது.

**சமூக நல இயக்குநரகம்**

சமுதாய முன்னேற்றம் மற்றும் சமத்துவத்திற்கு இன்றியமையாததான மகளிருக்கு முழுமையான அதிகாரமளித்தலை முக்கியமான நோக்கமாக கொண்ட தமிழ்நாடு அரசு மகளிருக்கு கல்வி, சுகாதாரம், பொருளாதாரம், அரசியல், குடும்ப வாழ்க்கை

போன்றவற்றில் சம உரிமையினை உறுதிப்படுத்திட சமூக நலத்துறை செயல்பட்டு வருகிறது.

மகளிர் அதிகாரம் என்பது பெண்கள் அடக்குமுறை இல்லாமலும், சுரண்டப்படாமலும், அச்சமில்லாமலும், பாகுபாடில்லாமலும், எந்த துன்புறுத்தலுக்கும் ஆட்படாமலும் வாழும் சூழலை உருவாக்குவதாகும். பெண்கள் தமக்கான உரிமைகளைப் பெறவும், பொறுப்புகளை உணரவும், தன் மீதும், மற்றவர்களிடமும் அவற்றை சிறப்பான முறையில் பயன்படுத்தவும் அறிய வைப்பதே மகளிர் அதிகாரமாகும். இதன் மூலம், மகளிர் சரியான தகவல்களைப் பெறவும், அவர்களின் செயல் திறனை பாதிக்கும் காரணிகளைக் கண்டறிந்து கட்டுப்படுத்தியும், முடிவு எடுத்தலில் சிறந்த தன்னாட்சியினை வளர்த்திட இயலும். பாலின வேறுபாடுகளைக் களைந்து சமூக, உளவியல், அரசியல், குடும்ப மற்றும் பொருளாதார அதிகாரம் பெற்றிடவும், மகளிருக்கு விழிப்புணர்வு மற்றும் திறன் வளர்ப்பு நடவடிக்கைகள் மூலம் அவர்கள்

பல்வேறு திறன் மற்றும் ஆற்றல் பெற்றிட இயலும். இதன் மூலம் அவர்களின் திறன், தனியாக, குழுவாக மற்றும் சமுதாய அளவில் பிரதிபலித்திடும்.

**இந்திய அரசியலமைப்பு சட்டப்படி மகளிருக்கான உரிமைகள்**

இந்திய அரசியலமைப்பு சட்டம் பெண்களுக்கான சம வாய்ப்புகளையும் உரிமைகளையும் வழங்கியுள்ளது. பெண்களுக்கு சம உரிமை வழங்கும் முக்கியமான சட்டப் பிரிவு கீழ்க்கண்டவாறு.

- ❖ சட்டத்தின் முன் அனைவரும் சமம் (உறுப்பு–14).
- ❖ மதம், இனம், சாதி, பாலினம், பிறந்த இடம் அல்லது இவற்றில் ஏதேனும் ஒன்றின் காரணமாக பாகுபாடு காட்டுதலுக்கு தடை ( உறுப்பு – 15(i) ).
- ❖ பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஆதரவாக மாநில வாரியாக சிறப்பு ஏற்பாடு (உறுப்பு–15(iii)).
- ❖ வேலை வாய்ப்பில் சம வாய்ப்பு (உறுப்பு – 16).

- ஆண்களுக்கும் பெண்களுக்கும் போதுமான வாழ்வாதாரத்தை சமமாக பெறுதல் (உறுப்பு–39(a)).
- சமவேலைக்கு சம ஊதியம் ( உறுப்பு – 39(d)).
- சமவாய்ப்பு அடிப்படையில் நீதியை மேம்படுத்துதல் மற்றும் இலவச சட்ட உதவி வழங்குதல் ( உறுப்பு 39(a)).
- பெண்களை இழிவுபடுத்தும் நடைமுறைகளை கைவிடுதல் (உறுப்பு – 51(A)(e)).
- பெண்களுக்கு 1/3 இட ஒதுக்கீடு பஞ்சாயத்துகளில் (உறுப்பு 243(D) மற்றும் நகராட்சிகளில் ( உறுப்பு – 243 (T)).
- பெண்களுக்கு சொத்துரிமை ( உறுப்பு 300 (A)).

தமிழ் நாடு அரசு, மகளிரை மையமாகக் கொண்ட பல உன்னதமான திட்டங்களை செயல்படுத்துவதில் முன்னோடியாக திகழ்கிறது. "**மூவலூர் இராமமிர்த அம்மையார் நினைவு உயர்கல்வி உறுதி திட்டம் – புதுமைப் பெண்**" திட்டத்தின் கீழ் 2.73 இலட்சம் மாணவியருக்கு அவர்கள் இளங்கலை, தொழிற்பயிற்சி மற்றும் பட்டய கல்வியினை பெறும் காலம் வரை

அவர்களது வங்கி கணக்கிற்கு மாதந்தோறும் ரூ.1000/- நேரடியாக செலுத்தப்படுகிறது. இத்திட்டம் பெண்கள் தங்களது உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புகள் தொடர்பாக உறுதியான முடிவினை எடுக்க உதவுவதோடு, குழந்தை திருமணம், இளவயது கர்ப்பம், தொடர் கருக்கலைப்பு போன்ற பொறிகளில் மாட்டிக் கொள்ளாமல் தங்களது திருமண வயது, வாழ்க்கைத் துணை, தொழில் ஆகியவற்றை தேர்வு செய்ய வழி வகுக்கிறது. இதன் மூலம் பெண்கள் தொழில் முனைதல் மற்றும் வேலை வாய்ப்புகள் பெற்று பொருளாதார முன்னேற்றம் அடைவர்.

பெண்கள் மற்றும் திருநங்கைகளுக்கு **அரசு பேருந்துகளில் இலவச பயணம் (விடியல் பயணம்)** மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டதால், அவர்கள் பொருளாதார ரீதியாக பிறரை சார்ந்திராமல் பயணம் மேற்கொண்டு, பள்ளிகள், கல்லூரிகள், பயிற்சி மையங்கள் மற்றும் பணிபுரியும் இடங்களுக்கு செல்ல வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ் நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனம் **"தோழி"** என்ற நிறுவனப் பெயருடன் அமைக்கப்பட்டு, பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் அதிக அளவில் பணிபுரியும் மகளிர் விடுதிகளை உருவாக்குகிறது. இதன் மூலம் பணிபுரியும் மகளிர் தங்கள் பணியினை தொடரவும், பொருளாதார முன்னேற்றம் அடையவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. நலிவடைந்த பிரிவை சேர்ந்த பெண்கள் தாம் விடுபட்ட கல்வியை தொடரவும், திறன் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்புக்கான பயிற்சிகளைப் பெறவும் தற்போது, தமிழ்நாட்டில் ஆறு சேவை இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன. குடும்பத்தில் பொது இடங்களில் மற்றும் சமுதாயத்தால் வன்முறையால் பாதிப்படைந்த பெண்களை அரவணைத்து பாதுகாக்க பெண்கள் உதவி எண், ஒருங்கிணைந்த சேவை மையம் மற்றும் குறுகிய கால இல்லங்கள் (சக்தி சதன்) செயல்பட்டு வருகின்றன. இவ்வாறான இல்லங்கள் மூலம் பெண்களுக்கு

தங்குமிடம், மனநல ஆலோசனை உடலியல், சமூக, சட்ட மற்றும் பொருளாதார உதவிகள் வழங்கப்படுகின்றன.

இத்துறையின் கீழ் இயங்கும் 99 (98 பெண்கள்+ 1 திருநங்கையர்) **தையல் தொழிற் கூட்டுறவு சங்கங்களில்** 84,400 பெண் உறுப்பினர்கள், பள்ளி குழந்தைகளுக்கு இலவச சீருடை தைத்து வழங்கும் பணியினை செய்து தங்களது வாழ்வாதாரத்தை பெறுகின்றனர்.

பெண்களின் உரிமைகளை நிலை நாட்டுவதற்காக, பல்வேறு நலச்சட்டங்களான வரதட்சணை தடுப்பு சட்டம் 1961 மற்றும் விதிகள் 2004, குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாப்பு சட்டம் 2005 மற்றும் விதிகள் 2006, பணியிடங்களில் பெண்களுக்கெதிரான பாலியல் துன்புறுத்தல்கள் (தடுத்தல், தடை மற்றும் தீர்வு) சட்டம் 2013, தமிழ்நாடு பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான

விடுதிகள் மற்றும் இல்லங்களை முறைப்படுத்துதல் சட்டம் 2014, அதன் விதிகள், 2015 ஆகியன சமூக நலத்துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பெண் குழந்தைகளின் நலனை பாதுகாக்கவும் பெண் சிசு கொலையை தடுக்கவும், உன்னதமான திட்டங்களான தொட்டில் குழந்தை திட்டம், முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்பு திட்டம் மற்றும் குழந்தை திருமண தடைச் சட்டம் 2006 ஆகியன செயல்படுத்தப்படுகின்றன.

திருநங்கையர் சமூக பொருளாதார முன்னேற்றம் பெற **திருநங்கையர் நல வாரியம்** அமைத்ததில் தமிழ் நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. இவ்வாரியத்தின் மூலம் அடையாள அட்டை வழங்குதல், ஓய்வூதியம் வழங்குதல் மற்றும் சுயவேலை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொள்ள நிதியுதவி வழங்குதல் போன்ற நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றது.

மூத்த குடிமக்களின் நலனை பேணுவதில் தமிழ் நாடு அரசு உறுதி பூண்டுள்ளது. மூத்த குடிமக்களுக்கு ஓய்வூதியம் வழங்கியதில் தமிழ் நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. இந்திய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட செயலாக்க அமைச்சகத்தால் வெளியிடப்பட்டுள்ள "இந்தியாவில் முதியோர்–2021" அறிக்கையின்படி தமிழ்நாட்டின் மக்கட்தொகையில், கேரளாவுக்கு அடுத்தபடியாக இந்தியாவிலேயே அதிகமாக 13.6% முதியோர் உள்ளனர்.

பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்கு தீர்வு காணும் விதமாக 2008–ஆம் ஆண்டு சட்டரீதியாக ஏற்படுத்தப்பட்ட அமைப்பே **தமிழ் நாடு மகளிர் ஆணையம்** ஆகும்.

கைம்பெண்கள், கைவிடப்பட்டவர்கள் மற்றும் திருமணமாகாத பெண்கள் நலனுக்காக 2022–ஆம் ஆண்டில் **தமிழ் நாடு கைம்பெண்கள் மற்றும்**

**ஆதரவற்ற மகளிர் நல வாரியம்** புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் இயக்குநரகம்**

குழந்தைகளுக்கான ஊட்டச்சத்து குறைபாடு எப்போதுமே தேசிய அளவில் நடவடிக்கை எடுக்க வேண்டிய பொருளாக இருந்து வருகிறது. அரசினால் அவ்வப்போது பல்வேறு உயர்மட்ட சுகாதார திட்டங்கள் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1974–ஆம் ஆண்டில், குழந்தைகளுக்கான நன்கு வரையறுக்கப்பட்ட தேசியக் கொள்கை வடிவமைக்கப்பட்டது. இந்தக் கொள்கையின்படி, ஒரு முழுமையான மையப்படுத்தப்பட்ட பல்நோக்கு திட்டத்தைத் தொடங்க முடிவு செய்யப்பட்டது. இந்த முடிவு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் (ICDS) திட்டத்தை உருவாக்க வழிவகுத்தது. ஒன்றிய அரசின் மிகவும் மதிப்புமிக்க மற்றும் முதன்மையான தேசிய ஊட்டச்சத்து திட்டங்களில் ஒன்றான இந்தத்

திட்டம் 2 அக்டோபர் 1975 இல் 33 வட்டாரங்களில் (4 கிராமப்புறம், 18, நகர்ப்புறம், 11 பழங்குடியினர்) தொடங்கப்பட்டது. மேலும், ஒவ்வொரு ஆண்டும் தொடர்ச்சியாக, இது படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டது.

தமிழ்நாட்டில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தில், 28.67 இலட்சம் நேரடிப் பயனாளிகள் உள்ளனர். 54,449 மையங்கள் (குழந்தைகள் மையங்கள் 49,509 மற்றும் 4,940 குழந்தைகள் குறு மையங்கள்) மூலம் சுகாதாரச் சேவைகள், எடை கண்காணிப்பு, ஆலோசனை போன்றவற்றை இவர்கள் பெற்று வருகிறார்கள். மேலும், தமிழ்நாட்டில் 434 குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகங்கள் மூலம் இத்திட்டம் செயல்படுகிறது.

**ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகளின் நன்மைகள் மற்றும் தாக்கம்**

- ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் மாநிலம் முழுவதும் ஊட்டச்சத்து

குறைபாட்டினை போக்குவதில் முக்கியப் பங்காற்றுகிறது.

- இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு குழந்தையும் இலவச ஆரம்பக் கல்விக்கான அணுகலைப் பெற்று வருகின்றனர். இது குழந்தைகளின் முழுமையான வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானது.

தமிழ் நாடு அரசால் ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளின் முழுமையான உடல், உளவியல், அறிவாற்றல் மற்றும் உணர்ச்சி வளர்ச்சி உறுதி செய்யப்படுகிறது. மேலும், 3 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு சிறந்த ஆரம்பகால குழந்தைப் பராமரிப்பு, மேம்பாடு மற்றும் கற்றல் வளர்இளம் பெண்கள் மற்றும் தாய்மார்கள் பராமரிப்பு போன்றவற்றை இத்திட்டம் உறுதி செய்கிறது.

**குழந்தைகள் நலன் மற்றும் சிறப்பு சேவைகள் இயக்குநரகம்**

இடர்பாடான சூழல்களில் உள்ள குழந்தைகளின் பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் மறுவாழ்வுக்கான

முன்முயற்சிகளை எடுப்பதில் தமிழ் நாடு அரசு வியக்கத்தக்க வரலாற்றைக் கொண்டுள்ளது. நமது மாநிலம் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015–ல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளை நிறைவேற்றக் கூடிய வலிமையான கட்டமைப்பு, செயல்படுத்தும் திறன் மற்றும் கண்காணிப்பு அமைப்பினை உருவாக்கியுள்ளது.

குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில், ஒவ்வொரு குழந்தையும் சிறந்த சூழலில் வளர்ந்து தங்களை மேம்படுத்திக் கொள்ள வழிவகைகள் செய்யப்பட்டுள்ள போதும், குழந்தைகளை அவர்களது குடும்பத்தினருடனேயே வளர்வதற்கு அனைத்து முயற்சிகளையும் முதன்மையாக மேற்கொள்ளப்படுகிறது. குழந்தைகளை பராமரிக்க எவரும் இல்லாத சூழலில் இறுதி வாய்ப்பாக குழந்தைகள், நிறுவனத்தில் வைத்து பராமரிக்கப்படுகின்றனர். அதன்படி குழந்தை தத்தெடுப்பு, வளர்ப்பு, பராமரிப்பு மற்றும் நிதி ஆதரவு

திட்டங்களுக்கு அரசு முக்கியத்துவம் அளிப்பதன் வாயிலாக அன்பும், குடும்ப அரவணைப்பும் கூடிய சூழலில் குழந்தைகள் குடும்பத்தில் வளர ஏதுவாகிறது. பெற்றோரால் வளர்ப்பதற்கு திறனற்ற மற்றும் தகுதியற்ற குடும்ப சூழ்நிலைகளில் உள்ள குழந்தைகளை அடையாளம் கண்டு, அவர்களை வளர்ப்பு பராமரிப்பு திட்டத்தின் கீழ் தகுதியுள்ள குடும்பங்களில் வளர்வதற்கான செயல்திட்டங்கள் மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குழந்தைகளின் நலன் மற்றும் பாதுகாப்பிற்கான அரசின் உறுதிப்பாட்டை நிறைவேற்றியது மட்டுமின்றி, எந்தவொரு குழந்தையும் விடுபடாமல் ஒவ்வொரு குழந்தையும் பாதுகாக்கப்படும் வகையில், அடிப்படை கூறுகள் மற்றும் சமூகத்தில் மாறிவரும் சூழலுக்கு ஏற்ப குழந்தைப் பாதுகாப்பிற்கான பொருத்தமான அணுகுமுறையை உருவாக்குவதில் அரசு முனைப்புடன் உள்ளது.

*******

# அத்தியாயம்-2

## சமூக நலன்

சமுதாயத்தின் விளிம்பு நிலையில் உள்ள பிரிவினரான பெண்கள், குழந்தைகள், திருநங்கையர், மூத்தகுடிமக்கள் ஆகியோரது உரிமைகளை பாதுகாத்திட ஏற்படுத்தப்பட்டுள்ள சமூக சட்டங்களை நிறைவேறுத்தல் மற்றும் அவர்களுக்காக பல நல திட்டங்களை சமூக நலத் துறை செயல்படுத்துகிறது.

### 2.1 மகளிர் நலன்

மகளிர் நலனில் முதலீடு செய்வது என்பது அனைவரும் வளரக்கூடிய வளமான உள்ளடக்கிய சமுதாயத்தினை உருவாக்கும். பல்வேறு சமூக சட்டங்கள், மூவலூர் இராமமிர்தம் அம்மையார் புதுமை பெண் திட்டம், திருமண உதவித் திட்டங்கள், பணிபுரியும் மகளிர் விடுதிகள், மகளிர் தொழிற்கூட்டுறவு சங்கங்கள் மற்றும் சேவை இல்லங்கள் போன்ற நலத் திட்டங்களை செயல்படுத்தி மகளிருக்கு உரிய

அங்கீகாரம், உரிமைகள், அதிகாரம் மற்றும் பாதுகாப்பு அளித்து, வளமான சமுதாயத்தை காண தமிழ் நாடு அரசு விழைகிறது.

### 2.1.1 மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டம் ( புதுமைப் பெண் திட்டம்)

பெண்களின் முன்னேற்றத்திற்கு கல்வி என்பது ஒரு படிக்கல் ஆகும். அது அவர்களுக்கு அறிவு மற்றும் திறமைகளை வழங்குவதோடு, அவர்களின் கனவுகளை தொடர நம்பிக்கை அளிக்கிறது. பெண்கள் தங்கள் வாழ்க்கையைப் பற்றிய தெளிவான தேர்வுகளை மேற்கொள்ளவும், வேலைவாய்ப்புகளில் ஊக்கமுடன் பங்கேற்கவும், முடிவெடுக்கும் திறமைகளை வளர்க்கவும் உதவுகிறது. **பெண்களின் திருமணம் என்ற நிலைப்பாட்டிலிருந்து, கல்வி மூலம் பெண்களுக்கு அதிகாரமளித்தல் என்ற இலக்கை நோக்கி தமிழ் நாடு அரசு பயணம் செய்கின்றது.** எனவே, உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதந்தோறும் ஊக்கத்தொகை வழங்கி ஊக்குவிக்கும் வகையில்

புதுமைப் பெண் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. புதுமைப் பெண் திட்டமானது, இளவயது திருமணங்களை தடுப்பதற்கும், உயர்கல்வியில் மாணவிகளின் சேர்க்கை விகிதத்தை அதிகரிப்பதையும், இடைநிற்றல் இன்றி அவர்களின் உயர்கல்வியை நிறைவு செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டமானது 6 முதல் 12ம் வகுப்பு வரை அரசுப் பள்ளியில் பயின்று உயர்கல்வியை தொடரும் மாணவிகளை இலக்காகக் கொண்டு செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டமானது, 2024-2025-கல்வியாண்டு முதல், அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ்வழிக் கல்வியில் 6-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை பயின்று உயர்கல்வி பயிலும் அனைத்து மாணவிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

### திட்டத்தின் நோக்கங்கள்

- பெண்கள் உயர் கல்வி பெறுவதை ஊக்குவித்தல் மற்றும் உயர்கல்வியை தொடர உந்துதலை அளிப்பதன் மூலம் சமூக பொருளாதார ரீதியாக நல்ல அடித்தளம் அமைத்தல் மற்றும் பாலின சமத்துவத்தை ஏற்படுத்துதல்.

- புதுமைப் பெண் திட்டத்தின் மூலம் பெண்களுக்கான தொழில் வாய்ப்புகளை அதிகரித்து, அதில் பங்கேற்க செய்தல்.

- பெண் குழந்தைகளின் இடைநிற்றல் விகிதத்தை தடுத்து, உயர் கல்வியினைத் தொடர ஊக்குவித்தல்.

- பெண் குழந்தைகள் பொது நிகழ்வுகளில் பங்குபெறவும், வேலை வாய்ப்புகளை அதிகரிக்கவும் உதவுதல்.

- பெண்களுக்கு சமூக மற்றும் பொருளாதார ரீதியாக அதிகாரமளித்தலை உறுதி செய்தல்.

**திட்டத்தின் பலன்**

மாணவிகளின் உயர்கல்வியினைத் தொடர, ஒரு பயனாளிக்கு ஊக்கத் தொகையாக மாதம் ரூ.1,000/- வீதம் அவர்களின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படுகிறது. புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் பயன்பெறும் மாணவிகளின் கல்விப் பிரிவு வாரியான விவரங்கள் பின்வருமாறு:

**புதுமைப் பெண் திட்டம் – பாடப் பிரிவு வாரியான பயனாளிகள் விவரங்கள் (மார்ச் 2024)**

| வ. எண். | பாடப் பிரிவு | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | வேளாண்மை | 1467 |
| 2 | கலை & அறிவியல் | 205045 |
| 3 | தொடக்கக் கல்வியில் டிப்ளமோ | 409 |
| 4 | பொறியியல் | 28958 |
| 5 | மீன்வளம் | 62 |
| 6 | இந்திய மருத்துவம் | 539 |
| 7 | ஐ.டி.ஐ | 2821 |
| 8 | சட்டம் | 794 |
| 9 | மருத்துவ அறிவியல் | 24825 |
| 10 | இசை மற்றும் நுண்கலை | 62 |
| 11 | பாலிடெக்னிக் | 7208 |

| | | |
|---|---|---|
| 12 | பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருத்துவம் | 1496 |
| 13 | கால்நடை அறிவியல் மற்றும் உணவு அறிவியல் | 106 |
| | **மொத்தம்** | **273596** |

**2024–2025–ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.370.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 2.1.2 பெண்களுக்கு இலவச பேருந்து பயணம் (விடியல் பயணம்)

பாதுகாப்பான பயணம் என்பது பெண்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் சுகாதாரத் தேவைகளை அணுகுவதற்கான வாய்ப்பை அளிப்பதன் மூலம் பெண்களின் விருப்பங்களையும், தேவைகளையும், கட்டுப்படுத்தும் தடைகளை அகற்றி பெண்களின் முன்னேற்றத்தில் முக்கிய பங்காற்றுகிறது. இருப்பிடங்களுக்கு அப்பாற்பட்டு இருக்கும் வாய்ப்புகளைப் பெற உதவி செய்கிறது.

இலவச பேருந்து பயணமானது (**விடியல் பயணம்**) பெண்கள் பொருளாதார மற்றும் சமூக துறைகளில் ஆர்வத்துடன் பங்கேற்க உதவுவதுடன், தங்களது பயணத்திற்கு மற்றவர்களை சார்ந்து இருப்பதை குறைத்துள்ளது. மேலும், குடும்ப வருமானத்தில் பங்களிக்கவும், உயர்கல்வியை தொடரவும், தங்கள் பணியிடங்களுக்கு தாங்களாகவே பயணம் செய்யவும் வழிவகை செய்கிறது. இலவச பேருந்து பயணத்தால் கிடைக்கும் சேமிப்பு அவர்களின் உணவு, உடை, கல்வி போன்ற பிற அத்தியாவசிய தேவைகளுக்கு பயன்படுத்தவும் உதவுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 12.07.2021 முதல் 05.06.2024 வரை சுமார் 482.34 கோடி பாதுகாப்பான பயணங்களை பணிபுரியும் மகளிர் மற்றும் உயர்கல்வி படிக்கும் மாணவியர் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர். இந்த இலவச பயணத் திட்டத்தின் கீழ் இதுவரை 29.12 இலட்சம் இலவச பயணங்களை திருநங்கைகள் பயன்படுத்தி கொண்டுள்ளனர்.

### 2.1.3 திருமண உதவித் திட்டங்கள்

திருமணம் என்பது பெண்களின் முன்னேற்றத்திலும், அவர்களது வாழ்க்கையிலும், பல்வேறு வகையான தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு நிகழ்வாகும். இத்துறை குழந்தை திருமணம், இளவயது கர்ப்பத்தினை தடுப்பதற்காகவும் திருமண நிதியுதவித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மேலும், சமூக மாற்றத்தை எளிதாக்குவதற்கும், சமூக நீதியை மேம்படுத்துவதற்கும், இந்தத் திட்டங்களின் கீழ் நிதி உதவி வழங்குவதன் மூலம் கலப்புத் திருமணம் மற்றும் விதவை மறுமணம் ஆகியவை ஊக்குவிக்கப் படுகின்றன.

#### 2.1.3.1 டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம்

சாதி அடிப்படையிலான பாகுபாடுகளை ஒழிக்கவும், சமூகங்களுக்கு இடையே சமத்துவத்தை மேம்படுத்தவும், தமிழ் நாடு அரசு 1968–ஆம் ஆண்டு

முதல் கலப்புத் திருமண நிதி உதவித் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

**இத்திட்டத்தில் பயனடைவதற்கான தகுதிகள்**

1. ஆண்டு வருமான உச்ச வரம்பு இல்லை.
2. திருமணத்தின்போது மணமகள் 18 வயது பூர்த்தியடைந்திருத்தல் வேண்டும். உச்ச வயது வரம்பு இல்லை.
3. பிரிவு–I: கலப்புத் திருமணம் செய்து கொண்ட புதுமணத் தம்பதியரில் ஒருவர் ஆதி திராவிடர்/பழங்குடியினராகவும் மற்றொருவர் வேறு சாதியினராக இருக்க வேண்டும்.
4. பிரிவு–II: கலப்புத் திருமணம் செய்து கொண்ட புதுமணத் தம்பதியரில் ஒருவர் முற்பட்ட வகுப்பினராகவும் மற்றொருவர் பிற்படுத்தப்பட்ட/ மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினராகவும் இருக்க வேண்டும்.

**விண்ணப்பிக்க வேண்டிய கால அளவு**

திருமணமாகி இரண்டு ஆண்டுகளுக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

### 2.1.3.2 டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண உதவித் திட்டம்

ஏழை இளம் விதவைகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் நோக்கத்துடன் இத்திட்டம் 1975-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. விதவை மறுமணத்தின் மூலம் சமூகத்தில் அவர்களுக்கு கண்ணியம், மரியாதை மற்றும் அங்கீகாரத்தை உறுதி செய்கிறது.

**இத்திட்டத்தில் பயனடைவதற்கான தகுதிகள்**

1. மறுமணத்தின் போது மணமகளின் குறைந்தபட்ச வயது 20-ஆக இருக்க வேண்டும். மணமகனின் வயது 40-க்கு மிகாமல் இருக்க வேண்டும்.
2. வருமான உச்ச வரம்பு இல்லை.
3. விதவைச் சான்று, மறுமணம் செய்வதற்கான திருமண அழைப்பிதழ் மற்றும் வயதுச் சான்று ஆகியவற்றை சமர்ப்பிக்க வேண்டும்.

**விண்ணப்பிக்க வேண்டிய கால அளவு**

மறுமண நாளிலிருந்து 6 மாதத்திற்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

### 2.1.3.3 ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவை மகள் திருமண நிதியுதவித் திட்டம்

ஏழை விதவை தாய்மார்கள் தங்கள் பெண் குழந்தைகளின் திருமணத்தை நடத்திட நிதியுதவி வழங்கும் நோக்கத்துடன் இத்திட்டம் 1982–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

**இத்திட்டத்தில் பயனடைவதற்கான தகுதிகள்**

1. குடும்ப ஆண்டு வருமானம் ரூ.72,000/–க்கு மிகாமல் இருக்க வேண்டும்.
2. சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் விதவை உதவித் தொகை பெறுபவர்களுக்கு விதவைச்சான்று, வருமானச் சான்று தேவையில்லை.
3. மணப்பெண்ணுக்கு 18 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும். இத்திட்டத்தில் பயன்பெறுவதற்கு உச்ச வயது வரம்பு ஏதும் இல்லை.

**விண்ணப்பிக்க வேண்டிய கால அளவு**

விண்ணப்பங்களை திருமணத்திற்கு 40 நாட்களுக்கு முன்பாக அளிக்கப்பட வேண்டும். சிறப்பு நேர்வுகளில், தக்க காரணங்கள் இருந்தால், திருமணத்திற்கு முதல் நாள் வரை மனுக்களை ஏற்றுக்கொள்ளலாம்.

### 2.1.3.4 அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண உதவித் திட்டம்

ஆதரவற்ற பெண்கள் திருமணம் செய்து கொள்ள உதவும் வகையில் 1985–ஆம் ஆண்டு இத்திட்டம் தொடங்கப்பட்டது.

**இத்திட்டத்தில் பயனடைவதற்கான தகுதிகள்**

1. ஆதரவற்ற பெண்ணாக இருத்தல் வேண்டும்.
2. ஆண்டு வருமான உச்ச வரம்பு இல்லை.
3. திருமணத்தின் போது மணப்பெண் 18 வயதினை நிறைவு செய்திருக்க வேண்டும். உச்ச வயது வரம்பு இல்லை.

4. சட்டமன்ற உறுப்பினர் / பாராளுமன்ற உறுப்பினரிடமிருந்து ஆதரவற்றோர் சான்று பெற்று வழங்கலாம் அல்லது தாய், தந்தை இறப்புச் சான்று வழங்க வேண்டும்.

**விண்ணப்பிக்க வேண்டிய கால அளவு**

திருமணத்திற்கு 40 நாட்களுக்கு முன்பு விண்ணப்பிக்க வேண்டும். சிறப்பு நேர்வுகளில், தக்க காரணங்கள் இருந்தால், திருமணத்திற்கு முதல் நாள் வரை மனுக்களை ஏற்றுக்கொள்ளலாம்.

**மேற்காணும் நான்கு திருமண நிதியுதவித் திட்டங்களுக்கு 2024-2025-ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.98.16 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.1.4 சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு விலையில்லா தையல் இயந்திரம் வழங்கும் <u>திட்டம்</u>

சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு விலையில்லா தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்,

சமூக நலத்துறையில் நீண்ட காலமாக நடைமுறையில் உள்ளது. இது விதவைகள், ஆதரவற்ற பெண்கள், கணவரால் கைவிடப்பட்ட பெண்கள், உடல் ஊனமுற்ற ஆண் மற்றும் பெண் மற்றும் சமுதாயத்தில் நலிவுற்ற பெண்களுக்கு உதவிகரமாக உள்ளது. இத்திட்டம், பெண்கள் சுய தொழில் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்திற்காக வருமானம் ஈட்டும் நிலையை மேம்படுத்த வழிவகை செய்கிறது.

இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு ஆண்டும் பயனாளிகளுக்கு மோட்டர் பொருத்தப்பட்ட இலவச தையல் இயந்திரங்கள் அரசால் வழங்கப்பட்டு வருகிறது. 2023-24-ஆம் ஆண்டில் மாண்புமிகு அமைச்சரின் அறிவிப்பின் கீழ் மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் மற்றும் நவீன உயர்ரக தையல் இயந்திரங்கள் என இரண்டு வகையான தையல் இயந்திரங்கள் ரூ.2.08 கோடி செலவினத்தில் 2412 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

**2024–25–ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.2.08 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**2.1.5 மகளிர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்**

பெண்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக, 99 மகளிர் தையல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் சமூக நல ஆணையர் கட்டுப்பாட்டிலும், 25 இணை உணவு தயாரிப்போர் மகளிர் தொழிற்கூட்டுறவு சங்கங்கள் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட இயக்குநர் மற்றும் குழும இயக்குநர் கட்டுப்பாட்டிலும் செயல்படுகின்றன.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் செயல்படும் மகளிர் தொழிற் கூட்டுறவு சங்கங்களில் 18 வயது முதல் 40 வயது நிரம்பிய வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள தையல் பயின்ற பெண்கள் உறுப்பினர்களாகலாம்.

இம்மகளிர் தையற் தொழிற் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் மூலம் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் மதிய உணவு உண்ணும் மாணவ / மாணவியர்களுக்கு நான்கு இணை சீருடைகள் தைக்கப்படுகின்றன. மேலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறைகளின் கீழ் இயங்கும் பள்ளி, மாணவ / மாணவியர்களுக்கும் நான்கு இணை சீருடைகள் தைத்து வழங்கப்படுகின்றன.

**கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் அவற்றில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை விவரம்:-**

| வ. எண் | கூட்டுறவுச் சங்கங்கள் | சங்கங்களின் எண்ணிக்கை | உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | மகளிர் தையல் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் | 99 | 84,400 |
| 2. | இணை உணவு தயாரிப்போர் மகளிர் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் | 25 | 625 |
| | **மொத்தம்** | **124** | **85,025** |

2023 – 2024–ஆம் கல்வியாண்டில் 41.22 இலட்சம் பள்ளிக் குழந்தைகளுக்கு நான்கு இணை சீருடைகள் தைத்து வழங்கப்பட்டுள்ளன. இதற்கான தையல் கூலி ரூ.97.28 கோடி பள்ளிக் கல்வித்துறை மூலம் வழங்கப்பட்டுள்ளது.

### 2.1.6 பணிபுரியும் மகளிருக்கான விடுதிகள்

பெண்களுக்கான பணிவாய்ப்பு உள்ள நகர்புறம், புறநகர் அல்லது கிராமப்புறங்களிலுள்ள பணிபுரியும் பெண்களுக்கு பாதுகாப்பான மற்றும் வசதியான தங்குமிடங்கள் கிடைப்பதை மேம்படுத்துவதே திட்டத்தின் நோக்கமாகும். இந்த தேவையை பூர்த்தி செய்ய தமிழ்நாடு முழுவதும் பணிபுரியும் மகளிர் விடுதிகளை அரசு செயல்படுத்தி வருகிறது. பணிபுரியும் பெண்களின் நலனுக்காக நவீன வசதிகள் மற்றும் பாதுகாப்பு வசதிகளுடன் மேம்படுத்தி செயல்படுத்திட, துறையால் நடத்தப்படும் 10 மகளிர் விடுதிகள், தமிழ் நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. பெருமளவில் பெண்கள்

வேலையில் சேரவும், பொருளாதார சுதந்திரம் பெறவும் ஊக்குவிக்கும் வகையில் அனைத்து மாவட்டங்களிலும் பணிபுரியம் மகளிர் விடுதிகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 2.1.6.1 தமிழ் நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனம் (TNWWHCL)

தமிழ் நாடு பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனம், சிறப்பு நோக்க வாகனமாக (SPV) நிறுவன சட்டம் 2013ன் கீழ் நிறுவப்பட்டு, பொதுத் துறை நிறுவனமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. பணிபுரியும் பெண்கள் விடுதிகள், குழந்தை காப்பகங்கள், முதியோர் இல்லங்கள், குழந்தை பராமரிப்பு இல்லங்கள் போன்ற திட்டங்களின் உட்கட்டமைப்பு மேம்பாடு, மேலாண்மை மற்றும் பராமரிப்பு மேற்கொள்வது இந்நிறுவனத்தின் நோக்கமாகும். பாதுகாப்பான மற்றும் வசதியான தங்குமிடத்தை நியாயமான வாடகை கட்டணத்தில் **"வீடு போன்ற விடுதி"** என விடுதிகளில் வசதிகளை வழங்குவது இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

முதற்கட்டமாக, திருச்சிராப்பள்ளி, கூடுவாஞ்சேரி, தாம்பரம் ஆகிய மூன்று இடங்களில் ரூ.31.07 கோடி செலவினத்தில் 687 பணிபுரியும் மகளிர் பயனடையும் வகையில் பணிபுரியும் மகளிர் விடுதிகள் கட்டடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 458 பணிபுரியும் மகளிருக்கு பாதுகாப்பான தங்குமிட வசதிகளை வழங்குவதற்காக 7 இடங்களில் ரூ.4.21 கோடி செலவினத்தில் பணிபுரியும் மகளிர் விடுதிகள் மறுசீரமைக்கப்பட்டுள்ளன. இவ்விடுதிகள், 13.07.2023 முதல் செயல்பாட்டில் உள்ளன. இவ்விடுதிகளில் பயோமெட்ரிக் நுழைவு, கண்காணிப்பு கேமிரா, 24X7 பாதுகாப்பு, வைஃபை, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், இணையதள முன்பதிவு, கொதிநீர் கலன், தினசரி அறை பராமரிப்பு, சலவை இயந்திரம், வாகன நிறுத்துமிடம் போன்ற மேம்படுத்தப்பட்ட வசதிகளுடன் செயல்படுகின்றன. இவ்விடுதிகளின் அனைத்து பாரமரிப்புகளும் புறசேவை மேலாண்மை நிறுவனங்களின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன்,

தங்கியிருப்பவர்களுக்கு உணவு வழங்குவோர் மூலம் நியாய விலையில் உணவு வழங்கப்படுகிறது.

இரண்டாம் கட்டமாக, ஓசூர், திருவண்ணாமலை மற்றும் புனித தோமையார் மலை (செங்கல்பட்டு) ஆகிய 3 இடங்களில் ரூ.35.86 கோடி மதிப்பீட்டில் 432 பணிபுரியும் பெண்கள் பயன்பெறும் வகையில், பணிபுரியும் மகளிர் விடுதிகள் நிறுவனம் மூலம் புதிய பணிபுரியும் மகளிர் விடுதிகள் கட்டபட்டு வருகின்றன.

2024-2025 ஆம் ஆண்டில் சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய முக்கிய நகரங்களில் ரூ.26.00 கோடி மதிப்பீட்டில் 345 பணிபுரியும் மகளிர் பயன்பெறும் வகையில் புதிய "தோழி" தங்கும் விடுதிகள் கட்டப்படவுள்ளன.

### 2.1.7 சக்தி இயக்கம்

**"சக்தி இயக்கம்"** என்பது பெண்களுக்கான பாதுகாப்பு மற்றும் அதிகாரம் வழங்குதல் ஆகியவற்றை உறுதி செய்யும் செயல்திட்டமாகும். இது ஒன்றிய

அரசால் 15–வது நிதிக் குழு மானியத்தின் மூலம் **பாலின சமத்துவத்தை உருவாக்கும்** ஒருங்கிணைந்த குடையின் கீழ் இயங்கும் திட்டமாகும்.

**சக்தி இயக்கத்தின் உப திட்டங்கள்**

சக்தி இயக்கம் பெண்களுக்கு பாதுகாப்பு (சம்பல்) மற்றும் பெண்களுக்கு அதிகாரம் அளித்தல் (சமர்த்தியா) ஆகிய இரண்டு உப திட்டங்களை கொண்டுள்ளது.

ஒருங்கிணைந்த சேவை மையம், மகளிர் உதவி எண்.–181, பெண் குழந்தைகளை பாதுகாப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் மற்றும் மகளிர் நீதிமன்றங்கள் ஆகிய பெண்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் திட்டங்கள் இதில் அடங்கியுள்ளன. குறுகிய கால தங்கும் விடுதி (உஜ்வாலா மற்றும் சுவதார் கிரக்), பணியுரியும் மகளிர் விடுதி, மகப்பேறு உதவி திட்டம், தேசிய குழந்தை காப்பகத் திட்டம், பாலின பட்ஜெட் மற்றும் மகளிர் அதிகாரம் அளித்தலுக்கான மையம்

(சங்கல்ப்) ஆகியவை மகளிருக்கு அதிகாரம் வழங்குதலுக்கான உப திட்டங்களாகும்.

**சக்தி இயக்க நோக்கங்கள்**

- வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உடனடி ஆதரவு, உதவி மற்றும் முழுமையான தொடர் கவனிப்பு.
- பாதிக்கப்பட்ட பெண்களை மீட்டு, பாதுகாப்பு மற்றும் மறு வாழ்வு அளித்தல்.
- அரசு நலத் திட்டங்கள் மற்றும் சமூக தீமைகளுக்கு எதிரான சட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
- பல்வேறு திட்டங்கள் மற்றும் சட்டங்கள் குறித்து பணியாளர்களுக்கு பயிற்சிகள் வழங்குதல்.
- பெண் குழந்தைகளை கருவில் அழிக்கும் முறைகளை ஒழித்து, அவர்களின் வாழ்வு பாதுகாப்பு, கல்வி மற்றும் வளர்ச்சிக்கு உதவுதல்
- பொது மக்களிடையே பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள் சம்மந்தமான நேர்மறையான நடத்தை மாற்றங்களுக்கான விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.

### 2.1.7.1 பெண் குழந்தைகளை காப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டம் (SGEG)

பெண் குழந்தைகளின் பாலின விகிதம் குறைந்து வருவதை தடுப்பதற்காக ஒன்றிய அரசால் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம், பெண் குழந்தைகளின் கல்வி பாதுகாப்பு மற்றும் உயிர் வாழ்தலை உறுதி செய்ய தொடங்கப்பட்டது. குறைந்து வரும் பாலின விகிதம் என்பது பெண் குழந்தைகளின் பாலினத்தை கருவிலே கண்டறிந்து அழிப்பது மற்றும் பிறந்தவுடன் பெண் குழந்தைகள் கொல்லப்படுவதன் பிரதிபலிப்பாகும்.

**திட்டத்தை செயல்படுத்துதல்**

2022-23-ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டத்தில் பெண் குழந்தைகளுக்கான திறன் மேம்பாடு, சிறந்த எதிர்காலத்திற்கான தொழில் ஆலோசனை, சிறுமிகளிடையே விளையாட்டு திறமைகளை அடையாளம் காண்பது போன்ற வாய்ப்புகள் உள்ளடக்கி **"சக்தி இயக்கம்"** திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில்

அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டம் குறித்து பொதுமக்களிடையே அனைத்து ஊராட்சிகள், வட்டாரங்கள் மற்றும் மாவட்டங்களில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மாவட்டங்களுக்கான திட்ட நிதி ஒதுக்கீடு**

- பிறப்பு பாலின விகிதம் 918 க்கும் குறைவாக(தேசிய சராசரியை விட குறைவு) உள்ள மாவட்டங்களுக்கு ஆண்டுக்கு ரூ.40 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

- பிறப்பு பாலின விகிதம் 918 முதல் 952 வரை (உலக சுகாதார நிறுவன அறிக்கையின் படி நிலையான பிறப்பு பாலின விகிதம்) உள்ள மாவட்டங்களுக்கு ஆண்டுக்கு ரூ.30 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது

- பிறப்பு பாலின விகிதம் 952-க்கும் அதிகமாக (உலக சுகாதார நிறுவன அறிக்கையின்படி இயற்கைக்கான சர்வதேச தரத்தை விட குறைவான பிறப்பு பாலின விகிதம்) உள்ள

மாவட்டங்களுக்கு ஆண்டுக்கு ரூ.20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படுகிறது

இத்திட்டத்தின் கீழ் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

- நோக்குதல் மற்றும் உணர்திறன் உருவாக்கம்
- தகவல் தொடர்பு கல்வி சாதனங்கள்
- வெளிபுற செயல்பாடுகள்
- திறன் மேம்பாட்டு பயிற்சி
- திறமையை உருவாக்குதல்
- உயர் கல்வி மற்றும் தொழில் வழிகாட்டுதல்
- கவனம் மற்றும் பாதுகாப்பு குறித்த தற்காப்பு பயிற்சி
- கண்காணிப்பு மற்றும் ஆவணப்படுத்துதல்

**மாநில மற்றும் மாவட்ட அளவிலான செயற்குழு**

தலைமைச் செயலாளர் அவர்களை தலைமையாகக் கொண்டு மாநில செயற்குழு வருடத்திற்கு ஒரு முறையும், மாவட்ட ஆட்சியர்களை தலைமையாகக் கொண்டு, மாவட்ட செயற்குழு கூட்டங்கள் காலாண்டுக்கு ஒருமுறையும் கூடி,

சுகாதாரம், கல்வி போன்ற துறைகளின் திட்ட செயல்பாடுகளை கண்காணித்து திட்டத்தின் நோக்கங்களை அடைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**இத்திட்டம் குறித்தான விழிப்புணர்வு பணிகளை மேற்கொள்ள 2024-25-ஆண்டிற்கு மத்திய அரசால் ரூ.10.97 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.1.7.2 ஒருங்கிணைந்த சேவை மையம்

பெண்களின் தனிப்பட்ட மற்றும் பொது வாழ்வில், குடும்பம், சமுதாயம் மற்றும் பணியிடங்களில் வன்முறையால் பாதிக்கப்படும் பெண்களுக்கு ஒரு கூரையின் கீழ் ஒருங்கிணைந்த ஆதரவையும் உதவியையும் வழங்குவதற்காக, ஒன்றிய அரசின் 100% பங்களிப்புடன் மாநிலம் முழுவதும் ஒருங்கிணைந்த சேவை மையங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் மொத்தம் 48 ஒருங்கிணைந்த சேவை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. 38

மாவட்டங்களிலும் கூடுதலாக சென்னை, கோயம்புத்தூர், திண்டுக்கல், மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, தூத்துக்குடி, சேலம், திருப்பூர் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாநகராட்சிகளில் 10 ஒருங்கிணைந்த சேவை மையங்கள் செயல்படுகின்றன. ஒருங்கிணைந்த சேவை மையங்கள் பாலின அடிப்படையிலான துன்புறுத்தல் மற்றும் குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு தற்காலிக தங்குமிடம், மருத்துவ உதவி, உளவியல்-சமூக ஆதரவு, இலவச சட்ட உதவி, காவல்துறை உதவி மற்றும் ஆலோசனை சேவைகள் போன்ற சேவைகளை அளித்து வருகின்றது..

**2024-25-ஆம் நிதியாண்டில் ரூ.16.83 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**2.1.7.3 மகளிர் உதவி எண் -181**

நாடு முழுவதும் வன்முறையால் பாதிக்கப்பட்டு உதவி கோரும் பெண்களுக்கு ஆதரவு மற்றும்

தகவல்களை ஒற்றை பொதுவான இலவச தொலைதொடர்பு உதவி எண் 181 மூலம் 24 மணிநேர சேவைகளை 2018 முதல் வழங்கி வருகிறது. இது அவசரகாலங்களில் உதவி புரியும் ஆதரவு அமைப்பு, ஒருங்கிணைந்த சேவை மையங்கள் மற்றும் பிற உதவி எண்களுடன் ஒருங்கிணைந்து அவசர மற்றும் அவசரமற்ற தேவைகளில் பெண்களுக்கு உதவி வருகின்றது.

பெண்களுக்கு உதவும் சேவை மையங்கள் மற்றும் அரசு திட்டங்கள் குறித்த தகவல்களை அளித்து வருகின்றது. பாதிக்கப்பட்ட பெண்களுக்கு தேவையான மனநல ஆலோசனை, சட்ட உதவி மற்றும் காவல் உதவி, ஆகியவற்றை பெற வழிகாட்டுதல்களை வழங்குகின்றது.

**2024-25-ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்கு ரூ 77.56 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.1.7.4 பெண்களுக்கு அதிகாரமளிப்பதற்கான மாநில மற்றும் மாவட்ட மையங்கள் (HEW)

பெண்களுக்கான அதிகாரமளிக்கும் மையம் (HEW) என்பது ஒன்றிய, மாநில மற்றும் மாவட்ட அளவில் துறைகளுக்கிடையேயான பெண்களுக்கான திட்டங்களை ஒருங்கிணைத்து பெண்களின் வளர்ச்சிக்கு வழிகாட்டுதல் மற்றும் உதவுவதை நோக்கமாக கொண்டுள்ளது.

மாநில மையம், சக்தி இயக்கத்தின்கீழ் இயங்கும் அனைத்து திட்டங்களுக்கும் திட்ட மேலாண்மை அலகாக செயல்படுகின்றது. அனைத்து மாவட்டங்களிலும் பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கான மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன, இம்மையங்கள் ஒன்றிய மற்றும் மாநில அரசால் செயல்படுத்தப்படும் பல்வேறு பெண்களுக்கான திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அனைத்து துறைகளுடன் இணைந்து செயல்படும்.

2024–2025–ஆம் நிதி ஆண்டிற்கு ரூ.13.44 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.1.7.5 குறுகிய கால தங்குமிடம் (சக்தி சதன்)

இக்கட்டான சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்ட பெண்கள் கண்ணியத்துடனும், பாதுகாப்புடனும் வாழ்வதற்கு மகளிர் குறுகியகால தங்கும் இல்லங்கள் (சக்தி சதன்) என்ற திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்திற்கு ஒன்றிய மற்றும் மாநில அரசால் 60:40 என்ற விதம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. பாதிக்கப்பட்ட பெண்களுக்கு இத்திட்டத்தின் மூலம் உணவு, உடை, தங்குமிடம், ஆலோசனை, பயிற்சி, மருத்துவம் மற்றும் சட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. பாதிக்கப்பட்ட பெண்கள் 3–5 வருடம் வரை இல்லங்களில் தங்கலாம்.

ஒரு சக்தி சதன் இல்லத்தில் 50 பெண்கள் தங்கும் வகையில் தமிழ்நாட்டில் தன்னார்வ தொண்டு

நிறுவனங்களால் 33 இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன.

**2024–2025–ஆம் நிதி ஆண்டிற்கு ரூ.35.87 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.1.8 தமிழ் நாடு மாநில மகளிர் கொள்கை, 2024

மகளிருக்கான தனித்துவமான கொள்கையின் வாயிலாக சமூதாயத்தில் நிலவும் சவால்களான பாலின ஏற்றத்தாழ்வு, ஒரே மாதிரியான சமூக கருத்து, குடும்ப வன்முறை, இழிவு, பாகுபாடு ஆகியவற்றை எதிர்கொள்வதன் மூலம் சமூகத்தில் காணப்படும் இடைவெளியைக் குறைப்பதையே நோக்கமாக அரசு கொண்டுள்ளது. மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ் நாடு மாநில மகளிர் கொள்கை 21.02.2024 அன்று வெளியிடப்பட்டது.

பெண்கள் அதிகாரம் பெறுதல் அவரது உரிமைகளைப் புரிந்து கொள்ளுதல், தங்களது பொறுப்புகளை திறம்படச் செய்தல் ஆகியவை

இக்கொள்கையில் திட்டமிடப்பட்டுள்ளது. தகவல்கள் பெறுவதற்கான சரியான அணுகுமுறை மற்றும் அவர்களது செயல்திறன் பாதிக்கும் காரணிகளை கட்டுப்படுத்துதல் மூலம் முடிவெடுப்பதில் பெண்களுக்கு சுதந்திரத்தை இது அளிக்கிறது.

### 2.1.9 மகளிருக்கான சமூக சட்டங்கள்

மகளிரின் சட்டப்பூர்வ உரிமைகளை மேம்படுத்துவதிலும், இந்திய அரசியலமைப்பால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட நீதி, சுதந்திரம், சமத்துவம், மனித கண்ணியம் மற்றும் சகோதரத்துவம் ஆகியவற்றை ஒவ்வொரு பெண்ணும் அனுபவிக்கும் சமூகத்தை உருவாக்குவதிலும் சமூக சட்டங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்தச் சமூகச் சட்டங்களின் விதிகளை திறம்பட அமல்படுத்துவதன் மூலம் பெண்கள் தங்களை வளர்த்துக் கொள்ளவும், பெண்களாகவும், நாட்டின் குடிமக்களாகவும் தங்கள் விருப்பமான இலக்குகள் மற்றும் ஆர்வங்களை நனவாக்க உதவுகிறது.

வன்முறை மற்றும் சுரண்டல்களில் இருந்து பெண்களைப் பாதுகாப்பதற்காகவும், அவர்களின் சட்ட உரிமைகளை மேம்படுத்துவதற்காகவும் பின்வரும் சமூக சட்டங்களை இத்துறை செயல்படுத்துகிறது

1. வரதட்சணை தடைச் சட்டம் 1961 மற்றும் மாநில விதிகள் 2004.
2. குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் 2005மற்றும் விதிகள் 2006.
3. பணியிடங்களில் பெண்களுக்கு ஏற்படும் பாலியல் துன்புறுத்தல் (தடை, தடுப்பு மற்றும் தீர்வு) சட்டம் 2013 மற்றும் விதிகள் 2013
4. தமிழ் நாடு விடுதிகள் மற்றும் இல்லங்கள் (ஒழுங்குமுறை) சட்டம் 2014 மற்றும் மாநில விதிகள் 2015.

### 2.1.9.1 வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961

வரதட்சணை தடுப்புச் சட்டம் திருமணத்தின் போது அல்லது திருமணத்திற்கு முன் அல்லது

திருமண உறவின் தொடர்ச்சியின் போது வரதட்சணை கொடுப்பதையோ வாங்குவதையோ தடை செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

வரதட்சணை கொடுப்பதையும் பெறுவதையும் தடுக்க 1961ல் வரதட்சணை தடுப்பு சட்டம் இயற்றப்பட்டது. வரதட்சணை என்ற தீய பழக்கத்தை தடுக்கும் விதமாக தண்டனையை அதிகரிக்கும் வகையில் 1984 மற்றும் 1986 ஆண்டுகளில் திருத்தியமைக்கப்பட்டது.

- வரதட்சணை தடுப்பு விதிகள், 2004–ன் பிரிவு 3(B)–ன்படி மாவட்ட சமூக நல அலுவலர்கள் வரதட்சணை தடுப்பு அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். சட்டத்தை திறம்பட செயல்படுத்த மாவட்ட சமூக நல அலுவலர்களுக்கு தேவையான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- காவல் துறை, நீதிமன்றம் மாவட்ட சமூக நல அலுவலர்களிடம் உண்மை அறிக்கையை

பெற்ற பிறகு வரதட்சணை வழக்கை பதிவு செய்கிறது.

- இந்த சட்டத்தின் கீழ் வரும் குற்றங்கள், பிடியாணையின்றி கைது செய்தலுக்குரிய குற்றங்கள் ஆகும். மேலும், பிணையில் வெளிவர முடியாத, சமரசமாக தீர்க்க இயலாத குற்றங்களாகும்.

**வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961 ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் விவரங்கள்**

| வ. எண் | விவரம் | ஜனவரி – 2022 முதல் டிசம்பர் – 2022 | ஜனவரி – 2023 முதல் டிசம்பர் –2023 |
|---|---|---|---|
| 1. | மாவட்ட சமூக நல அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் | 1454 | 1580 |
| 2. | சமூகமாக தீர்க்கப்பட்ட வழக்குகள் | 769 | 920 |
| 3. | காவல்துறைக்கு சமர்ப்பிக்கப்பட்ட வழக்குகள் | 327 | 521 |
| 4. | மாவட்ட சமூக நல அலுவலர்களிடம் நிலுவையில் உள்ள வழக்குகள். | 358 | 79 |

### 2.1.9.2 குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005

குடும்ப வன்முறை என்பது திருமணம் மற்றும் இணைந்து வாழ்வது போன்ற குடும்ப அமைப்புகளில் நடக்கும் வன்முறையாகும். பெண்களுக்கு எதிராக உடல், வாய்மொழி, உணர்வு, பொருளாதாரம், மதம், இனப்பெருக்கம், பொருளாதார மோசடி அல்லது பாலியல் துன்புறுத்தல் போன்ற பல வடிவங்களில் பொதுவாக நெருங்கிய துணைவர் மற்றும் அவரது உறவினர்களால் ஏற்படுத்தபடும் வன்முறை ஆகும்.

**இச்சட்டத்தின் சிறப்பு அம்சங்கள்**

- சட்டத்தின் கீழ் வழக்குகள் கூடுதலாகவோ அல்லது பிற வழக்குகள் மற்றும் சட்ட நடவடிக்கைகள் இரு தரப்பினரிடையே நிலுவையில் இருந்தாலும் வழக்கு தாக்கல் செய்யப்படலாம்.
- இந்தச் சட்டத்தில் உரிமையியல் மற்றும் குற்றவியல் விதிகள் இருந்தாலும், 60

நாட்களுக்குள் ஒரு பெண்ணுக்கு உடனடி உரிமையியல் தீர்வுகளைப் பெற உதவுகிறது.

- இந்தச் சட்டத்தின் கீழ் ஒரே வழக்கில் பல தீர்ப்புகளைப் பெறலாம்.
- வாய்மொழி மற்றும் உணர்வு ரீதியான துன்புறுத்தலுக்கும் இடர் உதவி பெறலாம்.
- ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர் இருவரும் அமர்வு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யலாம்.
- இந்தச் சட்டத்தின் கீழ் உள்ள குற்றங்கள் பிடியாணையின்றி கைது செய்தலுக்குரியவை மற்றும் பிணையில் வெளிவர முடியாத குற்றங்கள் ஆகும்.

**பாதுகாப்பு அலுவலர்கள்**

ஒவ்வொரு மாவட்டத்திலும் நியமிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அலுவலர் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு, விண்ணப்பம் செய்வதற்கான உரிமையைப் பற்றி தெரிவிக்கவும், மனு தாக்கல் செய்யவும், குடும்ப

வன்முறை நிகழ்வு அறிக்கையை தாக்கல் செய்து கீழ்கண்ட தீர்வுகள் பெறவும் உதவி செய்கின்றனர்:

- பாதுகாப்பு ஆணை
- நிதிசார் இடர் உதவிக்கான ஆணை
- காப்பு பொறுப்பு ஆணை
- இருப்பிட ஆணை
- இழப்பீடு ஆணை அல்லது
- இது போன்ற ஒன்றுக்கு மேற்பட்ட ஆணைகள் மற்றும்
- இலவச சட்ட சேவைகள்

**சேவை வழங்குபவர்கள்**

குடும்ப வன்முறைச் சட்டம் 2005ன் கீழ் அறிவிக்கப்பட்ட தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் சேவை வழங்குபவர்களாகச் செயல்படுகின்றன. பாதிக்கப்பட்ட பெண்கள், குடும்ப நிகழ்வு அறிக்கையை தாக்கல் செய்தல், குழந்தைகளுடன் குறுகிய கால

தங்குமிடங்களில் தங்கவைத்தல், அவர்களுக்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் தேவையிருப்பின் மருத்துவ சிகிச்சை பெறவும் உதவுகின்றன. தேவையின் அடிப்படையில் நிலையான வருமானத்திற்கான வேலை வாய்ப்பை பெறுவதற்கு அவர்கள் தொழிற் பயிற்சியையும் வழங்குகின்றனர்.

**குடும்ப வன்முறை தடுப்பு சட்டம், 2005–ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள்**

| வ. எண் | விவரம் | ஜனவரி –2022 முதல் டிசம்பர் – 2022 | ஜனவரி – 2023 முதல் டிசம்பர் – 2023 |
|---|---|---|---|
| 1. | பதிவு செய்யப்பட்ட வழக்குகள் | 6214 | 6125 |
| 2. | சட்ட நடவடிக்கைகளுக்கு விருப்பமில்லாத வழக்குகளின் எண்ணிக்கை | 2646 | 2980 |
| 3. | நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் | 2639 | 2934 |

| | | | |
|---|---|---|---|
| 4. | பாதுகாப்பு அலுவலர்களிடம் விசாரணையில் உள்ள வழக்குகள் | 729 | 211 |

### 2.1.9.3 தமிழ் நாடு பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் இல்லங்கள் (ஒழுங்குமுறை) சட்டம், 2014

பெண்கள் மற்றும் குழந்தைகள் தங்கும் விடுதிகள், இல்லங்களை ஒழுங்குபடுத்துதல் மற்றும் அவர்களுக்கு பாதுகாப்பான தங்குமிடத்தை உறுதி செய்யும் நோக்கத்துடன் தமிழ் நாடு விடுதிகள் மற்றும் இல்லங்கள் ஒழுங்குமுறை சட்டம் செயல்படுத்தப்படுகிறது.

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான விடுதி, தங்கும் இல்லம் அல்லது இல்லம் அமைக்க, பராமரிக்க அல்லது நடத்த விரும்பும் ஒவ்வொருவரும் உரிமம் கோரி மாவட்ட ஆட்சியரிடம் பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் ரூபாய் மூவாயிரம் மிகாமல் கட்டணத்துடன்

விண்ணப்பிக்க வேண்டும். 01.07.2022 முதல் அனைத்து தங்கும் விடுதிகளும், இல்லங்களும் https://tnswp.com–ல் இணையதள வாயிலாக விண்ணப்பிக்கலாம்.

உரிமம் பெற தவறும் எந்த நபரும், இச்சட்டத்தின் பிரிவு 5 அல்லது 6ன் கீழ் இரண்டாண்டுகள் வரை நீட்டிக்கக்கூடிய சிறை தண்டனையும் ரூபாய் ஐம்பதாயிரம் வரையிலான அபராதமும் விதிக்கப்படும்.

### 2.1.9.4 பணியிடத்தில் பெண்களுக்கு ஏற்படும் பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு, தடை மற்றும் தீர்வு ) சட்டம், 2013

பணியிடத்தில் பெண்களுக்கு ஏற்படும் பாலியல் துன்புறுத்தல்களால் அவர்களின் மனநலம், சுயமரியாதை மற்றும் பணியின் முன்னேற்றம் பாதிக்கின்றது. இச்சட்டம், 2013ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் உள்ளது. இச்சட்டத்தின் 5–வது பிரிவின் கீழ் மாவட்ட ஆட்சியர்கள் மாவட்ட

அதிகாரிகளாக தமிழ் நாடு அரசால் நியமிக்கப் பட்டுள்ளனர்.

10 பணியாளர்களுக்கு மேல் உள்ள அனைத்து பணியிடங்களிலும் இச்சட்டத்தின் பிரிவு 4–ன்படி உள்ளக புகார் குழுக்கள் அமைக்கப்படவேண்டும். மாவட்டத்தில் மாவட்ட சமூக நல அலுவலர் இச்சட்டத்தின் ஒருங்கிணைப்பு அலுவலர் ஆவார். மாவட்டத்தில் உள்ள அனைத்து அலுவலகங்களிலும் (அரசு மற்றும் தனியார்) உள்ளக புகார் குழுக்களை அமைக்குமாறு மாவட்ட ஆட்சியரால் செய்தித்தாள்களில் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. உள்ளக புகார் குழு அமைக்கத் தவறும் எந்தவொரு நிறுவனத்திற்கும் ரூபாய் ஐம்பதாயிரம் வரை அபராத்ததுடன் தண்டனை அளிக்க இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. நிறுவனத்தின் உரிமம் அல்லது பதிவை இரத்து செய்யவும், அரசு அல்லது உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. பணிபுரியும் அமைப்பு சாரா

பெண்களின் பாதுகாப்பிற்காக மாவட்ட ஆட்சியரால் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ளூர் புகார் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பணிபுரியும் பெண்களின் பாதுகாப்பிற்காக இச்சட்டத்தின் பிரிவு 6–ன்படி, 10 பணியாளர்களுக்கு குறைவாக உள்ள நிறுவனங்களில் பணியாளர்களின் புகார்கள் மற்றும் நிறுவனர் தலைவர் மீது ஏற்படும் புகார்கள் ஆகியவற்றை விசாரிப்பதற்காக உள்ளூர் புகார் குழு மாவட்ட ஆட்சியரால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து மாவட்டங்களிலும் உள்ளூர் புகார் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நிறுவனங்களிலும் பாதிக்கப்படும் பெண்கள் தங்களது பிரச்சனைகளை தெரிவிக்க புகார் பெட்டி வைப்பது அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இப்புகார் பெட்டியில் பெறப்படும் புகார்கள் உள்ளூர் புகார் குழுவினால் விசாரிக்கப்படும்.

### 2.1.10 தமிழ் நாடு மாநில மகளிர் ஆணையம்

பெண்களின் நலனை பாதுகாப்பதற்காக 1993–ஆம் ஆண்டு தமிழ் நாடு மாநில மகளிர் ஆணையத்தை அரசு அமைத்தது. அது முதற்கொண்டு மூன்றாண்டுக்கு ஒரு முறை புதிய உறுப்பினர்களுடன் ஆணையம் மறுசீரமைக்கப்பட்டு வருகிறது. ஒரு தலைவர், ஒரு உறுப்பினர் செயலர் மற்றும் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு அமைப்பாக ஆணையம் செயல்படுகிறது. தற்போதைய மகளிர் ஆணையம் 2022–ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டுள்ளது.

தற்போதைய ஆணையத்தின் குழும பணி நடைமுறையில் அதன் முயற்சிகள், அரசு மற்றும் அரசு சாரா அமைப்புகளுடன் இணைந்து பாலின சமத்துவத்தை வளர்ப்பதற்கும், பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதை உறுதி செய்வதற்கும் உள்ள தடைகளை படிப்படியாக நீக்கி வருகின்றது.

மகளிர் ஆணையம் பாதிக்கப்பட்ட பெண்கள் தங்களுக்கு கிடைக்க வேண்டியவற்றை இழத்தல், தங்களுக்கு எதிரான குற்றங்கள், பணியிடத்தில் துன்புறுத்தப்படுதல், அன்றாட வாழ்க்கையில் வீட்டிலும் மற்றும் பிற இடங்களிலும் எதிர்கொள்ளும் பிரச்னைகள் ஆகியவை குறித்து அளிக்கும் புகார் மனுக்கள் மீது தொய்வின்றி நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும் பெண்களின் உரிமைகளுக்காக பொது மக்களின் கவனத்தை ஈர்த்த பல சம்பவங்கள் தொடர்பாக தாமாக முன்வந்து விசாரணைகளை மேற்கொள்கிறது.

ஆணையத்தின் பணிகளுடன் தொடர்புடைய அனைத்து பங்குதாரர்களுக்கும் போதுமான கல்வி மற்றும் தகவல் பரிமாற்றத்திற்கு கருத்தரங்குகள், பயிலரங்குகள், சட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், பாலின பாகுபாடு குறித்த பயிற்சிகள் போன்றவற்றை பல்வேறு நிறுவனங்களுடன் இணைந்து ஏற்பாடு செய்து நடத்தி வருகிறது.

குடும்ப வன்முறை, சைபர் குற்றங்கள், வணிக ரீதியான பாலியல் சுரண்டலுக்கான மனித கடத்தல், தொழில் சார்ந்த பொருளாதார சுரண்டல்கள், நிதி துஷ்பிரயோகம் மற்றும் நாடு கடந்த பெண்களுக்கெதிரான குற்றங்கள் தொடர்பாக வளர்ந்து வரும் போக்கு குறித்த தேசிய மற்றும் சர்வதேச உரையாடலுக்கான மன்றத்தை உருவாக்க 11.12.2023 அன்று தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் ஒரு சர்வதேச மாநாட்டையும் ஏற்பாடு செய்து நடத்தியது. இந்த மாநாட்டில் 20க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து சட்ட அமலாக்க அதிகாரிகள், தொழில் வல்லுநர்கள், பயிற்சியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் ஒரு பொதுவான நோக்கத்திற்காக ஒன்றிணைந்து மாநில அரசுடன் கைகோர்த்து பெண்களுக்கெதிரான குற்றங்களை குறைப்பதற்கான நிபுணத்துவம் மற்றும் சிறந்த நடைமுறைகளை பரிமாறிக்கொண்டனர்.

**2024 – 2025–ஆம் ஆண்டு ரூ.60.82 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.1.11 கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியம்

தமிழ்நாட்டிலுள்ள கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், நலிவுற்ற பெண்கள், ஆதரவற்ற பெண்கள், முதிர்கன்னிகள் உள்ளிட்டோர் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சனைகளைக் களைந்து அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடவும், சமூகத்தில் அவர்கள் பாதுகாப்புடன் கண்ணியமான முறையில் வாழ்வதற்காகவும், செப்டம்பர் மாதம் 2022–ஆம் ஆண்டு "கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிர் நல வாரியம்" உருவாக்கப்பட்டது.

கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், நலிவுற்ற பெண்கள், ஆதரவற்ற பெண்கள் மற்றும் பேரிளம்பெண்கள் ஆகியோரின் வாழ்வாதாரத்தை முன்னேற்றும் நடவடிக்கையாக தொழிற் பயிற்சி, சுயதொழில் மூலம் அவர்கள்

வாழ்வினை மேம்படுத்துவது மற்றும் அவர்களின் பிள்ளைகளுக்கு உயர்கல்வி கற்பதற்கு நிதியுதவி அளிப்பது போன்ற இன்னபிற திட்டங்கள் நடைமுறைபடுத்தப்பட உள்ளன.

**2024-2025-ஆம் ஆண்டு ரூ.106.43 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**2.2 குழந்தைகள் நலன்**

குழந்தைகள் ஒரு குடும்பத்தின், மாநிலத்தின் எதிர்காலம் மற்றும் சொத்து ஆவர். குழந்தைகளின் முக்கியமாக, பெண் குழந்தைகளின் பாதுகாப்பு, கல்வி, உடல் மற்றும் மன நலன்களை உறுதி செய்வதே மாநிலத்தின் அதிமுக்கியமான நோக்கமாகும். குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாக்க அரசு பல்வேறு முன்னெடுப்பு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

### 2.2.1 முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்

முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம், பெண் குழந்தைகளுக்கான அனைத்து நலத் திட்டங்களுக்கும் முன்னோடியாக உள்ளது. இத்திட்டம், பெண் சிசுக் கொலை தடுத்தல், குழந்தைத் திருமணத்தை தடை செய்தல் மற்றும் பெண் குழந்தைகளின் கல்வியை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**திட்டத்தின் நோக்கங்கள்**

- ஆண் குழந்தைகளை மட்டுமே விரும்பும் மனப்போக்கை மட்டுப்படுத்துதல்
- பெண்சிசுக் கொலையை தடுத்தல்
- குழந்தைத் திருமணங்களைத் தடை செய்தல்
- பெண் கல்வியை மேம்படுத்துதல்
- சிறு குடும்ப முறையை ஊக்குவித்தல்
- குழந்தைப் பாலின விகிதத்தை உயர்த்துதல்

| திட்டத்தின் வகைகள் | திட்டத்தில் பயன் பெற தேவையான தகுதிகள் |
|---|---|
| **திட்டம் – I**<br>ஒருகுடும்பத்தில் ஒரே ஒரு பெண் குழந்தை மட்டும் இருப்பின் அக்குழந்தையின் பெயரில் ரூ.50,000/- வைப்புத்தொகையாக முதலீடு செய்யப்படுகிறது.<br>குழந்தையின் 3 வயது நிறைவடைவதற்குள் இத்திட்டத்தில் விண்ணப்பிக்கவேண்டும்<br><br>**திட்டம் – II**<br>ஒரு குடும்பத்தில் இரண்டு பெண் குழந்தைகள் மட்டும் இருப்பின், ஒவ்வொரு பெண் குழந்தையின் பெயரிலும் தலா ரூ.25,000/- வைப்புத் தொகையாக முதலீடு செய்யப்படுகிறது.<br>இரண்டாவது குழந்தையின் வயது 3 நிறைவடைவதற்குள் இத்திட்டத்தில் விண்ணப்பிக்க வேண்டும் | • குடும்ப ஆண்டு வருமானம் 72,000/- க்குள் இருக்க வேண்டும்<br>• பெற்றோரில் ஒருவர் 40 வயதிற்குள் கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொண்டிருக்க வேண்டும்.<br>• குடும்பத்தில் ஒரே ஒரு பெண்குழந்தை /இரு பெண் குழந்தைகள் மட்டும் இருக்க வேண்டும். ஆண் குழந்தை இருக்ககூடாது. எதிர்காலத்தில் ஆண் குழந்தையை தத்தெடுக்கவும் கூடாது.<br>• விண்ணப்பிக்கும் போது குழந்தைகளின் பெற்றோர்/ பெற்றோரின் பெற்றோர் தமிழ்நாட்டில் 10 ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து வசிப்பவராக இருக்க வேண்டும்.<br>• அகதிகள் முகாம்களிலுள்ள இலங்கை தமிழ் பெண் குழந்தைகளுக்கும் இத்திட்டம் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது.<br>• பெண்குழந்தையின் 18 வயது நிறைவடைந்ததும், திரண்ட வட்டி விகிதத்துடன் கூடிய வைப்பு தொகை முதிர்வு தொகையாக பயனாளிக்கு உயர்கல்வி பயில வழங்கப்படுகிறது. |

**திட்டத்தின் பயனாளிகள்**

| பயனாளிகள் | 2023-24 ஆண்டு | | ஒட்டுமொத்தமாக 2023- 24 வரை | |
|---|---|---|---|---|
| | பெண் குழந்தைகள் எண்ணிக்கை (மார்ச் 2024 வரை) | தொகை (கோடியில்) | பெண் குழந்தைகள் எண்ணிக்கை | தொகை (கோடியில்) |
| வைப்பீடு தொகை | 36,800 | 92.00 | 11,19,560 | 1687.95 |
| முதிர்வுத் தொகை | 72,160 | 165.93 | 1,95,218 | 478.94 |

**2024-2025-ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.92.01 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.2.2 சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கான இல்லங்கள்

தனியார் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் நான்கு சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளைப் பராமரிக்கும் இல்லங்களுக்கு தமிழ் நாடு அரசு மானியம் வழங்குகிறது.

மாற்றுதிறனுடைய கைவிடப்பட்ட குழந்தைகள் மேற்கண்ட இல்லங்களில் பராமரிக்கப்படுகின்றனர். அவர்களைப் பராமரிக்க அரசு மானியம் வழங்குகிறது. தற்போது இந்த சிறப்பு இல்லங்களில் 129 குழந்தைகள் பராமரிக்கப்படுகின்றனர். ஒரு குழந்தைக்கு நாளொன்றுக்கு ரூ.120/- வீதம் சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளை பராமரிப்பதற்கு தொண்டு நிறுவனங்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது.

**2024-2025-ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.59.13 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**2.2.3 அரசு சேவை இல்லங்கள்**

தமிழ்நாடு அரசு, ஆதரவற்ற மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் ஏழை பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் விதவைகள் ஆகியோருக்காக செங்கல்பட்டு (தாம்பரம்), கடலூர், சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி மற்றும் சிவகங்கை

ஆகிய ஆறு மாவட்டங்களில் அரசு சேவை இல்லங்களை நடத்தி வருகிறது. இந்த சேவை இல்லங்கள் உள்ளுறைவோர்களுக்கு தங்குமிடம், உணவு, கல்வி, மருத்துவ வசதிகள், கல்விச் சுற்றுலா மற்றும் தொழிற் பயிற்சி ஆகியவற்றை வழங்குகின்றன. மேலும், ஆங்கில திறன் வளர்ப்பு, கணினிப் பயிற்சி, ஆலோசனை மற்றும் தொழில் வழிகாட்டுதல் ஆகிய வசதிகளும் சேவை இல்லங்களில் உள்ள உள்ளுறைவோர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், அரசு சேவை இல்லங்களில் தங்கி உயர்கல்வி பயிலும் மாணவிகளை ஊக்கப்படுத்திடும் வகையில், தொழில் சார் கல்வி பயின்றிட ரூ.50,000/- மற்றும் பட்டம்/பட்டயப் படிப்புகளுக்கு ரூ.30,000/-மும் அரசால் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. 2023-2024-ஆம் ஆண்டில், இந்த இல்லங்களில் 583 உள்ளுறைவோர்கள் பயனடைந்துள்ளனர்.

**2024-2025-ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.6.88 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.2.4 குழந்தை திருமண தடைச் சட்டம்-2006

குழந்தை திருமண தடைச் சட்டம் 2006 ஆம் ஆண்டு ஒன்றிய அரசால் இயற்றப்பட்டு 2009 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இச்சட்டத்தின்படி ஆண்களுக்கு 21 வயது குறைவாகவும், பெண்களுக்கு 18 வயது குறைவாகவும் இருந்து திருமணம் நடைபெற்றது என்று அறிய வந்தால் பிணையில் விடுவிக்க இயலாத குற்றமாகும். மேலும், இத்திருமணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்பதுடன் இரத்து செய்யப்பட கூடியதாகும்.

குழந்தை திருமண தடைச் சட்டத்தை வலுவாக செயல்படுத்திட மாவட்ட சமூக நல அலுவலர்களை குழந்தை திருமண தடுப்பு அலுவலர்களாக அரசு நியமித்துள்ளது. குழந்தை திருமண தடுப்பு

அலுவலர்கள் குழந்தை திருமணத்தை இரத்து செய்யுமாறு வழக்குகள் பதிவு செய்யலாம். மேலும், குழந்தை திருமணத்தால் பாதிக்கப்பட்ட பெண் குழந்தைகளுக்கு அவர்களது திருமணம் நடைபெறும் வரையிலும், குழந்தை திருமணத்தின் மூலம் பிறந்த குழந்தைகளுக்கும் பராமரிப்பு மற்றும் தங்குமிடம் வழங்கிட நீதிமன்றங்கள் மூலம் உத்தரவுகளைப் பெற்று தரலாம்.

18 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள், குழந்தை திருமணத்திற்கான ஒப்பந்தத்தில் ஈடுபட்டால் அவருக்கு கடுமையான சிறைத்தண்டனை விதிக்கப்படும். குழந்தை திருமணத்தை ஊக்குவிப்பவர், அனுமதிப்பவர், நடத்துபவர், வழிநடத்துபவர், தடுக்க தவறியவர் மற்றும் உறுதுணையாக இருப்பவர்களுக்கும் 2 ஆண்டுகள் வரை கடுமையான சிறைத்தண்டனை அல்லது ரூ.1,00,000/-(ஒரு இலட்சம்) அபராதம் தண்டனையாக விதிக்கப்படும்.

**குழந்தை திருமணங்களை தடுப்பதற்காக விழிப்புணர்வு ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்**

- குழந்தை திருமணங்களால் ஏற்படும் தீய விளைவுகள் மற்றும் இலவச உதவி எண்கள் ஆகியவற்றை உணர்த்திடும் வகையில் சுவரொட்டிகள் அச்சடித்து அனைத்து களப் பணியாளர்களுக்கும் வழங்கப்பட்டு, பொது கட்டடங்கள், பேருந்து நிலையங்கள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் காட்சிப்படுத்தி குழந்தை திருமணங்களை ஒழித்திடும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்த தெரிவிக்கப் பட்டுள்ளது.

- குழந்தை திருமணங்கள் அதிகமாக நடைபெறும் வட்டாரங்களில் களப்பணியாளர்கள் மூலம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

- குழந்தை திருமணத் தகவல் கிடைக்கப் பெற்றவுடன் களப்பணியாளர்கள் நேரடியாக சென்று குழந்தை திருமணங்கள் தடுத்து நிறுத்தப்படுகிறது.

- கிராம அளவிலான குழந்தைகள் பாதுகாப்பு குழு பல்வேறு கள அலுவலர்கள் மற்றும் உள்ளூர் மக்களைக் கொண்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்குழு குழந்தைகளுக்கு இழைக்கப்படும் குற்றங்களை களைய, கூட்டம் நடத்தி தொடர் கண்காணிப்பு செய்து வருகிறது.
- பெண் குழந்தைகளின் கல்வியை மையமாக கொண்டும், குழந்தை திருமணத்தை அறவே தடுத்திடும் நோக்கிலும், பல்வேறு நலத்திட்டங்கள், பெண்ணுக்கு 18 வயது பூர்த்தியடையும் போது பயனடையும் வகையில் தமிழ் நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- சமூக வலைதளத்தில் ஒரு பிரிவாக இத்துறையின் மூலம் **"தமிழ் மகளிர் குரல் – சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை"** என்னும் தனி வலையொளி உருவாக்கப்பட்டு, விழிப்புணர்வு குறும்படங்கள், பொதுமக்கள் பார்வைக்காக பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

**2023–ஆம் ஆண்டில் 1,995 குழந்தைத் திருமணங்கள் நிறுத்தப்பட்டுள்ளன.**

## 2.3 மூத்த குடிமக்கள் நலன்

இந்தியாவில் 60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட நபர்கள் சட்டப்பூர்வமாக 'மூத்த குடிமக்கள்' என அழைக்கப்படுகின்றனர். மூத்த குடிமக்கள் அறிவு மற்றும் அனுபவத்தின் புதையல்கள்; இதனால் சமூகத்தின் மதிப்புமிக்க மற்றும் ஒருங்கிணைந்த பகுதியாக உள்ளனர். ஒன்றிய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட 'இந்தியாவில் முதியோர் 2021' அறிக்கையின்படி, தமிழ்நாட்டின் முதியோர் எண்ணிக்கை, 2031 ஆம் ஆண்டில் 18.20 சதவீதமாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மூத்த குடிமக்களுக்கு பாதுகாப்பான மற்றும் உகந்த சூழலை வழங்குவதற்கு தமிழ் நாடு அரசு உறுதிபூண்டுள்ளது. மேலும் பல்வேறு திட்டங்கள் மற்றும் முன்முயற்சிகள் மூலம் சாத்தியமான சூழலை உருவாக்குவதற்கான சவால்களை தொடர்ந்து எதிர்கொள்கிறது. அனைத்து மூத்த குடிமக்களுக்கும் பெற்றோர் மற்றும் மூத்த

குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007 இல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டாயக் கடமைகளை நிறைவேற்ற தமிழ் நாடு அரசு முழுமையாக உறுதிபூண்டுள்ளது.

### 2.3.1 தமிழ் நாடு மூத்த குடிமக்களுக்கான மாநிலக் கொள்கை, 2023

தமிழ்நாட்டில் உள்ள மூத்த குடிமக்கள் பாதுகாப்புடனும், நல்ல ஆரோக்கியத்துடனும், செயல்திறனுடனும், சமூகத்தில் கண்ணியத்துடனும் வாழ்வதற்காகப் பொது மற்றும் தனியார் கூட்டாண்மையுடன் இணைந்து செயல்பட்டு, அவர்கள் மேம்பாட்டிற்கான உகந்த சூழ்நிலையை ஏற்படுத்தி, இந்தக் கொள்கையின் மூலம் மூத்த குடிமக்களுக்கு சுகாதாரம், ஊட்டச்சத்து, தங்குமிடம், பாதுகாப்பு, நிதி திறன் ஆகியவற்றை உறுதி செய்வதுடன், துன்புறுத்தலில் இருந்து அவர்களை பாதுகாத்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்தும்.

## 2.3.2 பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச் சட்டம், 2007

இச்சட்டம் பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்களின் பராமரிப்பு மற்றும் நலனுக்கான சட்டரீதியான பாதுகாப்பை வழங்குகிறது. இச்சட்டத்தை செயல்படுத்துவதற்காக, 2009-ஆம் ஆண்டில் மாநில அரசு விதிகளை வகுத்துள்ளது. இச்சட்டத்தின்படி, குழந்தைகள் மற்றும் சட்டப்பூர்வ வாரிசுகள் தங்கள் பெற்றோரைக் கவனித்துக்கொள்ள வேண்டிய கடமையைக் கொண்டுள்ளனர். தனது சொந்த வருமானம் அல்லது தனக்குச் சொந்தமான சொத்திலிருந்து தன்னை பராமரிக்க முடியாத மூத்த குடிமக்கள், பெற்றோர் உட்பட, இச்சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட தீர்ப்பாயத்தில் உடல் ஆரோக்கியம், மன ஆரோக்கியம் மற்றும் சொத்து தொடர்பான பிரச்னைகள் குறித்து விண்ணப்பித்து தீர்வு காணலாம்.

**சட்டத்தின் சிறப்பம்சங்கள்**

- இச்சட்டம் பெற்றோர், வளர்ப்பு தாய், வளர்ப்பு தந்தை ஆகியோரை பெற்றோராக உள்ளடக்கியது.
- தங்கள் குழந்தைகள்/சட்டப்பூர்வ வாரிசுகளால் பராமரிக்கப்படாமல் பாதிக்கப்பட்ட எந்தவொரு மூத்த குடிமக்களும், அதிகபட்சம் மாதத்திற்கு ரூ.10,000/- வரை பராமரிப்பு தொகையைப் பெறுவதற்காக வருவாய் கோட்ட அளவில் இச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பராமரிப்பு தீர்ப்பாயத்தில் மனு தாக்கல் செய்யலாம். இச் சட்டத்தின் கீழ் பராமரிப்பு தொகை வேண்டி தாக்கல் செய்யப்பட்ட மனு 90 நாட்களுக்குள் தீர்க்கப்படும்.
- மூத்த குடிமக்களின் கவனிப்பு மற்றும் பாதுகாப்புக்கு பொறுப்பான நபர் அவரை கைவிட்டால், அத்தகைய நபருக்கு மூன்று மாதங்கள் சிறைத்தண்டனை அல்லது ரூ.5,000/- வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.
- இச்சட்டம் நடைமுறைக்கு வந்த பிறகு எந்தவொரு மூத்த குடிமக்களாக இருந்தாலும்

31.12.2009 பிறகு தனது சொத்துக்களை தனது குழந்தைகள் அல்லது சட்டப்பூர்வ வாரிசுகளுக்கு பரிசாக மாற்றிவிட்டால், பரிமாற்றதாரர் அவர்களைப் பராமரிப்பார் என்ற நிபந்தனைக்கு உட்பட்டது. அத்தகைய பரிமாற்றதாரர் அவ்வாறு செய்யத் தவறிவிட்டார் எனில் பெற்றோர் அல்லது மூத்த குடிமக்கள் பரிசு பத்திரத்தை இரத்து செய்ய மனு அளிக்கலாம்.

## சட்டத்தின்கீழ் குறை தீர்க்கும் வழிமுறை

### பராமரிப்பு தீர்ப்பாயங்கள்

இச்சட்டத்தின் பிரிவு 5ன் கீழ் வருவாய் கோட்ட அலுவலர்கள் (ஆர். டி. ஓ) பராமரிப்பு விண்ணப்பத்தின் மீது தீர்மானிப்பதற்கும், உத்தரவுகளை வழங்குவதற்கும், தீர்ப்பளிப்பதற்கும் சட்டத்தின் பிரிவு 7ன் கீழ் அரசால் பராமரிப்பு தீர்ப்பாயமாக நியமிக்கப்படுகிறார்கள். இம்மாநிலத்தில் இதுபோன்ற 94 தீர்ப்பாயங்கள் செயல்பட்டு வருகின்றன. தீர்ப்பாயங்களுக்கு ஒரு

சிவில் நீதிமன்றத்தின் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன

**சமரசம் மற்றும் பராமரிப்பு அலுவலர்**

இச்சட்டத்தின் கீழ் மாவட்ட சமூக நல அலுவலர், சமரசம் மற்றும் பராமரிப்பு அதிகாரியாக அறிவிக்கப்பட்டுள்ளார். பாதிக்கப்பட்ட மூத்த குடிமகனும், எதிர் தரப்பினரும் சமரசம் செய்ய ஒப்புக்கொண்டால், தீர்ப்பாயம் வழக்கை மாவட்ட சமூக நல அலுவலர் அவர்களுக்கு பரிந்துரைக்கும், அல்லது 30 நாட்களுக்குள் இரு தரப்பினருக்கும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வை உருவாக்க தொடர்புடைய ஆவணங்களை அனுப்புவதன் மூலம் இரு தரப்பினருக்கும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நபரை நியமிக்கும்.

இச்சட்டத்தின் பிரிவு 18 (1) இன் கீழ், பெற்றோர் விரும்பினால், நடுவர் மன்றம் அல்லது மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தின் நடவடிக்கைகளின்

போது, ஒரு பெற்றோரைப் போல பராமரிப்பு அதிகாரியாக மாவட்ட சமூக நல அலுவலர் அவர்களை அரசு நியமித்துள்ளது.

**மேல்முறையீடு தீர்ப்பாயம்**

பராமரிப்பு தீர்ப்பாயம் பிறப்பித்த உத்தரவுகளுக்கு எதிரான மேல்முறையீட்டு மனுவை விசாரிக்க மாவட்ட ஆட்சியரை மேல்முறையீட்டு தீர்ப்பாயமாக மாநில அரசு நியமித்துள்ளது. நடுவர் மன்றத்தின் உத்தரவுகளுக்கு எதிராக மேல்முறையீட்டாளர் 60 நாட்களுக்குள் மேல்முறையீடு செய்யலாம்.

**மாநில மற்றும் மாவட்ட அளவிலான மூத்தகுடி மக்கள் நலக் குழு**

பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலன் சட்டம், 2007-ஐ திறம்பட செயல்படுத்துவதற்காக, மாநில அளவில் தலைமைச் செயலாளர் தலைமையில் மூத்த குடிமக்களுக்கான உயர்மட்ட ஆலோசனைக் குழுவையும், மாவட்ட

அளவில் அந்தந்த மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்டக் குழுவையும் அரசு அமைத்துள்ளது.

### 2.3.3 மாநில அரசு நிதி உதவி பெறும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் முதியோர் இல்லங்கள்

குடும்பங்களால் கைவிடப்பட்ட 60 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற முதியவர்களின் வாழ்க்கையை பாதுகாக்கும் பொருட்டு, அரசு சாரா அமைப்புகளால் நடத்தப்படும் முதியோர் இல்லங்களுக்கு மாநில அரசு 5:1 என்ற அடிப்படையில் பராமரிப்பு மானியத்தை வழங்கி வருகிறது. உணவு, தங்குமிடம், உடை, சுகாதாரம், பாதுகாப்பு, பொழுதுபோக்கு வசதிகள், இறுதிச் சடங்குகளுக்கான செலவுகள் போன்றவை வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு இல்லங்களிலும் 40 முதியோர்கள் தங்கலாம். மேலும், ஒரு முதியோருக்கு ஒரு மாதத்திற்கு ரூ.1,200/ உணவூட்டு மானியாக வழங்கப்படுகிறது. 2023 – 2024–ஆம் நிதியாண்டில்,

23 முதியோர் இல்லங்களில் 812 முதியோர்கள் பயனடைந்துள்ளனர்.

**2024-2025-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 1.17 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.3.4 மூத்த குடிமக்கள் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிறப்பு இல்லங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளாகங்கள்

முதியோர் மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த வளாகம் 75:25 என்ற பங்கு விகிதத்தில் மாநில அரசு மற்றும் தன்னார்வ நிறுவனங்களின் பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஒருங்கிணைந்த வளாகத்திலும், 25 பெரியவர்கள் மற்றும் 25 குழந்தைகள் தங்கலாம். முதியோருக்கு மாதம் ரூ. 1,200/- வீதமும், குழந்தைக்கு மாதம் ரூ. 900/- வீதமும் உணவூட்டு மானியம் வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் 2023-2024-ஆம் நிதியாண்டில், 44 ஒருங்கிணைந்த வளாகங்களுக்கு மானியங்கள் வழங்கப்பட்டன. இதில், 882 குழந்தைகள் மற்றும் 1,033 மூத்தகுடிமக்கள் பயனடைந்துள்ளனர்.

**2024-2025-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 6.62 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.3.5 மூத்த குடிமக்களுக்கான ஒருங்கிணைந்த திட்டம் (IPSrC)

மாநில அரசின் பரிந்துரையுடன் ஒன்றிய அரசு 66 முதியோர் இல்லங்கள், 1 தொடர்ச்சியான பராமரிப்பு இல்லம், இயன்முறை சிகிச்சை மையம், 3 நடமாடும் மருத்துவ பராமரிப்பு அலகுகள் மற்றும் 1 மண்டல வள பயிற்சி மையம் ஆகிய திட்டப் பணிகளுக்கு மானியங்களை 90:10 (ஒன்றிய அரசு : தன்னார்வ தொண்டு நிறுவனம்) என்ற விகிதத்தில் தொண்டு நிறுவனங்களுக்கு நேரடியாக வழங்குகிறது.

## 2.3.6 மூத்த குடிமக்கள் உதவி எண் (14567)

**'14567'** என்ற கட்டணமில்லா மூத்த குடிமக்கள் உதவி எண் 28.04.2021 முதல் இயக்கப்படுகிறது. இது அனைத்து நாட்களிலும் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை செயல்படுகிறது.

மூத்தகுடிமக்கள் உதவி எண் 14567–ஐ அழைக்கும் மூத்த குடிமக்களுக்கு கீழ்காணும் சேவைகள் வழங்கப்படுகிறது.

- மீட்பு உதவி
- முதியோர் இல்லங்கள் பற்றிய தகவல்கள்
- மூத்த குடிமக்கள் நலத்திட்டங்கள் பற்றிய தகவல்கள்
- மணநல ஆலோசனை
- பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு நலச் சட்டம் 2007 குறித்த சட்ட வழிகாட்டுதல்.

**17 மே 2021 முதல் மார்ச் 2024 வரை, இந்த முதியோர் உதவி எண்ணிற்கு 1,77,826 அழைப்புகள் பெறப்பட்டது.**

**2.4 திருநங்கைகள் நலன்**

தமிழ் நாடு அரசு திருநங்கைகளையும் உள்ளடக்கிய சமூகத்தை உறுதிபடுத்துவதற்காக தொடர்ந்து பாடுபட்டு வருகிறது. **"தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரியம்"** அமைத்ததன் மூலம் திருநங்கைகளுக்கான நலத்திட்டங்களை வடிவமைத்ததில் தமிழ் நாடு முன்னோடியாக உள்ளது. வாரியத்தின் மூலம் திருநங்கைகளுக்கு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

**2.4.1 தமிழ் நாடு திருநங்கைகள் நல வாரியம்**

திருநங்கைகளுக்கு சமூக மற்றும் பொருளாதார ஆதரவை வழங்கி அவர்களுக்கான நலத்திட்டங்களை செயல்படுத்த திருநங்கைகள் நல வாரியம் 15.04.2008-இல் உருவாக்கப்பட்டது. திருநங்கைகள்

நல வாரியத்தின் மூலம் பின்வரும் நலத்திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

1. அடையாள அட்டை வழங்குதல்
2. உயர் கல்விக்கான உதவித் தொகை
3. தனி நபர் மற்றும் வணிகம் /தொழில் சார்ந்த திறன் மேம்பாட்டு பயிற்சி .
4. சுயதொழில் மூலம் தங்கள் வாழ்வாதாரத்தை மேற்கொள்ள விரும்பும் திருநங்கைகளுக்கு ரூ.50,000/- வரையிலான மானியம்.

பல்வேறு துறைகளுடன் இணைந்து திருநங்கைகளுக்கு குடும்ப அட்டை, வீட்டு மனைப் பட்டா, குடியிருப்புகள் மற்றும் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் திருநங்கைகளின் வாழ்வாதாரத்தை உறுதி செய்ய, சுயஉதவி குழுக்களும், வங்கித் துறை மூலம் கடன் இணைப்புகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

### 2.4.2 திருநங்கைகளுக்கான மாதாந்திர ஓய்வூதியத் திட்டம்

மார்ச் 2023 முதல், 40 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற திருநங்கைகளுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர ஓய்வூதிய தொகை ரூ.1,000ல் இருந்து ரூ.1,500 ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. 2023–2024–ஆம் ஆண்டில் 1,482 திருநங்கைகள் பயனடைந்துள்ளனர்.

### 2.4.3 திருநங்கைகளுக்கான கல்வி கனவுத் திட்டம்

திருநங்கைகளின் நல்வாழ்வுக்கென பல்வேறு புதுமையான திட்டங்களை நாட்டிலேயே முன்னோடியாக தமிழ் நாடு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி வருகிறது. திருநங்கைகளின் சமூகப் பொருளாதார மேம்பாட்டினை உறுதி செய்து, வாழ்க்கையில் வெற்றி பெற அவர்கள் உயர்கல்வி கற்பது மிகவும் இன்றியமையாததாகும். எனினும், தற்போது மிகக் குறைந்த எண்ணிக்கையிலான திருநங்கைகள் மட்டுமே தமிழ்நாட்டில் உயர்கல்வி

பயின்று வருகின்றனர். எனவே, உயர்கல்வியைத் தொடர விரும்பும் திருநங்கைகளுக்கு கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம் உள்ளிட்ட அனைத்து கல்விச் செலவுகளையும் தமிழ் நாடு திருநங்கைகள் நல வாரியத்தின் மூலம் வழங்கும் கல்வி கனவுத் திட்டத்தை தமிழ் நாடு அரசு அறிவித்துள்ளது.

**2024–2025–ஆம் ஆண்டிற்கான வரவு செலவு மதிப்பீட்டில் ரூ.5.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 2.4.4 திருநங்கைகள் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டம், 2019

திருநங்கைகள், சமூகத்தில் பாகுபாடு மற்றும் வன்முறை உட்பட பல்வேறு சவால்களை எதிர் கொண்டு வருகின்றனர். பாரபட்சம் மற்றும் தவறான புரிதல்களால் திருநங்கைகள் சமூக மற்றும் பொருளாதார புறக்கணிப்பினால் பாதிக்கப்பட்டு, கல்வி மற்றும் வேலைவாய்ப்பிற்கான வாய்ப்புகளை இழக்கின்றனர். இத்தகைய பிரச்னைகளுக்கு

தீர்வுகாண ஒன்றிய அரசால் திருநங்கைகள் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டமானது 2019–ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. இதன் தொடர்ச்சியாக தமிழ் நாடு திருநங்கைகள் (உரிமைகள் பாதுகாப்பு) விதிகள் டிசம்பர் 2022–ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.

**சட்டத்தின் முக்கிய அம்சங்கள்**

1. திருநங்கைகளின் அடையாளத்தை அங்கீகரித்து கல்வி, வேலைவாய்ப்பு, சுகாதார பராமரிப்பு, சொத்து வைத்திருத்தல் மற்றும் விற்றல், பொது அல்லது தனியார் அலுவலகம் நடத்துதல், பொது சேவைகள் மற்றும் சலுகைகளை அணுகி பெறுதல் மற்றும் பயன்படுத்துதல் ஆகியவற்றில் பாகுபாடு காட்டுவதை தடை செய்ய இச்சட்டம் வழிவகை செய்கிறது.

2. சுயமாக உணரப்பட்ட பாலின அடையாளத்திற்கான உரிமையை வழங்குவதுடன், மருத்துவ அல்லது உடல் பரிசோதனையின் தேவை இல்லாமல் திருநங்கை என அடையாள சான்றிதழை மாவட்ட ஆட்சியர் வழங்குவதற்கு வழிவகை செய்கிறது.

## 2.5 விருதுகள்

### 2.5.1 பெண் குழந்தைகளின் முன்னேற்றத்திற்கான மாநில விருது (ஜனவரி 24)

பெண் குழந்தைகளின் திறன்களை அங்கீகரித்து ஊக்குவிக்கும் வகையிலும் பெண் குழந்தைகளுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளை எதிர்த்து செயல்படும் பெண் குழந்தைகளின் முயற்சியைப் பாராட்டும் வகையில் மாநில விருது ஒன்று 2018 –ஆம் ஆண்டு முதல் தமிழ் நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் 18 வயதிற்குட்பட்ட பெண் குழந்தை, பெண் கல்வி, பெண் குழந்தை

தொழிலாளர் ஒழிப்பு, சமூக அவலங்கள், பெண் குழந்தைகள் திருமணத்தை தடுத்தல் ஆகியவற்றில் அசாதாரணமாக செயல் ஆற்றியமைக்காக இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருது ரொக்கப் பரிசாக ரூ.1.00 லட்சம் காசோலை மற்றும் பாராட்டுப் பத்திரம் உள்ளடக்கியதாகும்.

### 2.5.2 சிறந்த மாவட்டங்களுக்கான விருது ( பிப்ரவரி 24)

பெண் குழந்தைகளின் பாலின விகிதத்தை அதிகரித்தல் மற்றும் இளவயது கர்ப்பம், உயர்பிறப்பு விகிதம், கருகலைப்பு விகிதம், குழந்தை இறப்பு விகிதம் ஆகியவற்றை குறைத்திடும் வகையில் புதுமையான நடவடிக்கை மேற்கொண்டு சிறப்பாக செயலாற்றும் மாவட்ட ஆட்சியர்களின் பணியினை அடையாளபடுத்தும் விதமாக தமிழ் நாடு அரசால் ஆண்டு தோறும் விருது வழங்கப்படுகிறது. இவ்விருது தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் மற்றும் சான்றிதழும் வழங்கி கௌரவிக்கப்படுகிறது.

### 2.5.3 ஔவையார் விருது (மார்ச் 8)

சமூக சீர்திருத்தம், மொழி, கலை, பத்திரிகை, கலாசாரம், மதநல்லிணக்கம், பெண்கள் மேம்பாடு, நிர்வாகம் போன்ற பல்வேறு துறைகளில் சேவையாற்றிய தலைசிறந்த மகளிருக்கு ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8ஆம் நாள் சர்வதேச மகளிர் தினத்தன்று ஔவையார் விருது வழங்கப்படுகிறது. ஔவையார் விருது பெறுபவருக்கு காசோலையாக ரூ 1.50.லட்சம் ரொக்கப் பரிசுடன் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்படுகிறது.

### 2.5.4 திருநங்கை விருது (ஏப்ரல் 15)

திருநங்கைகளின் நலனுக்காக சிறந்த முன்மாதிரியான பணிகளைச் செய்து, தங்களது சொந்த முயற்சியால் வாழ்க்கையில் முன்னேறிய திருநங்கைகளை ஊக்குவிக்கும் வகையில், 2020-ஆம் ஆண்டு முதல் மாநில அளவிலான விருது வழங்கப்பட்டு வருகிறது. இந்த விருதானது ரூ.1.00

இலட்சத்திற்கான காசோலை மற்றும் பாராட்டுப்பத்திரத்தை உள்ளடக்கியது.

### 2.5.5 சிறந்த தொண்டு நிறுவனம் மற்றும் சிறந்த சமூக சேவகர் விருது (ஆகஸ்ட் 15)

பெண்கள் நலனுக்காக நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் செய்யும் சிறந்த சேவைகளை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தினத்தன்று விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. சிறந்த சமூக சேவகர் விருது பெறுபவருக்கு காசோலையாக ரூ.50000/- ரொக்கப் பரிசுடன் சான்றிதழும் மற்றும் சிறந்த தொண்டு நிறுவனம் விருது பெறுபவருக்கு காசோலையாக ரூ.1.00 லட்சம் ரொக்கப் பரிசுடன் சான்றிதழும் வழங்கப்படுகிறது.

*****

## அத்தியாயம்--3

## சத்துணவுத் திட்டம்

*"பசிப்பிணி மருத்துவன் இல்லம்*
*அணித்தோ சேய்த்தோ? கூறுமின்*
*எமக்கே"*

(புறநானூறு –173)

சங்க காலத்தை சேர்ந்த குறுநில மன்னர் ஒருவர் ஏழை, எளியோரின் பசியை போக்கியதால், பசிப்பிணியைப் போக்கிய மருத்துவராகப் போற்றப்படுகிறார்.

### 3 (அ) முதலமைச்சரின் காலை உணவு திட்டம்

இந்தியாவிலே பள்ளிக்கு வரும் குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், வேலை வாய்ப்புகளை வழங்கி பெண்களுக்கு அதிகாரம் அளிக்கவும், முதலமைச்சர் காலை உணவு திட்டத்தை அறிமுகப்படுத்தியதில் தமிழ் நாடு முன்னோடி மாநிலமாக உள்ளது. மாண்புமிகு தமிழ் நாடு

முதலமைச்சர் அவர்களால் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் 15.09.2022 அன்று முன்னோடித் திட்டமாக தொடங்கப்பட்டது. பின்னர், 25.8.2023 முதல் மாநிலம் முழுவதும் உள்ள 30,995 பள்ளிகளைச் சேர்ந்த 18,53,595 குழந்தைகளை உள்ளடக்கிய அனைத்து அரசு தொடக்கப் பள்ளிகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.

மேலும் 19.2.2024 அன்று சட்டப்பேரவையில் தமிழ் நாடு நிதியமைச்சர் அவர்களால் கிராமப்புரங்களில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 2.50 லட்சம் தொடக்கப் பள்ளிக் குழந்தைகளுக்கு அனைத்து பள்ளி வேலை நாட்களிலும் காலை உணவு வழங்கும் திட்டம் 2024–2025–ஆம் ஆண்டு முதல் விரிவுபடுத்துபடுவது தொடர்பான அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளது.

**குறிக்கோள்கள்**

- மாணவ மாணவியர்கள் பசியின்றி பள்ளிக்கு வருவதை உறுதி செய்தல்.

- மாணவ மாணவியர்கள் ஊட்டச்சத்து குறைபாட்டினால் பாதிக்கப்படாமலிருத்தலை உறுதி செய்தல்.
- மாணவ மாணவியரின் ஊட்டச்சத்து நிலையினை உயர்த்துதல் – குறிப்பாக இரத்த சோகை குறைபாட்டினை நீக்குதல்.
- பள்ளிகளில் மாணவ மாணவியரின் வருகையை அதிகரித்தல் / தக்க வைத்துக் கொள்ளுதல்.
- வேலைக்கு செல்லும் தாய்மார்களின் பணிச்சுமையினை குறைத்தல்.

**காலை உணவுத் திட்ட பயானாளிகளின் விவரம்**

| **செயல்படுத்தும் முகமைகள்** | **பள்ளிகள்** | **மாணவ/ மாணவியர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| பெருநகர சென்னை மாநகராட்சி | 358 | 65,030 |
| சென்னை தவிர இதர மாநகராட்சிகள் அனைத்து நகராட்சிகள் மற்றும் பேரூராட்சி (மாநகராட்சி/ நகராட்சியை ஒட்டியுள்ள) | 2,257 | 2,48,007 |
| அனைத்து கிராம பஞ்சாயத்து மற்றும் பேரூராட்சிகள் | 28,380 | 15,40,558 |
| **மொத்தம்** | **30,995** | **18,53,595** |

**பரிந்துரைக்கப்படும் உணவு**

| | | |
|---|---|---|
| திங்கள் & வியாழன் | உப்புமா வகை | ரவை / சேமியா / அரிசி / கோதுமை ரவை |
| செவ்வாய் & வெள்ளி | கிச்சடி வகை | ரவை + காய்கறிகள் / சேமியா + காய்கறிகள் / கோதுமை ரவை + காய்கறிகள் |
| புதன் | பொங்கல் வகை | அரிசி / ரவை |
| அனைத்து நாட்களிலும் காய்கறி சாம்பார் வழங்கப்படும் | | |
| உள்ளூரில் கிடைக்கக் கூடிய சிறு தானியத்தில் தயார் செய்யப்பட்ட சிற்றுண்டி வகையினை குறைந்த பட்சம் வாரத்திற்கு இரண்டு நாட்கள் வழங்கலாம். | | |

**திட்டம் செயல்படுத்தும் முறை**

- சென்னை மாவட்டத்தில் இத்திட்டம் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- மற்ற மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் முதலமைச்சரின் காலை உணவு வழங்கும் திட்டம் ஒருங்கிணைந்த சமையற்கூடங்கள்

மூலம் பள்ளி சத்துணவு மையங்களை இணைத்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- கிராம ஊராட்சி மற்றும் மலைப் பகுதி மையங்களில் இத்திட்டம், மேலாண்மை இயக்குநர் தமிழ் நாடு மகளிர் மேம்பாட்டு கழகம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- நகர்புற பகுதிகளில் ஒருங்கிணைந்த சமையற் கூடம் மூலமும் கிராமப்புர பகுதிகளில் சுய உதவி குழு உறுப்பினர்கள் மூலம் சம்பந்தப்பட்ட பள்ளி மையங்களில் சமைக்கப்படுகிறது.

**கண்காணித்தல்**

**I. முதலமைச்சரின் காலை உணவுத்திட்ட செயலி**

முதலமைச்சரின் காலை உணவு வழங்கும் திட்டத்திற்கென தனியான அலைபேசி செயலி உருவாக்கப்பட்டு செயல்பாடு கண்காணிக்கப்படுகிறது. இதன் மூலம் காலை உணவு தயாரிக்க துவக்க நேரம், சமைத்து முடிக்கும் நேரம் (நகர்ப்புரம் (ம) கிராமப்புரம்), சமைத்த உணவுகளை வாகனத்தில் ஏற்றும் நேரம் மற்றும் மையங்களில் காலை உணவு பெறப்பட்ட நேரம்

(நகர்ப்புரம்), மையங்களுக்கு காலை உணவு விநியோகம் செய்யும் நேரம், பயனாளிகளுக்கு காலை உணவு பரிமாறப்பட்ட நேரம் போன்ற விவரங்கள் நகர்ப்புர மற்றும் கிராமப்புர பகுதிகளில் இருந்து தனித்தனியாக உடனுக்குடன் சேகரிக்கப்படுகிறது. அனைத்து மையங்களிலும் மேற்கண்ட பதிவுகள் அலைபேசி செயலியில் கிரமபுரத்தில் சுயஉதவி குழுக்கள் மூலமும், நகர்ப்புரத்தில் பொறுப்பாளர் மூலம் பதிவுகள் மேற்கொள்ளப்படுகிறது.

**II. குழுக்கள் அமைத்தல்**

முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தினை கண்காணிப்பதற்கென அனைத்து நிலைகளிலும் குழுக்கள் அமைப்பதற்கு ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி மாநில அளவிலான வழிகாட்டுதல் குழு, மாநில அளவிலான கண்காணிப்பு குழு, மாவட்ட அளவிலான கண்காணிப்பு குழு, பெருநகர சென்னை மாநகராட்சி கண்காணிப்புக் குழு, மாநகராட்சி அளவிலான கண்காணிப்புக் குழு (பெருநகர சென்னை

மாநகராட்சியை தவிர), நகராட்சி அளவிலான கண்காணிப்புக் குழு, வட்டார அளவிலான கண்காணிப்பு குழு மற்றும் பள்ளி அளவிலான கண்காணிப்பு குழு என பல்வேறு நிலைகளில் கண்காணிக்க குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**2024–25–ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் அரசு தொடக்கப் பள்ளிக் குழந்தைகள் மற்றும் கிராமப்புரங்களில் உள்ள அனைத்து அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிக் குழந்தைகளுக்கும் விரிவுபடுத்தப்படடு முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தைச் செயல்படுத்த ரூ.600 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 3 (ஆ) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத்திட்டம்

தமிழ் நாடு ஒரு முன்னோடி மாநிலமாக, சென்னை மாநகராட்சியில் 1925 ஆம் ஆண்டு மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. பின்னர் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மதிய உணவு அறிமுகப்படுத்தப்பட்டது.

அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி மற்றும் 9 மற்றும் 10–ஆம் வகுப்பு மாணவ மாணவியர்கு பல்வேறு வகையான சூடான ஊட்டச்சத்து மிகுந்த கலவை சாதம், மசாலா முட்டையுடன் வழங்கப்பட்டு வருகிறது.

**திட்டத்தின் பரிணாம வளர்ச்சி கீழே கொடுக்கப்பட்டுள்ளது**

| வருடம் | ஊட்டச்சத்து உணவு திட்டத்தின் வளர்ச்சி |
|---|---|
| 1925 | சென்னை மாநகராட்சியில் ஆரம்பிக்கப்பட்டது |

| | |
|---|---|
| 1962 | தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மதிய உணவு திட்டம் தொடங்கப்பட்டது |
| 1982 | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் துவங்கப்பட்டது |
| 1984 | 6–10 ம் வகுப்பு வரை உள்ள குழந்தைகளுக்கு விரிவுப்படுத்தப்பட்டது |
| 1989 | சத்துணவுடன் இரு வாரங்களுக்கு ஒரு முறை முட்டை அறிமுகம் செய்யப்பட்டது |
| 1998 | 2 முதல் 15 வயது வரையிலான குழந்தைகளுக்கு வாரம் ஒரு முட்டை அறிமுகம் செய்யப்பட்டது |
| 2004 | 2 முதல் 15 வயது வரையிலான குழந்தைகளுக்கு வாரம் ஒரு முட்டை மீண்டும் அறிமுகம் செய்யப்பட்டது |
| 2006 | 2 முதல் 15 வயது வரையிலான குழந்தைகளுக்கு வாரம் இரு முட்டை அறிமுகம் செய்யப்பட்டது |
| 2007 | 2 முதல் 15 வயது வரையிலான குழந்தைகளுக்கு வாரம் மூன்று முட்டை அறிமுகம் செய்யப்பட்டது (மற்றும்)<br>1 முதல் 2 வயது வரையிலான குழந்தைகளுக்கு வாரம் ஒரு முட்டை அறிமுகப்படுத்தப்பட்டது |
| 2010 | 5 முதல் 15 வயது வரையிலான குழந்தைகளுக்கு வாரம் ஐந்து முட்டைகள் அறிமுகம் செய்யப்பட்டது |
| 2014 | பல்வேறு வகையான கலவை சாதம் மற்றும் மசாலா முட்டைகள் அறிமுகம் செய்யப்பட்டது. |

## திட்டத்தின் சீரிய நோக்கங்கள்

1. அனைத்து பள்ளி செல்லும் குழந்தைகளும் முறையாக பள்ளிக்கு செல்வதை ஊக்குவிப்பதின் மூலம் உறுதி படுத்துதல்.
2. மாணவர் சேர்க்கையினை அதிகரித்தல், மற்றும் பள்ளி இடைநிற்றலைத் தடுத்தல்.
3. அனைவருக்கும் ஆரம்ப கல்வி வழங்குதலை உறுதிசெய்தல்.
4. குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையினை மேம்படுத்துதல் மற்றும் எழுத்தறிவு விகிதத்தினை அதிகரித்தல்.
5. சத்துணவுத் திட்டத்தில் பெண்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பு வழங்குவதின் மூலம் பெண்களின் பொருளாதார நிலையினை மேம்படுத்துதல்.

## திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

i. 5 – 9 வயதுடைய தொடக்கப்பள்ளி குழந்தைகள் மற்றும் 10 – 15 வயதுடைய உயர் நிலைப்பள்ளி குழந்தைகளுக்கு சுவையான சூடான சத்தான கலவை சாதம் மற்றும் மசாலா முட்டைகள்

மொத்தம் 220 வேலை நாட்களிலும் வழங்கப்படுகிறது.

II. உணவு அளவு உரிமை விதிமுறைகளின்படி துவக்கப்பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கு (1 முதல் 5–ஆம் வகுப்பு வரை) ஒரு குழந்தைக்கு நாளொன்றுக்கு 100 கிராம் அரிசி மற்றும் உயர் நிலைப் பள்ளிகளில் (6 – 10–ஆம் வகுப்பு வரை) பயிலும் குழந்தைகளுக்கு நாளொன்றுக்கு 150 கிராம் அளவு அரிசி என்ற கணக்கீட்டின் படி வழங்கப்படுகிறது.

**பள்ளிகளில் உள்ள பயனாளிகள் (சத்துணவு மையங்கள்) 2023 – 2024**


| வ. எண் | நிலை | சத்துணவு மையங்களின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | தொடக்கப்பள்ளி (1 முதல் 5ம் வகுப்பு வரை) | 27003 | 20,74,039 |
| 2. | உயர்தொடக்கப்பள்ளி (6 முதல் 8ம் வகுப்பு வரை) | 16128 | 15,06,081 |
| 3. | 9, (ம) 10ஆம் வகுப்பு | | 6,91,833 |
| **மொத்தம்** | | **43131** | **42,71,953** |

## சத்துணவு திட்டத்தில் வழங்கப்படும் உணவு வகைகள்


### கலவை சாதம்

ஒரு சிறப்பு ஊட்டச்சத்து அறிமுகமாக கலவை சாதத்துடன் 5 வகையான முட்டை மசாலா தற்போது வழங்கப்பட்டு வருகிறது

| நாட்கள் | முதல் மற்றும் மூன்றாம் வாரம் | | இரண்டாவது மற்றும் நான்காவது வாரம் | |
|---|---|---|---|---|
| திங்கட் கிழமை |  | வெஜிடபின் பிரியாணி + மிளகு முட்டை |  | சாம்பார் சாதம் + வெங்காயம் தக்காளி மசாலா முட்டை |
| செவ்வாய் கிழமை |  | கருப்பு கொண்டைக் கடலை புலாவு + தக்காளி மசாலா முட்டை |  | மீல்மேக்கர் மற்றும் காய்கறி கலந்த வெஜிடபின் சாதம் + மிளகு முட்டை |

| | | | | |
|---|---|---|---|---|
| புதன் கிழமை |  | தக்காளி சாதம் + மிளகு முட்டை |  | புளி சாதம் + தக்காளி மசாலா முட்டை |
| வியாழக் கிழமை |  | சாதம், சாம்பார்+ வேகவைத்த முட்டை |  | எலுமிச்சை சாதம் + பாசிப் பயறு சுண்டல் + தக்காளி முட்டை |
| வெள்ளிக் கிழமை |  | கருவேப்பிலை / கீரை சாதம், மசாலா முட்டை+ மிளகாய்பொடி தூவி வறுத்த உருளைக் கிழங்கு |  | சாதம் + காய்கறியுடன் சாம்பார், வேக வைத்த முட்டை மற்றும் வறுத்த உருளைக் கிழங்கு |

## கூடுதல் ஊட்டச்சத்து வழங்குதல்

| வழங்கப்படும் உணவு | | அளவு |
|---|---|---|
|   | கருப்பு கொண்டைக்கடலை / பச்சைப்பயறு | 20 கிராம் (வாரம் ஒரு முறை) |
|  | உருளைக் கிழங்கு | 20 கிராம் (வாரம் ஒரு முறை) |
|  | முட்டை | அக்மார்க் 'A' தரத்திலான 46 முதல் 52 கிராம் எடை (அனைத்து பள்ளி வேலை நாட்களிலும்) |

| | | |
|---|---|---|
|  | வாழைப்பழம் | 100 கிராம்<br>(முட்டை உண்ணாத பயனாளிகளுக்கு ) |

## இருமுறை செறிவூட்டப்பட்ட உப்பு

இருமுறை செறிவூட்டப்பட்ட அயோடின் மற்றும் இரும்பு சத்துடன் கூடிய உப்பு சமையலுக்கு பயன்படுத்தப்படுகிறது.

## சத்துணவில் செறிவூட்டப்பட்ட எண்ணெய்

இருமுறை செறிவூட்டப்பட்ட வைட்டமின் 'ஏ' மற்றும் 'டி' சத்துடன் அடங்கிய எண்ணெய் தினமும் சத்துணவில் பயன்படுத்தப்படுகிறது.

## மதிய உணவு திட்டத்தின் கீழ் ஒரு நாளைக்கு ஒரு குழந்தைக்கு தேவையான ஊட்டச்சத்து கணக்கீட்டு அளவு முறைகள்

| வ. எண் | வகுப்பு | ஒன்றிய அரசு நெறி முறைகள் | | மாநில அரசால் வழங்கப்படுவது | |
|---|---|---|---|---|---|
| | | கலோரி (கிலோ கலோரிகள் | புரதம் (கிராம்) | கலோரி (கிலோ கலோரிகள் | புரதம் (கிராம்) |
| 1 | தொடக்கப்பள்ளி | 450 | 12 | 557 | 18.92 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | உயர் தொடக்கப்பள்ளி | 700 | 20 | 735 | 2277 |
| 3 | 9,10 ஆம் வகுப்பு | ----- | ----- | 735 | 2277 |

## பிரதமரின் ஊட்டச்சத்து திட்டம் (Pradhan Mantri POSHAN Shakthi Nirman)

"தேசிய ஊட்டச்சத்து திட்டம்" 15.08.1995ல் தொடக்கக் கல்வி பெறும் குழந்தைகளுக்காக ஒன்றிய அரசால் ஆரம்பிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் 1997 – 1998 முதல் செயல்படுத்தப்படுத்தப்பட்டு, பின்னர் உயர் தொடக்கப் பள்ளிகளில் அக்டோபர் 2007–ல் விரிவுபடுத்தப்பட்டது.

ஒன்றிய நிதியுதவித் திட்டமான முந்தைய தேசிய மதிய உணவு திட்டம் "பிரதான் மந்திரி போஷன் சக்தி நிர்மான்" (PM POSHAN) என்ற பெயரில் அரசு மற்றும் உதவி பெறும் பள்ளிகளில் சூடான சமைத்த உணவை வழங்குவதற்கான ஒப்புதலைத் தெரிவித்தது.

இத்திட்டத்திற்கான உணவூட்டுச் செலவினம் மற்றும் சமையல் உதவியாளர்களுக்கான மதிப்பூதியம்

ஒன்றிய /மாநில அரசுகளால் 60:40 என்ற விகிதத்தில் மேற்கொள்ளப்படுகிறது. மேலும், அரிசி மற்றும் அரிசிக்கான போக்குவரத்து செலவினம் மற்றும் மேலாண்மை, கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு செலவினத்திற்கு ஒன்றிய அரசால் 100% நிதி வழங்கப்படுகிறது.

**உணவு பொருட்கள் மேலாண்மை**

சத்துணவு மையத்தின் தேவைக்கேற்ப தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், மூலம் அரிசி, பருப்பு, செறிவூட்டப்பட்ட எண்ணெய், செறிவூட்டப்பட்ட உப்பு, கருப்பு கொண்டைக்கடலை, பச்சைப்பயறு ஆகிய உணவுப்பொருட்களை ஒவ்வொரு மையத்திலும் விநியோகிக்கப்படுகிறது. மையத்திற்கு தேவையான காய்கறிகள் மற்றும் தாளிதப் பொருட்கள் வாங்குவதற்கு அமைப்பாளர்களுக்கு மூன்று மாதத்திற்கு ஒருமுறை முன்பணம் அவர்களது வங்கி கணக்கில் செலுத்தப்படுகிறது.

தேர்வு செய்யப்பட்ட நிறுவனத்தால் வாரம் இரண்டு முறை சத்துணவு மையங்களுக்கு 46 முதல் 52 கிராம் எடையிலான முட்டை விநியோகம் செய்யப்படுகிறது. முறைகேடுகளை தடுக்க, முட்டைகளின் மீது நிர்ணயிக்கப்பட்ட வண்ண முத்திரை இடப்படுகிறது.

## உணவூட்டுச் செலவினம் (ஒன்றிய அரசு நிர்ணயம்)

நாளொன்றுக்கு / ஒரு குழந்தைக்கு (ரூபாயில்)

| வகுப்பு | மதிய உணவு செலவினம் | ஒன்றிய அரசு (60%) | மாநில அரசு (40%) | மாநில அரசின் கூடுதல் பங்களிப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| தொடக்கப் பள்ளி (1 முதல் 5-ஆம் வகுப்பு வரை) | 5.45 | 3.27 | 2.18 | 4.80 | 10.25 |
| உயர் தொடக்கப் பள்ளி (6 முதல் 8 ஆம் வகுப்பு வரை) | 8.17 | 4.90 | 3.27 | 2.40 | 10.57 |
| 9, 10-ஆம் வகுப்பு | 100 விழுக்காடு மாநில அரசின் பங்களிப்பு | | | | 15.51 |

**உணவூட்டு செலவினம் உயர்த்தி வழங்குதல்**

துவக்கப் பள்ளி பயனாளிகளுக்கு காய்கறிகள் மற்றும் தாளிதப் பொருட்களுக்கு ஒரு குழந்தைக்கு ஒரு நாளைக்கு ரூ. 1.51 லிருந்து ரூ 1.79 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. எரிபொருள் செலவினத்திற்கு ஒரு குழந்தைக்கு ஒரு நாளைக்கு ரூ 0.60 லிருந்து ரூ 1.25 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதே போன்று உயர் தொடக்கப்பள்ளி பயனாளிகளுக்கு காய்கறிகள் மற்றும் தாளிதப் பொருட்களுக்கு ஒரு குழந்தைக்கு ஒரு நாளைக்கு ரூ. 1.65 லிருந்து ரூ 2.11 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. எரிபொருள் செலவினத்திற்கு ஒரு குழந்தைக்கு ஒரு நாளைக்கு ரூ 0.60 லிருந்து ரூ 1.25 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

**சத்துணவு மையங்களை கண்காணிக்கும் முறை**

- மூன்று அடுக்கு கண்காணிப்பு அமைப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது மாநிலம்/மாவட்டம்/வட்டாரம்)
- சத்துணவு மையங்களில் அங்கீகரிக்கப்பட்ட பட்டியலின்படியும் நடைமுறை விதிமுறைகளின்படியும் உணவின் தரம் மற்றும் அளவு குறித்து சத்துணவு திட்ட கள அலுவலர்களால் கண்காணிக்கப்படுகிறது.
- சத்துணவு பரிமாறப்படுவதற்கு முன்பு உணவின் சுவை பள்ளிகளின் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களால் சரி பார்க்கப்படுகிறது.
- சத்துணவு மையங்களுக்கு சர்வதேச தரச்சான்று (ISO) பெறுவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. இதுவரை 100 சத்துணவு மையங்கள் சர்வதேச தர நிர்ணய அமைப்பின் கீழ் சான்றிதழ் பெற்றுள்ளன. .
- உணவு பாதுகாப்பு மற்றும் இந்திய தர சட்டத்தின் கீழ். அனைத்து சத்துணவு மையங்களையும் பதிவு செய்து ஒவ்வொரு ஆண்டும் புதுப்பித்து வரும் ஒரே மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது.

- சத்துணவு மையங்களுக்கான கணக்குகள் அந்தந்த கிராம பஞ்சாயத்துகளில் நடைபெறும் கூட்டங்களில் சமூக தணிக்கைகள் வைக்கப்படுகிறது.

**சுகாதார கருவி, பொருட்களின் எடை அளவு கோல் மற்றும் பதிவேடுகள் வழங்கல்**

- பள்ளி சத்துணவு மையங்களில் சுகாதாரமான முறையில் உணவு சமைத்திட பள்ளி சத்துணவு மையங்களுக்கு இரண்டு நீள அங்கிகள், ஒரு தலைக் கவசம், ஒரு நகவெட்டி, 5 கை துடைக்கும் துண்டுகள் 6 கிருமி நாசினி சோப்புகள் ஆகியவை 2021–2022 மற்றும் 2022–2023 ஆண்டிற்கு வழங்கப்பட்டுள்ளது .
- 4000 சத்துணவு மையங்களுக்கு பொருட்களின் எடை அளவுகோல் வழங்கப்பட்டுள்ளது. அனைத்து சத்துணவு மையங்களுக்கும் பதிவேடுகள் வழங்கப்பட்டுள்ளன.

**சமையலறை சாதனங்கள் வழங்கல்**

- சத்துணவு மையங்களுக்கு ரூ.25.41 கோடி புதிய சமையல் உபகரணங்கள் 2022–2023 ஆண்டு வழங்கப்பட்டுள்ளது.

## திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி

- முன்கள பணியாளர்கள் தங்களது பணிகளை திறம்பட செய்யும் பொருட்டு அவர்களது அறிவு மற்றும் திறனை மேம்படுத்துவதற்கு அனைத்து நிலைகளிலும் பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளது.
- சத்துணவு மையத்தில் பணிபுரியும் அமைப்பாளர்கள் உணவு பாதுகாப்பு தரப்படுத்துதல் ஆணையத்தின் (FSSAI) கீழ் பதிவு செய்யப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட பயிற்றுநர்களால் பயிற்றுவிக்கப்பட்டுள்ளதுடன் (FoSTaC) சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளது.

## சமூக தணிக்கை

- 2021-2022 ஆம் ஆண்டில், நவம்பர் 2021 இல் 5 மாவட்டங்களில் உள்ள 5 சத்துணவு மையங்களில் தமிழ்நாடு சமூக தணிக்கை சங்கம் (SASTA) சமூக தணிக்கையை நிறைவு செய்துள்ளது.
- திருத்தப்பட்ட வழிகாட்டுதல்களின்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் 2% அல்லது 20 மையங்களின் எண்ணிக்கையை உள்ளடக்கியிருக்க வேண்டும். மேற்கூறிய

விதிமுறைகளின் அடிப்படையில் 954 மையங்கள் சமூக தணிக்கையின் கீழ் தணிக்கை செய்யப்படும்.

## பள்ளி சத்துணவு தோட்டம் அமைத்தல்

- புதிதாக விளைந்த காய்கறிகளை வழங்குவதன் மூலம் குழந்தைகளிடையே ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் நுண்ணூட்டச் சத்து குறைபாடுகளை நிவர்த்தி செய்ய பள்ளி சத்துணவு தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது.
- சிறப்பு முயற்சி மற்றும் இந்திய அரசின் நிதி மூலம் 28870 பள்ளி சத்துணவு தோட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 2024 – 25 ஆண்டில் ஒரு மையத்திற்கு ரூ 5000/– வீதம் 7020 சத்துணவு மையங்களில் காய்கறி தோட்டம் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டு உள்ளது.

## மனித மேலாண்மை

ஒவ்வொரு சத்துணவு மையத்திற்கும் ஒரு அமைப்பாளர், ஒரு சமையலர் மற்றும் ஒரு சமையல் உதவியாளர் என மூன்று பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன.

**ஊதிய விகிதம்**

சத்துணவுப் பணியாளர்கள் "பகுதி நேர நிரந்தரப் பணியாளர்கள்" என வகைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுக்கு வழங்கப்படும் சிறப்பு கால முறை ஊதியம் பின்வருமாறு :-

| வ. எண். | பதவி | சிறப்பு காலமுறை ஊதியம் | மத்திய அரசு பங்கு (தொகுப்பு) |
|---|---|---|---|
| 1. | சத்துணவு அமைப்பாளர் | ₹7,700–24,200 | ₹600 |
| 2. | சமையலர் | ₹4,100–12,500 | ₹600 |
| 3. | சமையல் உதவியாளர் | ₹3000 – 9,000 | ₹600 |

**பண்டிகை முன்பணம்**

ஒவ்வொரு வருடமும் சத்துணவுப் பணியாளர்களுக்கு பண்டிகை முன்பணமாக ரூ.10,000 வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகை 10 சம தவணைகளில் அவர்களுடைய மாத ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும்.

**பொங்கல் போனஸ்**

சத்துணவுப் பணியாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டிலும், ஜனவரி மாதத்தில் பொங்கல் ஊக்கத்தொகையாக ரூ. 1,000/– வழங்கப்படுகிறது.

**மலைப் படி மற்றும் குளிர்காலப் படி**

மலைப் பகுதிகளில் உள்ள சத்துணவு மையங்களில் பணியாற்றி வரும் சத்துணவுப் பணியாளர்களுக்கு மலை படி மற்றும் குளிர்கால படி வழங்கப்படுகிறது. வருடம் முழுவதும் மலைப் படியாக அடிப்படை ஊதியத்தில் 20 சதவிகிதமும், குளிர்காலப் படியாக அடிப்படை ஊதியத்தில் 5 சதவிகிதம் வருடத்தில் 4 மாதங்களுக்கு மட்டும் வழங்கப்படுகிறது.

**தற்செயல் விடுப்பு**

சத்துணவுப் பணியாளர் அனைவருக்கும் வருடத்திற்கு 12 நாட்கள் தற்செயல் விடுப்பு வழங்கப்படுகிறது.

## மகப்பேறு விடுப்பு

மே 2015 முதல் திருமணமான பெண் சத்துணவுப் பணியாளர்களுக்கு 180 நாட்கள் ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு அனுமதிக்கப்பட்டுள்ளது.

## கருணை அடிப்படையிலான பணி நியமனம்

பணியிடையே காலமாகும் சத்துணவு பணியாளர்களது குடும்பத்திலுள்ள தகுதியுடைய பெண் வாரிசுதாரர்களுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சியரே கருணை அடிப்படையிலான பணி நியமனங்கள் செய்திட அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. விதித்தளர்வு தேவைப்படும் இனங்களுக்கு மட்டும் விண்ணப்பங்கள் அரசிற்கு பரிந்துரை செய்து அரசாணைகள் வெளியிடப்பட்டு வருகிறது.

**புதிய மருத்துவ காப்பீட்டுத் திட்டம்**

புதிய சுகாதார காப்பீடு திட்டத்தின் கீழ் நான்கு தொகுப்பாண்டுகளில் உயர் மருத்துவச் சிகிச்சைக்காக ரூ.5.00 இலட்சம் வரை அனுமதிக்கப்படுகிறது.

**குடும்ப நல நிதி**

பணியிடையே காலமாகும் சத்துணவுப் பணியாளர்களது குடும்பத்திற்கு குடும்ப நல நிதியாக ரூ.5.00 இலட்சம் வழங்கப்படுகிறது.

**ஓய்வூதியப் பலன்கள்**

- சமையலர் மற்றும் சமையல் உதவியாளரின் ஓய்வுபெறும் வயது 58-லிருந்து 60ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- சத்துணவுப் பணியாளர் ஓய்வு பெறும் போது ஒட்டு மொத்தத் தொகை வழங்கப்படுகிறது. சத்துணவு அமைப்பாளர்களுக்கு ரூ.1.00 இலட்சமும் சமையல் மற்றும் சமையல் உதவியாளர்களுக்கு ரூ.50,000/-மும் வழங்கப்படுகிறது. சிறப்பு ஓய்வூதியமாக ரூ.2000/- மாதந்தோறும் வழங்கப்படுகிறது.

- மருத்துவ காரணங்களினால் சத்துணவுப் பணியாளர்கள் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிப்படுகின்றனர்.

- சத்துணவுப் பணியாளர்களை 01.08.2015 முதல் பொது வருங்கால வைப்புநிதி திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டு மாதச் சந்தாவாக அவர்களது அடிப்படை ஊதியத்தில் 12 சதவிகிதம் பிடித்தம் செய்யப்படுகிறது.

- மாதம் ஒன்றுக்கு ரூ.70 வீதம் சத்துணவுப் பணியாளர்களது ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்து அவர்கள் ஓய்வு பெறும் போது பிடித்தம் செய்யப்படும் தொகை மற்றும் வட்டியுடன் அரசின் பங்களிப்பாக ரூ.10,000/- சேர்த்து சிறப்பு சேம நல நிதியாக வழங்கப்படுகிறது.

**நிதி ஒதுக்கீடு**

**மதிய உணவு திட்டத்தை செயல்படுத்த 2024-2025-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில் ரூ.2,834 கோடி செய்யப்பட்டுள்ளது.**

*****

# அத்தியாயம் – 4

## ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள்

### முன்னுரை

ஊட்டச்சத்து குறைபாடு என்பது குழந்தையின் உடல் வளர்ச்சி., நோய் எதிர்ப்பாற்றல், அறிவுத்திறன் வளர்ச்சியில் கடுமையான விளைவுகளை ஏற்படுத்துவதுடன், அவர்களது உடல் நலம் மற்றும் உற்பத்தி திறனிலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. ஊட்டச்சத்திற்கு முக்கியத்துவம் அளித்திடும் வகையில் வீட்டிற்கு வெளியே நிறுவன கட்டமைப்பின் கீழ் முறையான குழந்தை பராமரிப்பு சேவைகளை வழங்குவதில் தமிழ்நாட்டிற்கு நீண்ட கால வரலாறு உள்ளது. தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் 1975–ஆம் ஆண்டு 0–6 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் ஊட்டச்சத்து மற்றும் சுகாதார நிலையினை மேம்படுத்தும் நோக்கத்துடன் தொடங்கப்பட்டது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் முழுமையான சமுதாயம் சார்ந்த முக்கிய திட்டமாக செயல்படுகிறது. இத்திட்டமானது குழந்தைகளின் முழுமையான வளர்ச்சியினை இலக்காக கொண்டு ஊட்டச்சத்து, நோய்த்தடுப்பு மற்றும் முன் பருவக்கல்வி போன்ற முக்கிய கூறுகளை உள்ளடக்கிய உலகின் மிகப் பெரிய முன் முயற்சிகளுள் ஒன்றாகத் திகழ்கிறது. இத்திட்டமானது குழந்தைகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு நாட்டின் அக்கறையினை உறுதி செய்வதுடன், பயனாளிகளுக்கு ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் முறைசாரா முன் பருவக்கல்வி ஆகிய இரட்டை சவால்களை எதிர்கொள்ள உதவுகிறது.

அங்கன்வாடி சேவைகள் திட்டம், தற்போது திறன்மிகு அங்கன்வாடி மற்றும் போஷன் 2.0 யின் ஒரு பகுதியாக செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் மேற்கண்ட சவால்களை எதிர்கொள்ள வெளிப்படைத்தன்மை, பொறுப்புணர்வு, உணவு

பன்முகத்தன்மை, பயனாளிகள் அளவில் மேம்படுத்தப்பட்ட பங்களிப்பு மற்றும் கடைக்கோடியில் உள்ள பயனாளிகள் வரை சேவைகள் வழங்குதல், பாதிக்கப்பட வாய்ப்புள்ள பழங்குடியின குழுக்கள்/குடியிருப்புகள் பகுதியில் தொடங்கப்பட்ட 10 குழந்தைகள் மையங்கள் உள்ளிட்ட, 54,449 குழந்தைகள் மையங்கள் மூலம், சென்றடையும் வகையில் நுணுக்கமாக வடிவமைக்கப்பட்டு உள்ளது. அங்கன்வாடி சேவைகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ள இணை உணவு திட்டம், போஷான் 2.0 திட்டத்தின் கீழ் வளரிளம் பெண்களுக்கான திட்டம் மற்றும் போஷான் அபியான் திட்டங்கள் ஒருங்கிணைந்த முறையில் ஊட்டச்சத்து அளிக்கும் விரிவான அணுகுமுறையை கொண்டுள்ளது.

### 4.1 குறிக்கோள்

போஷன் 2.0–ஆனது, 6 வயது வரையிலான குழந்தைகள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள்

மற்றும் வளரிளம் பெண்களின் (14–18 வயது) ஊட்டச்சத்து குறைபாட்டினை எதிர்கொள்வதை இலக்காக கொண்டுள்ளது. இதன் முக்கிய நோக்கமானது நிலையான நீடித்த வளர்ச்சியின் குறிக்கோளான (Sustainable Development Goal) SDG– 2 பசிபிணியின்மை மற்றும் SDG –4 தரமான கல்வி வழங்குவதை அடைவதற்கு குறிப்பிடத்தகுந்த தாக்கத்தினை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. போஷன் 2.0 ஊட்டச்சத்து, ஆரம்ப கால குழந்தை பருவ பராமரிப்பு மற்றும் கல்வியின் மூலம் குழந்தைகளின் முழுமையான வளர்ச்சி மற்றும் ஆரோக்கியமான எதிர்கால சந்ததியினரை உருவாக்குவதற்கு முன்னுரிமை அளிக்கிறது.

## 4.2 நோக்கங்கள்

- நாட்டின் மனித வள மூலதன வளர்ச்சிக்கு பங்களித்தல்.
- ஊட்டச்சத்து குறைபாட்டின் சவால்களை எதிர்கொள்ளுதல்.

- ஊட்டச்சத்து விழிப்புணர்வினை ஊக்குவித்தல் மற்றும் நிலையான ஆரோக்கியம், நல்வாழ்வுக்கான நல்ல உணவுப் பழக்கங்களை ஊக்குவித்தல்,
- முக்கிய உத்திகளை கொண்டு ஊட்டச்சத்து தொடர்பான குறைபாடுகளை களைதல்.

### 4.3 அங்கன்வாடி சேவையின் விவரம்

தகுதியான பயனாளிகளுக்கு அங்கன்வாடி சேவையின் மூலம் கீழ்கண்ட ஆறு சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

1. இணை உணவு வழங்குதல்
2. முறைசாரா முன்பருவகல்வி வழங்குதல்
3. ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரகல்வி வழங்குதல்
4. சுகாதார பரிசோதனை
5. நோய் தடுப்பு மருந்துகள் அளித்தல்
6. பரிந்துரை சேவைகள்

மேற்கண்ட 6 சேவைகளில் மூன்று சேவைகள், அதாவது நோய்த்தடுப்பு மருந்துகள், சுகாதார பரிசோதனை மற்றும் பரிந்துரை சேவைகள் ஆகியவை சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையின் கீழ்

செயல்பட்டு வரும் தேசிய சுகாதார இயக்கம், பொது சுகாதார உள்கட்டமைப்பு மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

### 4.4 இலக்கு பயனாளிகள்

இத்திட்டத்தின் முதன்மை பயனாளிகள் பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆவர். குறிப்பாக முதன்மைப் பயனாளிகளான, 6 வயதுக்குட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், 14 முதல் 49 வயதுக்குட்பட்ட பெண்கள், இத்திட்டத்தின் மூலம் இணை உணவு, வளர்ச்சி கண்காணிப்பு மற்றும் ஊக்குவிப்பு, நோய்த்தடுப்பு, சுகாதாரப் பரிசோதனை, பரிந்துரை சேவைகள், ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி, ஆரம்பகால குழந்தைபருவ பராமரிப்பு கல்வி ஆகியவற்றை பெறுகின்றனர். பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு அந்தப் பகுதியில் விரிவான குடும்பக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு பயனாளிகள் எவரும் சேவைகளைப் பெறுவதில் இருந்து விடுபடாமல் இருப்பதை உறுதி

செய்திடும் வகையில் தகுதியான அனைத்து பயனாளிகளும் தேர்வு செய்யப்படுகின்றனர்.

### 4.5 பயனாளிகளின் விவரம்

| பயனாளிகள் | வழங்கப்படும் சேவைகள் | பயனாளிகளின் எண்ணிக்கை (31.03.2024 அன்று நிலவரப்படி) |
|---|---|---|
| 6 மாதம் முதல் 1 வயது வரையிலான குழந்தைகள் | • இணை உணவு<br>• தடுப்பூசிகள்<br>• சுகாதார பரிசோதனை<br>• பரிந்துரை சேவைகள் | 3,98,324 |
| 1 வயது முதல் 2 வயது வரையிலான குழந்தைகள் | | 7,09,597 |
| 2– 3 வயது வரையிலான குழந்தைகள் | • இணை உணவு<br>• தடுப்பூசிகள்<br>• சுகாதார பரிசோதனை<br>• பரிந்துரை சேவைகள்<br>• முறைசாரா முன்பருவகல்வி | 4,03,818 |
| 3 – 6வயது வரையிலான குழந்தைகள் | | 6,99,775 |

| | | |
|---|---|---|
| கர்ப்பிணிப் பெண்கள் | • இணை உணவு<br>• தடுப்பூசிகள்<br>• சுகாதார பரிசோதனை<br>• பரிந்துரை சேவைகள்<br>• ஊட்டச்சத்து மற்றும் சுகாதார கல்வி | 3,26,532 |
| பாலூட்டும் தாய்மார்கள் | | 2,84,034 |
| இரண்டு முன்னேற விழையும் மாவட்டங்களில் 14 – 18 வயது வரையிலான வளரிளம் பெண்கள் | • இணை உணவு<br>• வாழ்க்கைக் கல்வி | 45,065 |
| **மொத்த பயனாளிகள்** | | **28,67,145** |

## 4.6 நிதி ஒதுக்கீடு விவரங்கள் (2024–2025)

(ரூபாய். கோடியில்)

| மொத்த நிதி ஒதுக்கீடு | ஒன்றிய அரசின் பங்கு | மாநில அரசின் பங்கு | மாநில அரசின் தனிப்பட்ட பங்கு | மாநில அரசின் மொத்த பங்கு (3+4) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 3269.91 | 758.10 | 636.30 | 1875.51 | 2511.81 |

ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசின் செலவினத்திற்கான நிதி பகிர்வானது துணை ஊட்டச்சத்திற்கு 50 : 50, அங்கன்வாடி சேவைக்கு 60 : 40 என்ற முறையில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

## 4.7 துணை ஊட்டச்சத்து

அங்கன்வாடி சேவையின் கீழ் வழங்கப்பட்டு வரும் ஆறு சேவைகளில் ஒன்றான துணை ஊட்டச்சத்தானது குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் முன்னேற விழையும் மாவட்டங்களான இராமநாதபுரம், விருதுநகர் மாவட்டங்களில் உள்ள குழந்தைகள் மையங்களில்

பதிவு செய்துள்ள 14 – 18 வயது வரையிலான வளரிளம் பெண்களுக்கு 54,449 குழந்தைகள் மையங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. பரிந்துரைக்கப்பட்ட உணவுக் கொடுப்பளவு (RDA) மற்றும் சராசரி தினசரி உட்கொள்ளல் (ADI) ஆகியவற்றுக்கு இடையே உள்ள இடைவெளியைக் குறைக்க ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் கீழ் துணை உணவு வழங்குதல் முதன்மை திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் (NFSA), 2013ன்படி 6 மாதம் முதல் 6 வயது வரையிலான குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து வழங்குவது கட்டாயமாகும்.

**துணை ஊட்டச்சத்து திட்டத்தின் இரண்டு முக்கிய கூறுகள்**

1. சத்துமாவு
2. சூடான சமைத்த உணவு

தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013-ன்படி, பயனாளிகளுக்கு ஒரு வருடத்தில் 300 நாட்களுக்கு துணை உணவு வழங்கப்பட வேண்டும்.

**ஒன்றிய அரசால் வரன்முறைப்படுத்தப்பட்டுள்ள ஊட்டச்சத்து அளவு மற்றும் நாளொன்றுக்கான செலவினத் தொகை விவரங்கள் பின்வருமாறு**

| பயனாளிகளின் வகைகள் | நாளொன்றுக்கு ஒரு பயனாளிக்கு வழங்கப்பட வேண்டிய ஊட்டச்சத்து அளவு | | நாளொன்றுக்கு ஒரு பயனாளிக்கான செலவினம் (ரூபாய்) |
|---|---|---|---|
| | புரதம் (கிராம்) | சக்தி (கி.கலோரி) | |
| 6 மாதம் முதல் 6 வயது வரை | 12-15 | 500 | 8.00 |
| 6 மாதம் முதல் 6 வயது வரை (கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகள்) | 20-25 | 800 | 12.00 |
| கர்ப்பிணி பெண்கள் பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வளரிளம் பெண்கள் (14-18 வயது வரை) | 18-20 | 600 | 9.50 |

#### 4.7.1 சத்து மாவு

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வரும் சத்துமாவின் தரத்தினை உயர்த்துவது குறித்து மற்றும் சத்துமாவு கலவை மாற்றியமைக்க நிபுணர் குழு ஒன்று தமிழ் நாடு அரசால் அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாடு அரசால் அமைக்கப்பட்ட நிபுணர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பயனாளிகளுக்கு சத்துமாவு வழங்கப்படுகிறது. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பயனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டிய சத்துமாவு இரண்டு வெவ்வேறு கலவைகளில் வழங்கப்படுகிறது. ஒன்று 6 மாதங்கள் முதல் 6 வயது வரையிலான குழந்தைகளுக்கு, மற்றொன்று வளரிளம் பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு வழங்கப்படுகிறது. குழந்தைகளுக்கு

வழங்கப்படும் சத்துமாவு BIS தரநிலைகள் 11536:2022 ன்படி ஜனவரி 2023 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

**6 மாதம் முதல் 6 வயது வரையிலான குழந்தைகளுக்கான துணை உணவு (சத்துமாவு) கலவை விவரம்**

| வ.எண் | மூலப்பொருட்கள் | சதவீதம் (%) |
|---|---|---|
| 1. | வறுத்த கோதுமை மாவு | 45.50 |
| 2. | முளைக்கட்டிய கேழ்வரகு மாவு | 5.00 |
| 3. | கொழுப்பு நீக்கப்படாத சோயா மாவு | 16.50 |
| 4. | வெல்லம் | 24.00 |
| 5. | வறுத்த நிலக் கடலைமாவு | 8.00 |
| 6. | வைட்டமின்கள்மற்றும் தாதுக்கள் கலவை | 1.00 |
| | **மொத்தம்** | **100.00** |

100 கிராம் சத்துமாவில் குறைந்த பட்சம் 400 கிலோ கலோரி ஆற்றல் மற்றும் 15 கிராம் புரதம் உள்ளது.

**வளரிளம் பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான துணை உணவு (சத்துமாவு) கலவை விவரம்**

| வ. எண் | மூலப்பொருட்கள் | சதவீதம் (%) |
|---|---|---|
| 1. | வறுத்த கோதுமைமாவு | 45.50 |
| 2. | வறுத்த கடலைப் பருப்பு மாவு | 10.00 |
| 3. | வறுத்த உளுந்து பருப்பு | 5.00 |
| 4. | வறுத்த நிலக் கடலைமாவு | 4.00 |
| 5. | செறிவூட்டப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் | 5.00 |
| 6. | முளைக்கட்டிய கேழ்வரகு மாவு | 5.00 |
| 7. | கொழுப்பு நீக்கப்படாத சோயாமாவு | 10.00 |
| 8. | வெல்லம் | 14.00 |
| 9. | வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள் கலவை | 1.50 |
| | **மொத்தம்** | **100.00** |

வளரிளம் பெண்கள், கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கான 100 கிராம்

சத்துமாவில் குறைந்தபட்சம் 400 கிலோ கலோரி ஆற்றல் மற்றும் 14 கிராம் புரதம் உள்ளது.

6 மாதங்கள் முதல் 6 வயது வரையிலான கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளின் கூடுதல் ஊட்டச்சத்துத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, சத்துமாவுடன் செறிவூட்டப்பட்ட பிஸ்கட்கள் ஜூன் 2023 முதல் வீட்டிற்கே எடுத்து சென்று உண்ணும் வகையில் வழங்கப்பட்டு வருகிறது.

**கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளுக்கான செறிவூட்டப்பட்ட பிஸ்கெட்டின் கலவை விவரம்**

| வ. எண் | மூலப்பொருட்கள் | சதவீதம் (%) |
|---|---|---|
| 1. | கோதுமை மாவு | 30.00 |
| 2. | மைதா | 10. 00 |
| 3. | வேர்க்கடலை துருவல் | 4.00 |
| 4. | கேழ்வரகு மாவு | 7.00 |
| 5. | சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய் | 24.74 |
| 6. | சர்க்கரை | 23.00 |

| | | |
|---|---|---|
| 7. | வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள் கலவை | 1.00 |
| 8. | சமையல் சோடா (Baking Powder) | 0.26 |
| | **மொத்தம்** | **100.00** |

100 கிராம் செறிவூட்டப்பட்ட பிஸ்கெட்டில் குறைந்தபட்சம் 500 கிலோ கலோரி ஆற்றல் மற்றும் 6 கிராம் புரதம் உள்ளது.

### 4.7.2 சத்துமாவு கொள்முதல்

2 வயது முதல் 6 வயது வரையிலான குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு தேவையான 65% சத்துமாவு, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகள் துறையின் கீழ் செயல்படும் 25 சத்துமாவு தயாரிப்போர் மகளிர் மேம்பாட்டு தொழிற்கூட்டுறவு சங்கங்களில் இருந்து கொள்முதல் செய்யப்படுகிறது. மீதமுள்ள 35% தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிச் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000–ன்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு தனியார் சத்துமாவு தயாரிக்கும்

நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

### 4.7.3 தரப் பரிசோதனை

மகளிர் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களால் தயாரிக்கப்படும் சத்துமாவு தரப் பரிசோதனைக்காக அரசால் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டு, சான்றிதழைப் பெற்ற பிறகே, குழந்தைகள் மையங்களுக்கு வழங்கப்படுகிறது.

மேலும், குழந்தைகள் மையங்களுக்கு வழங்கப்படும் சத்துமாவு தரத்தை உறுதி செய்வதற்காக, ஒவ்வொரு விநியோகதாரர் வழங்கும் சத்துமாவு மாதிரிகள் எதேச்சை எண் (Random Basis) அடிப்படையில், தேர்ந்தெடுக்கப்பட்ட குழந்தைகள் மையங்களிலிருந்து எடுக்கப்பட்டு, மாநில அரசு ஆய்வகங்களுக்கு, மாவட்ட திட்ட அலுவலர்களால் தரபரிசோதனை செய்ய அனுப்பி வைக்கப்படுகிறது.

**பயனாளிகளுக்கு நாளொன்றுக்கு வழங்கப்படும் துணை ஊட்டச்சத்து உணவுகளின் விவரம்**

| பயனாளிகளின் வகை | பயனாளிகளுக்கு வழங்கப்படும் உணவு |
|---|---|
| 6 மாதங்கள் – 1 வருடம் குழந்தைகள் | ஒரு நாளைக்கு 125 கிராம் சத்துமாவு மற்றும் கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளுக்கு கூடுதலாக 60 கிராம் செறிவூட்டப்பட்ட பிஸ்கெட் வழங்கப்பட்டு வருகிறது. |
| 1–2 வயது குழந்தைகள் | அனைத்து குழந்தைகளுக்கும் நாளொன்றுக்கு 125 கிராம் சத்துமாவு மற்றும் வாரத்திற்கு மூன்று முட்டைகள் மற்றும் கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளுக்கு கூடுதலாக நாளொன்றுக்கு 60 கிராம் செறிவூட்டப்பட்ட பிஸ்கெட் வழங்கப்பட்டு வருகிறது. |
| 2–6 வயது குழந்தைகள் | ஒரு நாளைக்கு 50 கிராம் சத்துமாவு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், வாரத்தில் 6 நாட்களுக்கு சூடான சமைத்த சத்தான உணவும், வாரத்தில் 3 நாட்களுக்கு முட்டையுடன் (திங்கள், புதன் மற்றும் வியாழன்), செவ்வாய்க் கிழமை கருப்பு கொண்டைக் கடலை/ பச்சைப்பயறு மற்றும் வெள்ளிக் கிழமைகளில் |

| | |
|---|---|
| | வேகவைத்த உருளைக் கிழங்கு அனைவருக்கும் வழங்கப்படுகிறது. மேலும் ஞாயிற்றுக் கிழமை அனைத்து குழந்தைகளுக்கும் அரிசி மற்றும் பருப்பு உலர் உணவுப் பொருட்களாக வழங்கப்படுகிறது. மேலே கூறப்பட்டவை தவிர, கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளுக்கு நாளொன்றுக்கு 30 கிராம் செறிவூட்டப்பட்ட பிஸ்கெட் வழங்கப்படுகிறது. |
| கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் | நாளொன்றுக்கு 150 கிராம் சத்துமாவு வழங்கப்படுகிறது. |
| 14 – 18 வயது வரையிலான வளரிளம் பெண்கள் | நாளொன்றுக்கு 150 கிராம் சத்துமாவு வழங்கப்படுகிறது. |

### 4.7.4 சூடான சமைத்த உணவு

நல்ல ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கியமான குழந்தைகள் வலிமையான இந்தியாவை உருவாக்குவார்கள். தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் 2013 இன் படி, 3 முதல் 6 வயதுக்குட்பட்ட

குழந்தைகளுக்கு தினமும் 500 கிலோ கலோரி ஆற்றல் மற்றும் 12 – 15 கிராம் புரதம் வழங்கப்பட வேண்டும். இந்த வயதிற்குட்பட்ட ஒரு குழந்தை ஒரே அமர்வில் 500 கலோரிகளை உட்கொள்ளும் திறன் கொண்டிராததால், காலை, மாலை சிற்றுண்டி மற்றும் சூடான சமைத்த உணவை வழங்க இந்த சட்டம் பரிந்துரைக்கிறது.

தமிழ்நாட்டில், குழந்தைகள் மையங்களில் முன்பருவக் கல்விக்காக சேர்க்கப்படும் 2 முதல் 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு கீழ்க்கண்டுள்ள உணவுகள் வழங்கப்படுகின்றன.

1. காலை மற்றும் மாலை சிற்றுண்டியாக 25 கிராம் சத்து மாவு கொழுக்கட்டை.
2. இந்த சிறு குழந்தைகளின் செரிமான திறனைக் கருத்தில் கொண்டு, ஒரு குழந்தைக்கு ஒரு நாளைக்கு 80 கிராம் அரிசி பயன்படுத்தி சூடான சமைத்த மதிய உணவு வழங்குவதற்காக வித விதமான சிறப்பு உணவு வகைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

3. குழந்தைகளின் புரதச்சத்தை அதிகரிக்க, 1989 ஆம் ஆண்டு முட்டை வழங்குவது அறிமுகப்படுத்தப்பட்டது. 1 முதல் 6 வயது வரையிலான குழந்தைகளுக்கு வாரத்திற்கு 3 முட்டைகள் வழங்கப்படுகின்றன.
4. செவ்வாய்க் கிழமைகளில் 20 கிராம் வேகவைத்த கருப்பு கொண்டைக்கடலை / பச்சைப்பயிறு வழங்கப்படுகிறது. அனைத்து வெள்ளிக் கிழமைகளிலும் கூடுதலான கார்போஹைட்ரேட் சக்திக்காக 20 கிராம் வேகவைத்த உருளைக்கிழங்கு சூடான சமைத்த உணவுடன் வழங்கப்படுகிறது.
5. முட்டை சாப்பிடாத பயனாளிகளுக்கு மாற்று உணவாக வாழைப்பழம் வழங்கப்படுகிறது.

| நாள் | உணவு வகை |
|---|---|
| திங்கட்கிழமை | தக்காளி சாதம் + வேகவைத்த முட்டை |
| செவ்வாய்க்கிழமை | கலவை சாதம் + வேகவைத்த கருப்பு கொண்டைக் கடலை / பச்சைப்பயிறு |
| புதன்கிழமை | காய்கறி கலவை சாதம் + வேகவைத்த முட்டை |
| வியாழக்கிழமை | எலுமிச்சை சாதம் + வேகவைத்த முட்டை |
| வெள்ளிக்கிழமை | பருப்பு சாதம் + வேகவைத்த உருளைக்கிழங்கு |

| | |
|---|---|
| சனிக்கிழமை | கலவை சாதம் |
| ஞாயிற்றுக்கிழமை | வீட்டிற்கு எடுத்துச் சென்று பயன்படுத்தும் வகையில் உலர் உணவுப் பொருட்கள் (அரிசி மற்றும் பருப்பு) |

பயணாளி ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு தோராயமாக ரூ.1.24 என்று வழங்கப்பட்டு வந்த காய்கறி, தாளிதப் பொருட்கள், உப்பு மற்றும் எரிபொருள் அடங்கிய உணவூட்டுச் செலவினம் 23.01.2024 முதல் பயணாளி ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.2.39 ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது (செலவினம்: காய்கறிகள் ரூ.1.33, தாளிதப் பொருட்கள் மற்றும் உப்பு ரூ.0.46 மற்றும் எரிபொருள் ரூ .0.60).

## நாளொன்றுக்கு பயனாளிகளுக்கு வழங்கப்படும் ஊட்டச்சத்து அளவு விவரம்

| வயது | சத்துமாவில் உள்ள ஊட்டச்சத்து விவரம் | | | சூடான சமைத்த உணவில் உள்ள ஊட்டச்சத்து விவரம்* | | [illegible] உள்ள ஊட்டச்சத்து விவரம் | | மொத்த ஊட்டச்சத்து | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நாளொன்றுக்கு வழங்கப்படும் சத்து மாவின் அளவு (கிராம்) | புரதம் (கிராம்) | சக்தி (கி.கலோரி) | சராசரி புரதம் (கிராம்) | சராசரி சக்தி (கி. கலோரி) | சராசரி புரதம் (கிராம்) | சராசரி சக்தி (கி. கலோரி) | புரதம் (கிராம்) | சக்தி (கி. கலோரி) |
| 6 மாதம் முதல் 1 வயது குழந்தைகள் | 125 | 16.75 | 500 | – | – | – | – | 16.75 (GO=12-15) | 500 (GO=500) |
| 6 மாதம் முதல் 1 வயது குழந்தைகள் (கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடைய) | 125 | 16.75 | 500 | – | – | 3.50 (50 கிராம்) | 300 (50 கிராம்) | 22.26 (GO=20-25) | 800 (GO=800) |
| 1 வயது முதல் 2 வயது குழந்தைகள் | 125 | 16.75 | 500 | 3.00 (வாரம் 3 முட்டை மட்டும்) | 38 (வாரம் 3 முட்டை மட்டும்) | – | – | 21.75 (GO=12-15) | 538 (GO=500) |
| 1 வயது முதல் 2 வயது குழந்தைகள் (கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடைய) | 125 | 16.75 | 500 | 3.00 (வாரம் 3 முட்டை மட்டும்) | 38 (வாரம் 3 முட்டை மட்டும்) | 3.50 (50 கிராம்) | 300 (50 கிராம்) | 28.25 (GO=20-25) | 838 (GO=800) |
| 2 வயது முதல் 3 வயது குழந்தைகள் | 50 | 7.50 | 300 | 13.27 | 463.79 | – | – | 20.77 (GO=12-15) | 763.79 (GO=500) |
| 2 வயது முதல் 3 வயது குழந்தைகள் (கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடைய) | 50 | 7.50 | 300 | 13.27 | 463.79 | 1.60 (30 கிராம்) | 150 (30 கிராம்) | 22.37 (GO=20-25) | 913.79 (GO=800) |

| வகை | சத்துமாவில் உள்ள ஊட்டச்சத்து விவரம் | | | சூடான சமைத்த உணவில் உள்ள ஊட்டச்சத்து விவரம்* | | [illegible] உள்ள ஊட்டச்சத்து விவரம் | | மொத்த ஊட்டச்சத்து | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | [illegible] சத்து மாவின் அளவு (கிராம்) | புரதம் (கிராம்) | சக்தி (கி.கலோரி) | சராசரி புரதம் (கிராம்) | சராசரி சக்தி (கி. கலோரி) | சராசரி புரதம் (கிராம்) | சராசரி சக்தி (கி. கலோரி) | புரதம் (கிராம்) | சக்தி (கி. கலோரி) |
| 3 வயது முதல் 6 வயது குழந்தைகள் | 80 | 7.50 | 200 | 13.27 | 488.73 | - | - | 20.77 (GOI=12-15) | 588.73 (GOI=500) |
| 3 வயது முதல் 6 வயது குழந்தைகள் (கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடைய) | 80 | 7.50 | 200 | 13.27 | 488.73 | 1.50 (30 கிராம்) | 150 (30 கிராம்) | 23.57 (GOI=20-25) | 818.73 (GOI=800) |
| கர்ப்பிணி பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் | 180 | 21.00 | 600 | - | - | - | - | 21.00 (GOI=18-20) | 600 (GOI=600) |

*சூடான சமைத்த உணவு – கலவை சாதம், வாரத்திற்கு 3 முட்டை, செவ்வாய்கிழமையில் கருப்பு கொண்டைக்கடலை/பச்சைப்பயறு மற்றும் வெள்ளிக்கிழமையில் உருளைக்கிழங்கு.

## நாளொன்றுக்கு பயனாளிகளுக்கு தினசரி வழங்கப்படும் இணைஉணவிற்கான (சத்துமாவு + சூடான சமைத்த மதிய உணவு + முட்டை ) சராசரி செலவின விவரம்

| [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] (ரூ) | [illegible] (ரூ) |
|---|---|---|---|---|---|
| 6 மாதம் முதல் 1 வயது குழந்தைகள் | 6.00 | 8.67 | 4.00 | 4.00 | 3.67 |
| 6 மாதம் முதல் 1 வயது குழந்தைகள் (கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடைய) | 12.00 | 15.67 | 6.00 | 6.00 | 3.67 |
| 1 வயது முதல் 2 வயது குழந்தைகள் | 8.00 | 11.05 | 4.00 | 4.00 | 3.05 |
| 1 வயது முதல் 2 வயது குழந்தைகள் (கடுமையான ஊட்டச்சத்து குறைபாடு உடைய) | 12.00 | 18.28 | 6.00 | 6.00 | 6.28 |
| 2 வயது முதல் 6 வயது குழந்தைகள் | 8.00 | 9.14 | 4.00 | 4.00 | 1.14 |
| 2 வயது முதல் 6 வயது குழந்தைகள் (கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடைய) | 12.00 | 12.74 | 6.00 | 6.00 | 0.74 |
| கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் | 9.50 | 10.47 | 4.75 | 4.75 | 0.97 |
| 14 – 18 வயது வளரிளம் பள்ளி செல்லா பெண்கள் | 9.50 | 10.47 | 4.75 | 4.75 | 0.97 |

### 4.7.5 செறிவூட்டப்பட்ட உணவுப் பொருட்களின் பயன்பாடு

குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வளர்இளம் பெண்கள் இடையே உள்ள நுண்ணூட்டச்சத்து குறைபாடு, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம் மூலம் வழங்கப்படும் கீழ்க்கண்ட செறிவூட்டப்பட்ட உணவுப் பொருட்களின் மூலம் களையப்படுகிறது.

1. சூடான சமைத்த உணவு தயாரிப்பில் இரும்பு மற்றும் அயோடின் சத்துக்களால் இருமுறை செறிவூட்டப்பட்ட உப்பு பயன்படுத்தப்படுகிறது.
2. வைட்டமின் ஏ மற்றும் வைட்டமின் டி ஆகியவற்றால் செறிவூட்டப்பட்ட பாமோலின் எண்ணெய் சூடான சமைத்த உணவு தயாரிக்க பயன்படுத்தப்படுகிறது.
3. வைட்டமின்கள் மற்றும் தாதுப் பொருட்கள் செறிவூட்டப்பட்ட துணை உணவு (சத்து மாவு) மற்றும் செறிவூட்டப்பட்ட பிஸ்கட்கள் பயனாளிகளுக்கு வழங்கப்படுகிறது.

4. சூடான சமைத்த உணவு வழங்க இரும்பு, ஃபோலிக் அமிலம் மற்றும் வைட்டமின்-பி12 ஆகியவற்றால் செறிவூட்டப்பட்ட அரிசி பயன்படுத்தப்படுகிறது.

## 4.8 மருந்துப் பெட்டிகள் மற்றும் சுகாதாரப் பெட்டகங்கள் வழங்குதல்

சிறிய உடல் உபாதைகளான காய்ச்சல், வயிற்றுப்போக்கு, காயத்திற்கு கட்டு போடுதல், தோல் தொற்று போன்றவற்றிற்கு சிகிச்சை அளிக்கும் வகையில் அங்கன்வாடி மையங்களுக்கு மருந்துப் பெட்டிகள் வழங்கப்படுகின்றன. குழந்தைகளிடையே சுகாதார நடைமுறைகளை ஊக்குவிக்கவும், குழந்தைகள் மையங்களில் அவர்களை சுத்தமாகவும், நேர்த்தியாகவும், வைத்திருக்கவும் கூடுதலாக சுகாதாரப் பெட்டகங்கள் வழங்கப்படுகின்றன. மருந்து பெட்டியில் பாராசிட்டமால் சிரப், பாராசிட்டமால் மாத்திரை, ஓஆர்எஸ் பவுடர், போவிடோன் அயோடின் களிம்பு, இரும்பு மற்றும் ஃபோலிக் ஆசிட் சிரப் மற்றும் மல்டி வைட்டமின் சொட்டு மருந்து ஆகியன

அடங்கியுள்ளன. சுகாதாரப் பெட்டகங்களில் தரையை சுத்தம் செய்யும் திரவம், சோப்பு மற்றும் கிருமி நாசினி திரவம் ஆகியவை அடங்கி இருக்கும்.

**2024–2025–ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் ரூ.8.17 கோடி வழங்கப்பட்டுள்ளது.**

**4.9 வளரிளம் பெண்களுக்கான திட்டம் (SAG)**

போஷன் 2.0 இன் கீழ், வளரிளம் பெண்களுக்கான திட்டம் திருத்தப்பட்டு, நாட்டில் அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் உள்ள 14 – 18 வயதுக்குட்பட்ட வளரிளம் பெண்களுக்கு ஊட்டச்சத்து வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் வளரிளம் பெண்களுக்கு இரும்பு (ம) போலிக் அமிலம் மாத்திரை (IFA) வழங்குதல், சுகாதாரம், பரிந்துரை சேவைகள், ஊட்டச்சத்து, சுகாதார கல்வி மற்றும் வாழ்க்கைத் திறன் கல்வி போன்றவை வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் பலன் பெறும் அனைத்து பயனாளிகளுக்கும் ஆதார் எண் அவசியம்.

தமிழகத்தில், இளம்பெண்களுக்கான திட்டம் (SAG) ராமநாதபுரம் மற்றும் விருதுநகர் ஆகிய இரண்டு மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**மேற்படி திட்டத்திற்காக 2024–25–ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் 8.35 கோடி வழங்கப்பட்டுள்ளது.**

### 4.9.1 ஊட்டச்சத்து வழங்கும் திட்டம்

14 முதல் 18 வயதுக்குட்பட்ட வளரிளம் பெண்களுக்கு 600 கலோரிகள், 18–20 கிராம் புரதம் நுண்ணூட்டச் சத்துக்கள் அடங்கிய சத்துமாவு வீட்டிற்கே எடுத்துச் சென்று உண்ணும் வகையில் வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு ஒரு நாளைக்கு 150 கிராம் சத்து மாவு வழங்கப்படுகிறது. இதில் 21 கிராம் புரதம் மற்றும் 600 கலோரிகள் உள்ளன.

### 4.9.2 ஊட்டச்சத்து சாராத திட்டம்

ஊட்டச்சத்து அல்லாத திட்டத்தின் கீழ், சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, திறன் மேம்பாட்டுக் கழகம்,

கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறைகள் மூலம் வளரிளம் பெண்களுக்கு வாழ்க்கைத் திறன் கல்வி வழங்கப்படுகிறது.

## 4.10 முன்பருவக்கல்வி குழந்தைகளுக்கு இரண்டு இணை வண்ண சீருடைகள் வழங்குதல்

பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை குழந்தைகள் மையத்திற்கு அனுப்புவதை ஊக்குவிக்கும் பொருட்டும், குழந்தைகள் மையங்களுக்கு குழந்தைகளின் வருகையை அதிகரிக்கும் நோக்கில் ஒவ்வொரு வருடமும் குழந்தைகள் மையங்களுக்கு முன்பருவ கல்வி பயில வருகைபுரியும் குழந்தைகளுக்கு ரூ.300/- மதிப்பில் இரண்டு இணை, வண்ண சீருடைகள் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு சீருடை அணிந்து குழந்தைகள் மையத்திற்கு வருகை புரியும் போது அவர்கள் எதிர்காலத்தில் பள்ளிக்கு செல்ல தயார்படுத்தலை உறுதி செய்கிறது. இத்திட்டம் முழுவதும் மாநில

அரசின் நிதியின் மூலம் மட்டுமே செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**இத்திட்டத்திற்காக 2024–25–ஆம் ஆண்டில் ரூ.31.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 4.11 குழந்தைகள் மையங்களின் உட்கட்டமைப்பு வசதிகள்

### (அ) குழந்தைகள் மையங்களுக்கு புதிய கட்டடம் கட்டுதல்

2016– ஆம் ஆண்டு முதல் தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின் ஒருங்கிணைப்புடன் குழந்தைகள் மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் 2016– ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை 7696 குழந்தைகள் மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டது.

**(ஆ) திறன்மிகு குழந்தைகள் மையம்**

6 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் ஊட்டச்சத்தினை, ஊட்டச்சத்து தோட்டங்கள் மூலம் மேம்படுத்தவும், கல்வி வளர்ச்சி திட்டங்களுடன் இணைந்து குழந்தைகளின் படைப்பாற்றல், சமூக வளர்ச்சி, அறிவாற்றல் மற்றும் அறிவுசார் வளர்ச்சியை தூண்டவும், குழந்தைகள் மையங்கள் படிப்படியாக திறன்மிகு குழந்தைகள் மையங்களாக தரம் உயர்த்த கூடுதல் கட்டமைப்புகளான மழைநீர் சேகரிப்பு ஏற்படுத்துதல், குடிநீர் சுத்திகரிப்பான்கள் எல்.இ.டி டிவி/திரைகள் பொருத்துதல் மற்றும் குழந்தைகளின் முன்பருவக் கல்விக்கு ஏற்ற தரமான கற்றல் கருவிகள் இணையதள இணைப்பு பயிற்சி ஓவிய பயிற்சி பலகைகள் வழங்கி எளிய கற்றல் சூழல் வழங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

**2024–25–ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் புதிய குழந்தைகள் மைய கட்டம்**

**கட்டுவதற்கும் மற்றும் குழந்தைகள் மையங்களை திறன்மிகு குழந்தைகள் மையங்களாக தரம் உயர்த்துவதற்கும் ரூ.79.76 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**(இ) குழந்தைகள் மையங்களுக்கு ஆண்டு பராமரிப்பு தொகை**

குழந்தைகள் மைய கட்டடங்களில் ஏற்படும் சிறிய அளவிலான பழுதுகளை சீரமைக்கும் பொருட்டு அரசு கட்டடங்களில் இயங்கும் குழந்தைகள் மையங்களுக்கு மையம் ஒன்றிற்கு ரூ.3000/- வீதம் ஆண்டு பராமரிப்பு தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. இப்பணிக்காக அனுமதிக்கப்பட்ட தொகையினை கொண்டு அத்தியாவசியமான சீரமைப்பு/பராமரிப்பு பணி மேற்கொள்ளப்படும்.

**2024-25-ஆம் ஆண்டில் ரூ.6.24 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 4.12 தேசிய குழந்தைகள் காப்பகத் திட்டம் (பால்னா)

குழந்தைகளுக்கு தரமான பராமரிப்பு வசதிகளை விரைவாக வழங்க மிஷன் சக்தி வழிகாட்டுதல்களின் கீழ் பால்னா திட்டம் வழிவகுக்கிறது. இத்திட்டம் பணிக்கு செல்லும் தாய்மார்களின் குழந்தைகளின் ஊட்டச்சத்து ஆரோக்கியம் மற்றும் அறிவாற்றல் வளர்ச்சி ஆகியவற்றை பாதுகாப்பான சூழலில் வழங்கி பணிக்கு செல்லும் தாய்மார்கள் தங்களது வேலை வாய்ப்புகளை தொடர ஊக்குவிக்கும் .

தேசிய குழந்தைகள் காப்பகத் திட்டத்தின் கீழ் தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பட்ட வரும் குழந்தைகள் காப்பகங்களுக்கு 60:30:10 (ஒன்றிய அரசு : மாநில அரசு : தன்னார்வ தொண்டு நிறுவனம்) என்ற நிதி பகிர்வின் அடிப்படையில் மானியம் வழங்கப்பட்டு வருகிறது .

தற்போது ஒன்றிய அரசின் திருத்திய வழிகாட்டு நெறிமுறைகளின்படி, சமுதாயத்தில் பணிக்கு செல்லும்

தாய்மார்களின் 6 மாதம் முதல் 6 வயது வரையிலான குழந்தைகளை மிகவும் பாதுகாப்பான இடத்தில் பராமரிக்கவும், பணிபுரியும் பெண்கள் தொடர்ந்து பணிக்கு செல்வதை ஊக்குவிக்கும் வகையிலும், தேசிய குழந்தைகள் காப்பகத் திட்டம் பால்னா என்ற பெயரில் மறுவடிவமைப்பு செய்யப்பட்டு அங்கன்வாடி மையம் மற்றும் குழந்தைகள் காப்பகங்கள் தோற்றுவிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி தற்போது 100 குழந்தைகள் மையங்கள், அங்கன்வாடி மையம் இணைந்த குழந்தைகள் காப்பகங்களாக தரம் உயர்த்தப்படும்.

### 4.13 பிரதம மந்திரியின் பழங்குடியினர் மற்றும் ஆதிவாசிகளுக்கான திட்டம் (PM–JANMAN)

பழங்குடியின குழுக்களை மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டு, அவர்களின் வளமான எதிர் காலத்திற்கான அத்தியாவசிய உட்கட்டமைப்பை வழங்குவதன் மூலம் அவர்களின் தனித்துவமான சவால்களை எதிர் கொள்ளவும், அவர்களின் சமூக

பொருளாதார நிலைமைகளை மேம்படுத்தவும் ஒன்றிய அரசு பிஎம் ஜன்மன் **(PM–JANMAN)** என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பழங்குடியின மக்களுக்கு தேவைப்படும் அடிப்படை வசதிகளான பாதுகாப்பான வீடுகள், சுகாதாரமான குடிநீர், சுகாதாரம், அவர்களுக்கு எளிதில் கிடைக்கும் வகையிலான மேம்படுத்திய கல்வி, ஊட்டச்சத்து போன்ற அத்தியாவசிய வசதிகளை வழங்குவது ஆகும்.

இத்திட்டத்தின் கீழ், பழங்குடியின மக்கள் குழுக்களாக வசிக்கும் பகுதிகளில் செங்கல்பட்டு (1 மையம்), தர்மபுரி (3 மையங்கள்), கள்ளக்குறிச்சி (2 மையங்கள்), சேலம் (1 மையம்), திருவள்ளூர் (2 மையங்கள்) மற்றும் திருப்பத்தூர் (1 மையம்) ஆகிய 6 மாவட்டங்களில் 10 புதிய குழந்தைகள் மையங்கள் 15.1.2024 முதல் துவங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

#### 4.14 தேசிய ஊட்டச்சத்துக் குழுமம்

ஊட்டச்சத்துக்கான திட்டத்தில் இருந்துள்ள பல்வேறு குறைபாடுகளை நிவர்த்தி செய்தல், மேம்படுத்துதல், ஊட்டச்சத்து மற்றும் குழந்தை வளர்ச்சியின் முன்னேற்றத்திற்காக அமைக்கப்பட்டுள்ள போஷான் 2.0 வின் முக்கிய கூறுகள் கீழ்கண்டவாறு:

- தற்போது இணை உணவுத் திட்டமானது, 6 மாதங்கள் முதல் 6 வயது வரையிலான குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் முன்னேற விழையும் மாவட்டங்களில் உள்ள வளரிளம் (14–18 வயதுக்குட்பட்ட) பெண்கள் ஆகியோரை உள்ளடக்கியுள்ளது.
- ஆரம்ப கால தூண்டுதல் செயல்பாடுகள் 0–3 வயது வரையில் உள்ள குழந்தைகளுக்காகவும் ஆரம்ப கால குழந்தைப் பருவ பராமரிப்பு மற்றும் கல்வி முன்னெடுப்புகள் 3–6 வயது வரையிலான குழந்தைகளை இலக்காக கொண்டும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

- குழந்தைகள் மையங்களில் உள்கட்டமைப்புகளை மேம்படுத்துதல் என்பது நவீனமயமாக்கப்பட்ட மற்றும் மேம்படுத்தப்பட்ட திறன்மிகு குழந்தைகள் மையங்களாக அறிமுகப்படுத்துவதை உள்ளடக்கியதாகும்.

### 4.14.1 ஊட்டச்சத்துச் செயலி (போஷன் டிராக்கர்)

ஒன்றிய அரசு மூலம், போஷன் 2.0 திட்டத்தின் கீழ் போஷன் டிராக்கர் என்ற செயலி ஜனவரி 2021 ஆண்டு புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த செயலி மூலம், குழந்தைகள் மையத்தில் அங்கன்வாடிப் பணியாளர்களால் மேற்கொள்ளப்படும் அனைத்து பணிகள் மற்றும் பயனாளிகளான பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு வழங்கப்படும் துணை ஊட்டச்சத்து வழங்குதல், வளர்ச்சியை கண்காணித்தல் மற்றும் முக்கிய சேவைகள் முழுமையான அளவில் கண்காணிக்கப்படுகிறது. இச்செயலியில் 54,449 குழந்தை மையங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

| குறியீடு | NFHS-4 | | NFHS-5 (2019-21) | | போஷன் டிராக்கர் பிப்ரவரி 2024 | நிலை |
|---|---|---|---|---|---|---|
| | இந்தியா அளவில் | மாநிலம் அளவில் | இந்தியா அளவில் | மாநிலம் அளவில் | தமிழ்நாடு | |
| குள்ளத் தன்மை (%) | 38.40 | 27.10 | 35.50 | 25.00 | 15.8 | முன்னேற்றம் |
| மெலிவுத் தன்மை(%) | 21.00 | 19.70 | 19.30 | 14.60 | 3.92 | முன்னேற்றம் |
| எடை குறைவு (%) | 35.80 | 23.80 | 32.10 | 22.00 | 7.08 | முன்னேற்றம் |

மாநில முன்னெடுப்புத் திட்டமாக, ஊட்டச்சத்து செயலியில் உள்ள அனைத்து தகவல்கள் மற்றும் மாநில செயல் திட்ட தகவல்கள் தமிழ்நாடு மின்னணு ஆளுமை நிறுவன ஒருங்கிணைப்புடன் புதிய செயலியான TN-ICDS இல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்த செயலியானது குறிப்பாக தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் (ICDS) செயல்பாடு குறித்ததாகும். TN–ICDS ல் உள்ள மின்னனு தரவுகள் கல்வித்துறையின் EMIS மற்றும் சுகாதார துறையின் PICME ஆகியவற்றுடன் ஒருங்கிணைப்புடன் செயல்பட்டு, தரவுகள் பரிமாற்றம் செய்யப்படுகின்றன.

TN–ICDS, PICME–க்கு பிறகு குழந்தைகளின் தரவு EMIS தரவுதளத்திற்கு கடந்து செல்கின்றது. இம்மூன்று செயலிகளின் ஒருங்கிணைந்த தரவு பரிமாற்றம் மூலம் அத்துறைகள் தேவையான தகவல்களை பெறுகின்றன.

### 4.14.2. மக்கள் இயக்கம் (Jan Andolan)

தேசிய ஊட்டச்சத்துக் குழுமத்தின் கீழ் நடைபெறும் மக்கள் இயக்கம், ஊட்டச்சத்து பற்றிய தகவல்களை ஒவ்வொரு வீட்டையும் சென்றடையும் ஒரு ஒருங்கிணைந்த அணுகு முறையாகும். ஊராட்சி அமைப்புகளின் பொது பிரதிநிதிகள், மாநில அரசு

துறைகள், சமூக அமைப்புகள், பொது மற்றும் தனியார் துறை ஆகியோரின் பங்கேற்புடன் இவ்வியக்கம் செயல்படுத்தப்படுகிறது.

மக்கள் இயக்கத்தின் கீழ் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

- ➢ சமுதாய வளைகாப்பு
- ➢ தாய்ப்பால் வாரவிழா
- ➢ ஊட்டச்சத்து மாதம் கொண்டாட்டங்கள்.
- ➢ கை கழுவும் தினம்
- ➢ இரத்தசோகை விழிப்புணர்வு முகாம்.
- ➢ மாநில அளவில், மாவட்ட அளவில், வட்டார அளவில் விழிப்புணர்வு கண்காட்சிகள்.
- ➢ அனைத்து மாவட்டங்களிலும் பாரம்பரிய உணவுத் திருவிழா (Traditional Food Festival )
- ➢ வளரிளம் பெண்களுக்கு சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்துநலக் கல்வி.

தேசிய ஊட்டச்சத்து மாதம் வருடந்தோறும் செப்டம்பர் மாதத்தில் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த காலம் ஊட்டச்சத்து மற்றும் சுகாதார விழிப்புணர்வு ஏற்படுத்திட அர்ப்பணிப்பு காலமாக உள்ளது. 2024–ஆம் ஆண்டு ஊட்டச்சத்து மாதத்தில்,

மாநிலம் முழுவதும் 5,91,59,310 செயல்பாடுகள் நடத்தப்பட்டது மற்றும் மார்ச் 2024க்கான இருவார ஊட்டச்சத்து விழா தமிழ் நாடு முழுவதும் 1,52,63,918 செயல்பாடுகளுடன் மக்கள் இயக்கம் செயல்பாட்டின் ஒரு பகுதியாக நடத்தப்பட்டது. இந்த நடவடிக்கைகள் ஊட்டச்சத்து மற்றும் சுகாதார செய்திகளைப் பரப்புவதை நோக்கமாகக் கொண்டிருந்தன. இது மக்கள் தொகையில் கணிசமான பகுதியைச் சென்றடைவதற்கான ஒரு ஒருங்கிணைந்த முயற்சியைக் காட்டுகிறது. இது தமிழக மக்களிடையே விழிப்புணர்வை ஊக்குவிப்பதற்கும், நேர்மறையான சுகாதார நடைமுறைகளை ஊக்குவிப்பதற்கும் அரசின் வலுவான அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகிறது.

### 4.14.3 வளர்ச்சி கண்காணிப்பு கருவிகள் மற்றும் திறன் கைப்பேசிகள் வழங்குதல்

கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள், பச்சிளம் குழந்தைகள் முதல் 6 வயதுக்குட்பட்ட குழந்தைகள் வரை அனைத்து பயனாளிகளுக்கும்

எடை மற்றும் உயரத்தை துல்லியமாக பதிவு செய்வதை உறுதி செய்வதற்காக அனைத்து மையங்களுக்கும் வளர்ச்சி கண்காணிப்பு கருவிகள் மற்றும் திறன் கைப்பேசி வழங்கப்பட்டுள்ளன.

18,573 குழந்தைகள் மையங்களுக்கு நான்கு வகையான வளர்ச்சி கண்காணிப்பு கருவிகளான நீளத்தை அளவிடும் கருவி (Infantometer), உயரத்தை அளவிடும் கருவி (Stadiometer), குழந்தை எடை கணக்கிடும் கருவி மற்றும் குழந்தைகளின் எடை கருவி (Infant Weighing Scale) ஆகியவை ரூ.13.37 கோடி ரூபாயில் புதிய கருவிகளாக மாற்றித்தரப்பட்டுள்ளன.

**மேலும் 18,573 திறன் கைப்பேசிகள் ரூ.21.91 கோடி ரூபாயில் புதிய திறன் கைப்பேசிகள் மாற்றி வழங்க ஆணை வெளியிடப்பட்டு தொடர் நடவடிக்கையில் உள்ளது.**

**4.14.4 ஊட்டச்சத்தை உறுதி செய்**

குழந்தைகளிடையே ஊட்டச்சத்து குறைபாட்டினை குறைப்பதற்காக தமிழ் நாடு சட்டப்பேரவையில் 07.05.2022 அன்று மாண்புமிகு தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களால் "மருத்துவ கவனிப்பு தேவைப்படும் 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மருத்துவ உதவியும், ஊட்டச்சத்து தேவைப்படும் குழந்தைகளுக்கு சிறப்பு ஊட்டச்சத்து திட்டமும் செயல்படுத்தப்படும்" என அறிவிப்பு செய்யப்பட்டது.

இத்திட்டமானது, ஊட்டச்சத்து குறைபாடுள்ள 0–6 மாத குழந்தைகளின் தாய்மார்கள் மற்றும் கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டினால் பாதிக்கப்பட்ட 6 மாதம் – 6 வயது குழந்தைகள் ஆகியோர்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்குவதன் மூலம் ஊட்டச்சத்து குறைபாட்டினை குறைத்திடுவதை நோக்கமாக கொண்டுள்ளது.

எனவே, ஊட்டச்சத்தை உறுதி செய் திட்டமானது மூன்று கட்டங்களாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

| | |
|---|---|
| கட்டம்.1 | அங்கன்வாடி பணியாளர்களால் முதற்கட்டத்தில் ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளை கண்டறிதல் |
| கட்டம்.2 | கண்டறியப்பட்ட ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளை RBSK மருத்துவக் குழுவினர் மூலம் பரிசோதனை செய்து பாதிப்பிற்கான நிலையும், தேவையான சிகிச்சையையும் தீர்மானித்தல். |
| கட்டம்.3 | DEIC/SNC க்கு பரிந்துரைக்கப்பட்ட குழந்தைகளுக்கு விரிவான மருத்துவ மதிப்பீட்டு அறிக்கை மற்றும் சிகிச்சை அளித்தல். ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை அளித்தல். |

ஊட்டச்சத்து தேவைப்பட்ட குழந்தைகளில் 92,015 கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுள்ள 6 மாதம் முதல் 6 வயது குழந்தைகளுக்கு ரூ.18.68 கோடி செலவில் உண்பதற்கு தயார்நிலையில் உள்ள சிகிச்சை உணவு (RUTF) வழங்கப்பட்டது. 14,901 ஊட்டச்சத்து குறைபாடுள்ள 6 மாதத்திற்குட்பட்ட குழந்தைகளின் தாய்மார்களுக்கு ரூ.8.68 கோடி செலவில் ஊட்டச்சத்து பெட்டகங்கள் வழங்கப்பட்டன.

உண்பதற்கு தயார்நிலையில் உள்ள சிகிச்சை உணவு (RUTF) என்பது யூனிசெப் நிறுவனத்தால் பரிந்துரைக்கப்பட்ட அரைத்த வேர்க்கடலை, சர்க்கரை, எண்ணெய், பால் பவுடர், விட்டமின், தாது உப்பு கலவை கொண்ட மென்மையான அடர்த்தியான கலவையாகும். இந்த உணவு 6 மாதம் முதல் 6 வயது வரையிலான குழந்தைகளுக்கு நாள்தோறும் 8 வாரங்கள் வரை வழங்கப்பட்டது.

0 முதல் 6 மாத வயதுடைய ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள குழந்தைகளின் தாய்மார்களுக்கு நெய், பேரீச்சம்பழம், சத்துமாவு இரும்புச்சத்து சிரப் மற்றும் குடற்புழு நீக்க மாத்திரைகள் அடங்கிய ஊட்டச்சத்து பெட்டகங்கள் (Nutri Kits) வழங்கப்பட்டன.

மேற்கண்டவாறு வழங்கப்பட்ட ஊட்டச்சத்து பெட்டகங்கள் மூலம் 71 % குழந்தைகள் இயல்பு நிலைக்கு முன்னேறியுள்ளனர். இத்திட்டம் நேர்மறையான விளைவுகளை ஏற்படுத்தியதுடன் 0 முதல் 6 மாதம் வரையிலான குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையில் நல்ல முன்னேற்றத்தினை ஏற்படுத்தி உள்ளது.

சென்னை மருத்துவக் கல்லூரியானது இத்திட்டத்தின் செயல்பாட்டு விளைவுகளை மதிப்பீடு செய்தது. இதன்படி RUTF ஐ உட்கொண்ட குழந்தைகளின் உயரம் மற்றும் எடை இரண்டிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இருப்பதாக ஆய்வு

சுட்டிக்காட்டியுள்ளது. கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளில் 74% பேர் ஊட்டச்சத்து நிலையின் முன்னேற்றம் கண்டு இயல்பு நிலைக்கு முன்னேறியுள்ளனர்.

சரியான ஊட்டச்சத்து என்பது பிறப்பதற்கு முன்பே துவங்குகிறது. ஒரு தாயின் உணவு மற்றும் ஊட்டச்சத்து ஆதாரமே ஒரு குழந்தையின் ஊட்டச்சத்துக்கான ஒரே ஆதாரம் ஆகும். குழந்தைகளின் உடல் வளர்ச்சி, மூளை வளர்ச்சி, வளர்சிதை மாற்றம் மற்றும் நோய் எதிர்ப்பு அமைப்பு ஆகியவற்றின் வளர்ச்சிக்கு, கருத்தரித்தல் முதல் இரண்டு வயது வரையிலான முதல் 1000 நாட்கள் மிக முக்கியமானவை. சமூகம் சார்ந்த செயல்பாடுகள் மூலம் பச்சிளம் குழந்தைகள் மற்றும் இளம் குழந்தைகளுக்கு உணவளிக்கும் நடைமுறைகள் (IYCF) பற்றிய விழிப்புணர்வு நடத்தப்படுகிறது. இது மிகவும் பாதிக்கப்பட வாய்ப்புள்ள இளம் குழந்தைகளின் உயிரைக் காப்பாற்ற உதவுகிறது. மேலும், ஊட்டச்சத்து

குறைபாடு மற்றும் நுண்ணூட்டச்சத்து குறைபாடுகளைத் தடுப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

ஒட்டு மொத்த திட்டப் பயனும் முதல் 1000 நாட்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில் அமைந்துள்ளது. பொன்னான 1000 நாட்கள் என்பது குழந்தைகளின் உடல் வளர்ச்சி, மூளை வளர்ச்சி, வளர்சிதை மாற்றம் மற்றும் நோய் எதிர்ப்பு அமைப்பு ஆகியவற்றின் வளர்ச்சி மற்றும் ஒளிமயமான, வளமான எதிர்காலம் அமைய நுழைவு வாயிலாகும். எனவே, இத்திட்டம் கடுமையான மற்றும் மிதமான ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளின் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்குவதற்காக 2024-2025 ஆம் ஆண்டிற்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

### 4.15 ஆரம்ப கால குழந்தைப் பருவ பராமரிப்பு மற்றும் கல்வி (ECCE)

- குழந்தை தன்னுடைய முழு மனித ஆற்றலை அடைவதற்கு போதுமான ஊட்டச்சத்து, சுகாதாரம், பாதுகாப்பு, பரிவுடன் கூடிய பராமரிப்பு

மற்றும் ஆரம்ப கால குழந்தை கற்றலுக்கான வாய்ப்புகள் ஆகியவை அவசியமானவைகளாகும். ஆகையினால் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட பணிகளில் ஒருங்கிணைக்கப்பட்ட முக்கியமான பகுதியாக குழந்தைகளுக்கான முறைசாரா முன்பருவ கல்வி உள்ளது. இதனை வலியுறுத்தும் வகையில், அனைத்து குழந்தை நல மையங்களிலும் வேலைநாட்களில் நாள்தோறும் நான்கு மணிநேரம் முன்பருவக்கல்வி நடத்தப்பட்டு வருகிறது.

- மாநிலத்தில் சிறப்பு பாடத்திட்டமானது, **ஆடிப்பாடி விளையாடு பாப்பா (APVP)** எனும் பெயரில் தேசிய ஆரம்ப கால குழந்தை பருவ பராமரிப்பு மற்றும் கல்வி கொள்கை 2013–னை பின்பற்றி செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி, வயது மற்றும் வளர்ச்சிக்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ள வருடாந்திர பாடதிட்டத்தின் கீழ் முன்பருவக்கல்வி செயல்பாடுகள் அனைத்து குழந்தைகள் மையங்களிலும், 11 மாதங்களுக்கும் குழந்தைகளுக்கு ஏற்ற 11 வகையான கருத்துக்களை மையமாகக் கொண்டும்,

குழந்தையின் முழுமையான வளர்ச்சிக்கு ஏற்ற செயல்பாடுகளை உள்ளடக்கியும் நடத்தப்படுகின்றன, மற்றும் 12–ஆம் மாதம் பாடத்திட்டத்தின் திருப்புதலுக்காக ஒதுக்கப் பட்டுள்ளது.

- குழந்தைகள் மையங்களுக்கு பாடத்திட்ட புத்தகங்கள், குழந்தைகளுக்கான ஆய்வுத்தாள் அட்டை, செயல்பாட்டுப் புத்தகங்கள் 2–3, 3–4 (ம) 4–5 வயதினருக்கானது, முன்பருவக் கல்வி நிறைவுச் சான்றிதழ் மற்றும் விளையாட்டு உபகரணங்கள், குழந்தைகள் மையங்களுக்கு வழங்கப்படுகின்றன.

- மாவட்ட அளவிலான பயிற்றுநர்களுக்கான பயிற்சி ToT மாநில மற்றும் மாவட்ட அளவில் நடத்தப்படுகிறது. பயிற்சியின் போது, சுற்றுச்சூழல் நட்பு சூழ்நிலையை உருவாக்கும் வகையில், நச்சுத்தன்மையற்ற உள்நாட்டு விளையாட்டு பொருட்களை தாமாகவே உருவாக்க பயிற்சியாளர்களுக்கு 'Do-It-Yourself Kit' பயிற்சி வழங்கப்படுகிறது.

- அனைத்து குழந்தைகள் மைய பணியாளர்களுக்கும். இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்துவதற்கு. தொகுதி வாரியாக பரவலாக்கப்பட்ட முறையில் மூன்று கட்டமாக ஆரம்ப கால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வி பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. விளையாட்டுப் பொருட்களை அவர்களாகவே செய்வது குறித்தும் உள்ளடக்கி இப்பயிற்சி அளிக்கப்படுகிறது.
- Poshan Bhi Padhai Bhi திட்டத்தின் கீழ் National Institute of Public Co-Operation and Child Development (NIPCCD) நிறுவனத்தில் மாநில அளவிலான பயிற்றுநர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. NIPCCD நிறுவனத்தின் உறுதுணையுடன் மாநில பயிற்றுநர்கள் மூலம் அங்கன்வாடி பணியாளர்களுக்கு பயிற்சி வழங்கப்படுகிறது.

**2024-25-ஆம் நிதி ஆண்டுக்கு ரூபாய் 289.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 4.15.1 முன் பருவ கல்வி குழந்தைகளின் வளர்ச்சி மதிப்பீடு

குழந்தையின் உடல் இயக்க வளர்ச்சி, அறிதல் திறன் வளர்ச்சி, மொழி வளர்ச்சி, சமூக மற்றும் மன எழுச்சி வளர்ச்சி, படைப்பாற்றல் வளர்ச்சி போன்ற பல்வேறு வளர்ச்சிகளை வயது வாரியாக மதிப்பிடுவதற்கு, 2–5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மதிப்பீட்டு அட்டைகள் அச்சிடப்பட்டு குழந்தை மைய பணியாளர்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. முன்பருவ கல்வி குழந்தை தன்னந்தனியாக தனது பணிகளைச் செய்கிறதா, அல்லது அதற்கு ஆதரவு தேவைப்படுகிறதா என்பதைக் கண்டறிய, காலாண்டிற்கு ஒருமுறை மதிப்பீடு மேற்கொள்ளப்படுகிறது.

மதிப்பீட்டின் அடிப்படையில் குழந்தையின் செயல்திறன் குறித்து பெற்றோருக்குத் தெரிவிக்கப்படுவதுடன், அங்கன்வாடி பணியாளரால்

குழந்தையின் மீது தனி கவனம் செலுத்தப்பட்டு, குழந்தையின் செயல்திறன் தொடர்ந்து மேம்படுத்திட உதவ முடிகிறது.

2024-25ஆம் ஆண்டு முதல் இம்மதிப்பீட்டு செயல்முறை இணைய வழியில் மேற்கொள்ளப்படுகிறது. 2-3 வயது, 3-4 வயது, 4-5 வயது குழந்தைகளுக்கான வளர்ச்சி களங்கள் அடிப்படையில் TNICDS செயலியில் இணைய வழியில் வளர்ச்சி அளவீடுகள் உருவாக்கப்பட்டுள்ளது.

முன்பருவகல்வி குழந்தைகளின் வளர்ச்சி காலாண்டிற்கு ஒரு முறை மதிப்பீடு செய்து இணைய வழியில் பதிவேற்றம் செய்யப்படும். மதிப்பீட்டின் அடிப்படையில் தொடர் செயல்பாடுகள் திட்டமிடப்பட்டு தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும். மாவட்டம் மற்றும் மாநில அளவில் கண்காணித்தல் பணி மேற்கொள்ளப்படும். குழந்தைகளின் மதிப்பீட்டின் அடிப்படையில்

மையங்களை தரவரிசைப்படுத்த முக்கிய செயல்திறன் குறியீடுகள் உருவாக்கப்பட்டுள்ளன. இச்செயல்முறை, தாமத வளர்ச்சியுடைய குழந்தைகளை கண்டறியவும், அவர்களின் தேவைகளை திறம்பட பூர்த்தி செய்திடவும் உதவும்.

## 4.16 பயிற்சி

- தமிழ்நாடு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்திற்கு பிரத்யேகமாக ஒரு மாநில பயிற்சி நிறுவனம் (STI) தனிச்சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் மற்றும் தொடர்புடைய துறைகளின் வட்டார நிலை மற்றும் மாவட்ட அளவிலான அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கிறது. 2003 முதல் ஒன்றிய அரசு, குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள் மற்றும் மாநிலத்தின் அங்கன்வாடி பணியாளர்கள் பயிற்சி மையங்களின் (AWTC) பயிற்றுவிப்பாளர்களுக்கு (மேற்பார்வையாளர்கள் நிலை-I) பணிப்பயிற்சி

(JTC) நடத்துவதற்கு மாநில பயிற்சி நிறுவனத்திற்கு (STI) அங்கீகாரம் வழங்கி உள்ளது.

- தமிழ்நாட்டில் பரவலாக்கப்பட்ட பயிற்சி முறை பின்பற்றப்படுகிறது. குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் (நிலை–1 மற்றும் நிலை–2) ஆகியோர்களுக்கான பணிப்பயிற்சி தரமணியில் தங்கும் விடுதியுடன் செயல்படும் மாநில பயிற்சி மையத்தில் நடத்தப்படுகின்றது.
- தரமான பயிற்சியை அளிப்பதற்கென, ஸ்மார்ட் வகுப்பறைகள்(Smart class) வளாகத்தினுள்ளே அமைக்கப்பட்டுள்ளது.
- குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர், மேற்பார்வையாளர் நிலை–1, சுகாதாரம் மற்றும் பள்ளிக் கல்வித் துறையின் பிரதிநிதிகளைக் கொண்ட வட்டார பயிற்சி குழுவின் மூலம் குழந்தைகள் மைய பணியாளர்களுக்கான பணிப்பயிற்சி மற்றும் அங்கன்வாடி குழந்தைகள் மைய உதவியாளர்களுக்கான புத்தறிவு பயிற்சி, வட்டார அளவில் நடத்தப்படுகின்றது.

- களப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் பயிற்சியில், பச்சிளம் குழந்தைகள் மற்றும் இளம் குழந்தைகளுக்கு உணவளித்தல் முறைகள். (IYCF) மற்றும் குழந்தையின் முதல் பொன்னான ஆயிரம் நாட்கள் ஆகிய முக்கிய பகுதிகளாக சேர்க்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி பணியாளர்களிடையே குழந்தைகளுக்கான உணவு ஊட்டும் பழக்க வழக்கங்கள் குறித்தும். கரு உருவான நாள் முதல் குழந்தையின் இரண்டு வயது வரை உள்ள காலத்தில் ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரம் பற்றிய முக்கியத்துவம் குறித்தும் கருத்துக்களை அறிந்து கொள்வதை மேம்படுத்துகின்றது.
- முதன்மை நிலைப் பயிற்றுநர்களை தேர்வு செய்திடும் வகையில் UNICEF நிறுவனத்துடன் இணைந்து சமூக நடத்தை மாற்றம் மற்றும் தொடர்பு (SBCC) குறித்த பயிற்சி மாவட்ட / வட்டார அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் இலக்கு பயணாளிகளிடையே விரும்பத்தக்க விளைவுகளை, சமூகநடத்தை மாற்றம் மற்றும் தொடர்பு மூலம் ஏற்படுத்த

களப்பணியாளர்களுக்கு பயிற்சி அளித்திட ஈடுபடுத்தப்படுகின்றனர்.

- தொடர் இடைவெளியில் அங்கன்வாடி பணியாளர்கள், மேற்பார்வையாளர்கள், அலுவலர்களுக்கு அவ்வப்போதைய தேவைகளுக்கு ஏற்ப கருத்துகளை அறிந்து மேம்படுத்திக் கொள்வதற்காக பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.
- களப்பணியாளர்களுக்கு வளர்ச்சி கண்காணிப்பு குறித்தும் தொழில்நுட்ப பிரச்சனைகள் சரிசெய்யும் விதம் குறித்தும் பயிற்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

## 4.17 ஆதார் பதிவு

- ஒன்றிய அரசால் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள், இயக்குநர் மற்றும் குழும இயக்குநர், 0-5+ வயதுடைய குழந்தைகளுக்கான ஆதார் எடுப்பதற்கு UIDAIயின் கீழ் பதிவாளராக அறிவிக்கப்-பட்டுள்ளார்.
- தமிழ்நாட்டில் உள்ள 434 குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகம் 0-5+ வயதுடைய

குழந்தைகளுக்கான ஆதார் பதிவுக்கான ஆதார் மையங்களாகவும் UIDAI–ஆல் அறிவிக்கப் பட்டுள்ளது. குழந்தைகள் மற்றும் தாய் பயனாளிகளின் ஆதார் பதிவு நடவடிக்கைகளை செயல்படுத்திட 434 குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகத்திற்கும் ஆதார் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

- தற்போது 98.08% பயனாளிகளின் ஆதார் எண்கள் போஷன் டிராக்கரில் பதிவுகள் செய்யப்பட்டுள்ளன.
- ஏப்ரல்–2023 முதல் மார்ச்–2024 வரை 4,32,791 பயனாளிகளுக்கு ஆதார் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 4.18 அங்கன்வாடி மைய ஊழியர்களின் நலன்

#### 4.18.1 ஊதிய விவரம்

தமிழ்நாட்டில் உள்ள 54,449 குழந்தைகள் மையங்களில் பணிபுரியும் அங்கன்வாடி பணியாளர்கள், குறு அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் அங்கன்வாடி உதவியாளர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம்

7–வது ஊதியக்குழுவின் பரிந்துரையின் படி வழங்கப்பட்டு வருகிறது.

| வ. எண் | பதவி | சிறப்பு காலமுறை ஊதியம் | முதன் முதலில் பணியில் சேர்பவர்களுக்கு வழங்கப்படும் அடிப்படை ஊதியம் |
|---|---|---|---|
| 1. | அங்கன்வாடி பணியாளர்கள் | 7,700–24,200 | 7700 |
| 2. | குறு அங்கன்வாடி பணியாளர்கள் | 6,700–18,000 | 5700 |
| 3. | அங்கன்வாடி உதவியாளர்கள் | 4,100–12,500 | 4100 |

## 4.18.2 ஊதியத்துடன் வழங்கப்படும் இதரப்படிகளின் விவரம்

அடிப்படை ஊதியத்துடன் கூடுதலாக அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி, மருத்துவப்படி, மலைவாழ்படி, குளிர்காலப்படி போன்ற படிகள் மற்றும் ஆண்டு ஊதிய உயர்வும் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது .

| வ. எண் | பதவி | சிறப்பு காலமுறை ஊதியம் | மொத்த ஊதியம் | ஒன்றிய அரசின் பங்கு | மாநில அரசின் பங்கு | மாநில அரசின் கூடுதல் பங்கு | மொத்த மாநில அரசு பங்கு |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | அங்கன்வாடி பணியாளர் | 7,700–24,200 | 13,510 | 2,700 | 1,800 | 9,010 | 10,810 |
| 2. | குறு அங்கன்வாடி பணியாளர் | 5,700–18,000 | 10,510 | 2,100 | 1,400 | 7,010 | 8,410 |
| 3. | அங்கன்வாடி உதவியாளர் | 4,100–12,500 | 8,110 | 1,350 | 900 | 5,860 | 6,760 |

### 4.18.3 அங்கன்வாடி ஊழியர்களுக்கு வழங்கப்படும் கோடை விடுமுறை விபரம்

2023–ஆம் ஆண்டு முதல் குழந்தைகள் மையங்களுக்கு கோடை விடுமுறை அளிக்கப்படுகிறது.

### 4.18.4 ஓய்வு பணப்பலன்கள் விபரம்

- **அங்கன்வாடி உதவியாளர்களின் ஓய்வு வயது** – 2021 ஆம் ஆண்டிலிருந்து ஓய்வு வயது 58லிருந்து 60 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- **ஒட்டு மொத்த தொகை மற்றும் சிறப்பு ஓய்வூதியம்** – அங்கன்வாடி ஊழியர்கள் பணியிலிருந்து ஓய்வு பெறும் போது, ஒட்டு மொத்த தொகையாக அங்கன்வாடிப்

பணியாளர்களுக்கு ரூ 1,00,000/–மும், அங்கன்வாடி உதவியாளர்களுக்கு ரூ50,000மும் 01.10.2017 முதல் வழங்கப்படுகிறது .கூடுதலாக, அங்கன்வாடி ஊழியர்கள் பணியிலிருந்து ஓய்வுபெறும் போது ரூ.2000/– சிறப்பு ஓய்வூதியமாக 01.10.2017 முதல் வழங்கப்படுகிறது .

- **குடும்ப நலநிதி** – பணியிலிருக்கும் போது காலமாகும் அங்கன்வாடி ஊழியர்களுக்கு குடும்ப நல நிதியாக ரூ.5 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது.
- **சிறப்பு வருங்கால வைப்பு நிதி** – 2015 ஆம் ஆண்டு முதல் அங்கன்வாடி ஊழியர்களுக்கு சிறப்பு வருங்கால வைப்பு நிதி கணக்கு துவங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
- **தன் விருப்ப ஓய்வு திட்டம்**– அனைத்து ஓய்வூதிய பணப்பலன்களுடன் மருத்துவ காரணங்களின் அடிப்படையில் தன்விருப்ப ஓய்வு, அங்கன்வாடி ஊழியர்களுக்கு அனுமதிக்கப்படுகிறது.

### 4.18.5. கருணை அடிப்படையில் பணி நியமனம்

அங்கன்வாடி ஊழியர்கள் பணியிலிருக்கும் போது மரணமடைந்தால் அவர்களின் பெண் வாரிசுதாரர்களுக்கு கல்வி தகுதிக்கேற்ப கருணை அடிப்படையில் அங்கன்வாடி மையங்களில் பணி நியமனம் வழங்கப்படுகிறது.

### 4.18.6 பதவி உயர்வு

- 5 வருடம் பணி நிறைவு பெற்ற குறு அங்கன்வாடி பணியாளர்களுக்கு 02.08.2022 முதல் முதன்மை அங்கன்வாடி பணியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டு வருகிறது.
- 10 வருடம் பணி நிறைவு பெற்ற அங்கன்வாடி உதவியாளர்களுக்கு முதன்மை அங்கன்வாடி பணியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டு வருகிறது.
- முதுநிலையின் அடிப்படையில் முதன்மை அங்கன்வாடி பணியாளர்களுக்கு மேற்பார்வையாளர் நிலை 2 அல்லது மகளிர் ஊர்நல அலுவலராக பணி நியமனம் வழங்கப்படுகிறது.

**4.18.7 அங்கன்வாடி ஊழியர்களுக்கு வழங்கப்படும் இதர சலுகைகள்**

- அங்கன்வாடி ஊழியர்களுக்கு 2 குழந்தைகள் வரை பிரசவத்திற்கு 180 நாட்கள் மகப்பேறு விடுப்பு வழங்கப்படுகிறது.

- மாற்றுத்திறனாளி அங்கன்வாடி ஊழியர்களுக்கு மாதம் ரூ.2000/– அல்லது ரூ.2500/– பயணப்படி வழங்கப்படுகிறது.

- ஒவ்வொரு ஆண்டும் அங்கன்வாடி ஊழியர்களுக்கு சீருடையாக இரண்டு சேலைகள் மற்றும் மேலங்கிகள் வழங்கப்பட்டு வருகிறது.

- பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா மற்றும் பிரதான் மந்திரி சுரக்ஷாபீமா யோஜனா – வின் கீழ் எதிர்பாராத விபத்து மற்றும் விபத்தின் மூலம் நிகழும் உயிரிழப்பு காலத்தில் அங்கன்வாடி ஊழியர்கள் மற்றும் அவர்கள் குடும்பத்திற்கும் உதவிடும் நோக்கில் காப்பீட்டுத் திட்டம் துவங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

**முடிவுரை**

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் நோக்கமானது, 6 வயதுக்குட்பட்ட குழந்தைகள் மற்றும் அவர்களின் தாய்மார்களுக்கு ஆரோக்கியம், ஊட்டச்சத்து மற்றும் கற்றலின் வாய்ப்புகளை மேம்படுத்தல் போன்ற சேவைகளை ஒரே நேரத்தில் கிராம அளவில் வழங்குவதாகும்.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டம், குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து வழங்குதல் மற்றும் முன்பருவக்கல்வி வழங்குவதோடு மட்டுமல்லாமல் அவர்களின் ஊட்டச்சத்து குறைபாடு, நோய் தாக்கம், கற்றல் திறன் குறைபாடு ஆகியவற்றின் தீய சுழற்சியை உடைப்பதில் பெரும் பங்கு வகிக்கிறது. **"ஊட்டச்சத்து குறைபாடில்லா தமிழ் நாடு"** என்ற உன்னத நிலையை அடைய, ஆரோக்கியமான ஊட்டச்சத்து மற்றும் முன்பருவக்கல்வி போன்ற சேவைகளை வழங்கும் சிறந்த தளமாக குழந்தைகள் மையங்களை இத்துறை செயல்படுத்தி வருகிறது.

## அத்தியாயம் – 5

## குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள்

குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை, குழந்தைகளின் பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் மறுவாழ்விற்கான முன்மாதிரி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இளைஞர் நீதிச் (குழந்தைகள் பாராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015–ஐ கடைபிடிப்பதற்குத் தேவையான நடைமுறைகள் மற்றும் கண்காணிப்பு வழிமுறைகளுக்கான உரிய கட்டமைப்பை அரசு வடிவமைத்துள்ளது. குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் ஒவ்வொரு குழந்தையும் சிறந்த சூழலில் வளர்ந்து தங்களை மேம்படுத்திக்கொள்ள வழிவகைகள் செய்யப்பட்டுள்ளபோதும், குழந்தைகளை அவர்களது குடும்பத்துடன் அல்லது குடும்பம் சார்ந்த பராமரிப்பில் வளர்வதை உறுதி செய்வதையே முதன்மையான குறிக்கோளாக கொண்டுள்ளது. குழந்தைகளை

நிறுவன பராமரிப்பில் வைக்கப்படுவது என்பது இறுதியான வாய்ப்பாகும். குழந்தை தொடர்பான பிரச்னைகளுக்கு தீர்வுக் காண பல்வேறு செயல் திட்டங்கள் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப் பட்டுள்ளன.

1887-ஆம் ஆண்டிலேயே சீர்திருத்தப் பள்ளியை நிறுவியதன் மூலம் தமிழ்நாடு அரசு குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்கான நடவடிக்கைகளில் முன்னோடியாக திகழ்கிறது. 1920-ஆம் ஆண்டில், "மெட்ராஸ் குழந்தைகள் சட்டம்" இயற்றப்பட்டது. 1947-ஆம் ஆண்டில் இத்துறை சிறைத் துறையிலிருந்து பிரிக்கப்பட்டு, "சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் விழிப்புப்பணித் துறை" என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

அதன் பின்னர் இத்துறையின் பெயர் கீழ்க்கண்டவாறு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது:-

| | |
|---|---|
| 1958 | சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் விழிப்புப்பணித் துறை |
| 1975 | நல்வழிப்படுத்தும் நிருவாகத் துறை |
| 1981 | சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் விழிப்புப்பணித் துறை |
| 1990 | சமூகப் பாதுகாப்புத் துறை |
| 2024 | குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை |

இத்துறை நிறுவன பராமரிப்பிலிருந்து வீடேகிச் செல்லும் குழந்தைகளுக்கு அவர்களது சுய வாழ்வாதாரத்தை அடைய உதவும் பின்தொடர் திட்டங்கள் மற்றும் பிற்காப்பு சேவைகளை உருவாக்கி செயல்படுத்தி வருகிறது.

குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறையானது, குழந்தைகள் மற்றும் பெண்களின் ஒட்டுமொத்த வளர்ச்சி மற்றும் மேம்பாட்டை நிறைவேற்ற வேண்டி, பின்வரும் சட்டங்கள் மற்றும் திட்டங்கள் / சேவைகளை செயல்படுத்துகிறது:-

**சட்டங்கள்:**

i. இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015
ii. பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2012
iii. குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்கள் சட்டம், 2005
iv. ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956

**திட்டங்கள் / சேவைகள்:**

i. குழந்தை பாதுகாப்பு சேவைகள் திட்டம் (Mission Vatsalya)
ii. வாழ்வொளித் திட்டம் (Ujjawala Scheme)
iii. குழந்தை உதவி எண் சேவைகள் (1098)
iv. இளைஞர் நீதி நிதி மூலம் வழங்கப்படும் நிதி உதவி
v. முறைசார் மற்றும் முறைசாராக் கல்வி
vi. தொழிற்பயிற்சி மற்றும் திறன் வளர்ப்புப் பயிற்சிகள்
vii. குழந்தைகளுக்கான கல்விச் சுற்றுலா திட்டம்

viii. குழந்தைகளுக்கான சமூக உளவியல் சார்ந்த உதவி

ix. போதைத் தடுப்பு மையம்

### 5.1 இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015

இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015, குழந்தையின் சிறந்த நலனைக் கருத்தில் கொண்டு, குழந்தை நேய சூழலுக்கு ஏற்ற அணுகுமுறையைக் கடைப்பிடித்து, இடர்பாடான சூழ்நிலைகளில் உள்ள குழந்தைகளின் முறையான பராமரிப்பு, பாதுகாப்பு, மேம்பாடு மற்றும் சமூகத்துடன் ஒன்றிணைத்தல் ஆகியவற்றை உறுதி செய்வதை நோக்கமாக கொண்டுள்ளது. இச்சட்டம், பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் மற்றும் சட்டத்திற்கு முரணாக செயல்பட்டதாக கருதப்படும் குழந்தைகளைக் கையாளுவது குறித்து சட்ட ரீதியான வழிமுறைகளை வழங்கியுள்ளது. இச்சட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசால் இளைஞர் நீதிச்

(குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) விதிகள், 2017-ல் உருவாக்கப்பட்டு, கடைசியாக, 2024-ல் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 5.1.1 பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள்

"பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தை" என்பது வீடு அல்லது தங்குமிடம் இல்லாமல் வாழ்வாதாரமின்றி காணப்படும் குழந்தை அல்லது மனநலம் பாதிக்கப்பட்ட / மாற்றுத் திறனாளி / பராமரிக்க எவரும் இல்லாத குழந்தைகள், கைவிடப்பட்ட, காணாமல் போன, வீட்டைவிட்டு வெளியேறிய குழந்தைகள், பாதுகாக்க தகுதியற்ற அல்லது இயலாத பெற்றோர் அல்லது பாதுகாவலரின் குழந்தைகள், சாலையோர குழந்தைகள் / குழந்தை தொழிலாளர் சட்டத்திற்கு முரண்பாடாக வேலை செய்யும் குழந்தைகள் / பாதிக்கப்பட்ட அல்லது போதைப் பழக்கத்திற்கு அடிமையாகக்கூடிய சூழலில் உள்ள குழந்தைகள் அல்லது பாலியல்

துன்புறுத்தலுக்கு உள்ளானவர்கள், இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015, பிரிவு 2 (14)-ல் குறிப்பிடப்பட்டுள்ள குழந்தைகள்.

### 5.1.1.1 குழந்தை நலக் குழுக்கள்

குழந்தை நலக் குழுக்களானது, இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015-ன்படி, குழந்தைகளுக்கென வழங்கப்பட்டுள்ள அதிகார வரைமுறைக்குட்பட்டு பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள் தொடர்பான நேர்வுகளைத் தீர்வு செய்வதற்கான அமைப்பாகும். ஒரு தலைவர் மற்றும் நான்கு பிற உறுப்பினர்களைக் (ஒரு மகளிர் உறுப்பினர் உட்பட) கொண்டது, குழந்தை நலக் குழு. குழந்தை நலக் குழுவானது குழந்தை நேய அணுகுமுறையை பின்பற்றி, அதன் அனைத்து நடவடிக்கைகளிலும் குழந்தைகளின் அதிகபட்ச நலனை உறுதி செய்கிறது. 1973-ஆம் ஆண்டின்

குற்றவியல் நடைமுறை (Code of Criminal Procedure) விதிகளின்படி, இக்குழந்தை நலக் குழு பெருநகர நீதிமன்ற நடுவர் அல்லது முதல் வகுப்பு நீதித்துறை நடுவர் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை கொண்டதாகும்.

தமிழ் நாடு அரசு, 36 குழந்தை நலக் குழுக்களை அமைத்துள்ளது. குழந்தை நலக் குழுக்கள் தொடர்பான அனைத்து குறைகளும், மாவட்ட ஆட்சியரால் தீர்வு செய்யப்படுகிறது. இக்குழுக்களின் மூலம் 2023-2024-ஆம் ஆண்டில் 22,751 வழக்குகள் கையாளப்பட்டுள்ளன.

**2024-2025-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.8.37 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**5.1.1.2 குழந்தைகள் இல்லங்கள்**

குழந்தைகள் இல்லங்கள் இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம்,

2015–இன் கீழ் மாநிலம் முழுவதும் நிறுவப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளன. குழந்தை நலக் குழுக்களால், உரிய விசாரணைக்குப் பிறகு "பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள்" எனக் கண்டறியப்படும் குழந்தைகள், இவ்வில்லங்களில் குறுகிய கால மற்றும் நீண்ட கால பராமரிப்பு, கல்வி, பயிற்சி, முன்னேற்றம் மற்றும் மறுவாழ்விற்காக தங்க வைக்கப்படுகின்றனர்.

31.03.2024–ன்படி, மாநிலத்தில் செயல்பட்டு வரும் 807 குழந்தைகள் இல்லங்கள், குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறையால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இதில் 36 குழந்தைகள் இல்லங்கள் நேரடியாக அரசாலும், 167 குழந்தைகள் இல்லங்கள் அரசின் நிதியுதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களாலும் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கென 6 இல்லங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பட்டு வருகின்றன.

இதில் 140 தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு குழந்தை பாதுகாப்புச் சேவைகளின் கீழ் ஒரு குழந்தைக்கு மாதம் ரூ.3,000/- வீதம் பராமரிப்பு மானியமாக வழங்கப்பட்டு வருவதுடன், வாடகை, தண்ணீர், மின்சாரம், போக்குவரத்து மற்றும் இதர செலவினங்களுக்கும் மிஷன் வத்சல்யா திட்டத்தின்கீழ், நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் உள்ள குழந்தைகளுக்கு அவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக உணவு, உடை, தங்குமிடம், மருத்துவ உதவிகள், கல்வி, தொழிற்கல்வி முதலியன வழங்கப்பட்டு வருகின்றன.

| அரசால் நடத்தப்படும் குழந்தைகள் இல்லங்கள் | இந்து அறநிலைய துறை மூலம் நடத்தப்படும் குழந்தைகள் இல்லங்கள் | அரசு உதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் குழந்தைகள் இல்லங்கள் | தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் சுயநிதியுடன் செயல்படும் குழந்தைகள் இல்லங்கள் |
|---|---|---|---|
| 36 | 10 | 167 | 594 |

**2024–2025–ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.87.17 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 5.1.1.3 புறநகர் மற்றும் நகர்ப்புற குழந்தைகளுக்கான திறந்த வெளிப் புகலிடங்கள்

பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள், குறிப்பாக பிச்சையெடுக்கும் சிறார்கள், தெருவோர சிறார்கள், குப்பைப்பொறுக்கும் சிறார்கள், சிறு வியாபாரிகள், தெருக்கூத்தாடிகள், ஆதரவற்ற, கைவிடப்பட்ட, கடத்தப்பட்ட, வீட்டை விட்டு வெளியேறிய, புலம் பெயர்ந்த குழந்தைகள் மற்றும் ஏனைய பாதிப்பிற்குள்ளாகும் சூழலில் உள்ள குழந்தைகள் தற்காலிகமாக தங்க வைக்க நகர்ப்புறம் மற்றும் புறநகர் பகுதிகளில் திறந்தவெளி புகலிடங்கள் நிறுவப்பட்டுள்ளன. இத்திட்டம், வீடற்ற மற்றும் தெருவோர குழந்தைகளை இலக்காக கொண்டு அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்கிறது. தற்போது, தமிழ்நாட்டில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால்

நடத்தப்பட்டு வரும் 13 திறந்தவெளிப் புகலிடங்களில், 11 திறந்தவெளிப் புகலிடங்கள் அரசின் நிதி உதவியுடன் இயங்கி வருகின்றன. குழந்தை பாதுகாப்பு சேவைகள் திட்டத்தின் கீழ் ஒரு குழந்தைக்கு மாதம் ரூ.2,500/- வீதம் பராமரிப்பு மானியமாக தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வருவதுடன் வாடகை, தண்ணீர், மின்சாரம், போக்குவரத்து மற்றும் இதர செலவினங்களுக்கும் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. இப்புகலிடங்களில் 348 குழந்தைகள் தங்குவதற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

**2024-2025-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.1.26 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 5.1.1.4 குழந்தை தத்தெடுப்பு

"குழந்தை தத்தெடுப்பு" என்பது ஆதரவற்ற, கைவிடப்பட்ட மற்றும் ஒப்புவிக்கப்பட்ட குழந்தைகள், குடும்பத்தின் அரவணைப்பில் வளர ஏதுவாக, ஒரு

குடும்பத்தை கண்டறியும் செயல்முறையாகும். இதன் மூலம் தத்தெடுக்கப்பட்ட குழந்தை தனது உயிரியல் பெற்றோரிடமிருந்து நிரந்தரமாக பிரிக்கப்பட்டு, உறவுகளுடன் இணைக்கப்பட்ட அனைத்து உரிமைகள், சலுகைகள் மற்றும் பொறுப்புகளை பெற்று, தத்து பெற்றோரின் சட்டப்பூர்வமான குழந்தையாக மாறும்.

ஒரு குழந்தையை குடும்ப பராமரிப்பில் வைக்க முடியாத நிலை ஏற்பட்டால் மட்டுமே இறுதி முயற்சியாக நிறுவன பராமரிப்பில் வைக்கப்பட வேண்டும். தத்தெடுப்பின் பிரதானமான நோக்கமே, குழந்தைகளுக்கு பொருத்தமான குடும்பங்களைக் கண்டறிவதே தவிர, குடும்பங்களுக்கான குழந்தைகளைக் கண்டறிவது அல்ல.

குழந்தைகள் தத்தெடுப்பு, மத்திய தத்தெடுப்பு வள அதிகார அமைப்பால் (CARA) நிருவகிக்கப்படுகிறது. இது ஒன்றிய அரசின் மகளிர் மற்றும் குழந்தைகள்

மேம்பாட்டு அமைச்சகத்தின் கீழ் உள்ள தன்னாட்சி அமைப்பாகும். தத்தெடுப்பு நடைமுறைகள் இணையவழி மூலம் நாடு முழுவதும் ஒரே மாதிரியாக செய்யப்படுகின்றன.

தத்தெடுக்கும் பெற்றோர், சிறப்பு தத்தெடுப்பு மையங்கள் மற்றும் மத்திய தத்தெடுப்பு வள அமைப்பு ஆகியவற்றுக்கு இடையே மாநில தத்தெடுப்பு வள முகமை (SARA) ஒரு பாலமாகச் செயல்படுவதன் மூலம் தத்தெடுப்பை எளிதாக்குகிறது. தத்தெடுத்தலை எளிதாகப் புரிந்துகொள்வதற்காக "**குழந்தை தத்தெடுத்தல் கையேடு**" ஒன்றை மாநில தத்து வள முகமை வெளியிட்டுள்ளது. பொதுமக்களிடையே குழந்தை தத்தெடுத்தல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், செய்திகளை பரப்புவதற்கும் அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகுகள், சிறப்பு தத்தெடுப்பு முகமைகள், சமூகக் குழுக்கள் மற்றும் பொது இடங்களில் விளம்பர பலகைகள் வைக்கப்பட்டுள்ளன.

சட்ட பூர்வமற்ற குழந்தை தத்தெடுத்தலைத் தடுக்க மருத்துவத் துறை வல்லுநர்களுக்கும் இதர பங்குதாரர்களுக்கும் விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. மத்திய தத்தெடுப்பு வள அதிகார அமைப்புடன் (CARA) இணைந்து சிறப்பு தத்தெடுப்பு முகமைகளை அவ்வப்போது கண்காணிப்பதும் வருங்கால தத்தெடுக்கும் பெற்றோரின் குறைகளை நிவர்த்தி செய்வதும் மாநில தத்தெடுப்பு வள முகமையின் (SARA) முக்கியமான முயற்சிகளாகும்.

### 5.1.1.5 சிறப்பு தத்தெடுப்பு முகமைகள்

தமிழ்நாட்டில், உள் மற்றும் வெளிநாட்டில் தத்து வழங்கிட 26 சிறப்பு தத்தெடுப்பு முகமைகள் செயல்படுகின்றன. தற்போது, 21 சிறப்பு தத்தெடுப்பு முகமைகள் அரசின் நிதியுதவியினைப் பெறுகின்றன. சென்னையில் நான்கும், மதுரையில் இரண்டும், சேலத்தில் இரண்டும் மற்றும் அரியலூர், செங்கல்பட்டு, கோயம்புத்தூர், கடலூர், தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு, கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, நாமக்கல், தூத்துக்குடி,

திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திருப்பத்தூர், திருவண்ணாமலை, வேலூர், சிவகங்கை மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் தலா ஒன்றும் என சிறப்பு தத்தெடுப்பு முகமைகள் அமைந்துள்ளன.

**1993 முதல் மார்ச் 2024 வரை தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகளின் விவரம் கீழ்க்கண்டவாறு:-**

| **வ. எண்** | **தத்தெடுப்பின் தன்மை** | **தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகள்** | | **மொத்தம்** |
|---|---|---|---|---|
| | | **ஆண்** | **பெண்** | |
| 1 | உள்நாட்டுத் தத்தெடுப்பு | 1,987 | 4,824 | 6,811 |
| 2 | வெளிநாட்டுத் தத்தெடுப்பு | 155 | 445 | 600 |
| | **மொத்தம்** | **2,142** | **5,269** | **7,411** |

2023–2024–ஆம் ஆண்டில் (ஏப்ரல் 2023 முதல் மார்ச் 2024 வரை) தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகளின் விவரம் பின்வருமாறு:–

| வ. எண் | தத்தெடுப்பின் தன்மை | தத்து கொடுக்கப்பட்ட குழந்தைகள் | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | |
| 1 | உள்நாட்டுத் தத்தெடுப்பு | 162 | 187 | 349 |
| 2 | வெளிநாட்டுத் தத்தெடுப்பு | 16 | 18 | 34 |
| | **மொத்தம்** | **178** | **205** | **383** |

1992–ஆம் ஆண்டு தமிழ் நாடு அரசால் தொட்டில் குழந்தை திட்டம் துவங்கப்பட்டது. 1992–ஆம் ஆண்டு முதல் மார்ச் 2024 வரை, தொட்டில் குழந்தை திட்டத்தின் கீழ், 6,083 குழந்தைகளுக்கு பராமரிப்பு மற்றும் உதவி வழங்கப்பட்டுள்ளது.

### 5.1.1.6 இளைஞர் நீதி நிதி மூலம் வழங்கப்படும் நிதி உதவி

இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015ன்படி, குழந்தைகள் நலன் மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ள "தமிழ்நாடு இளைஞர் நீதி நிதி" ரூ.25.00 இலட்சம் கொண்ட நிதியுடன் உருவாக்கப்பட்டுள்ளது. இந்நிதி அரசின் திட்டங்களின் கீழ் வராத ஏனைய திட்டங்கள் மற்றும் அவசர தேவைகளை நிறைவேற்றிட வழிவகை செய்கிறது. இந்நிதி குழந்தைகளுக்கு கல்வி, மருத்துவம், பயிற்சி, விளையாட்டு, மூலதனப் பொருட்கள் மற்றும் வருவாய் ஈட்டுவதற்கான தொழில் துவங்குவதற்கான மூலதன தேவைகளுக்கு பயன்படுத்தப்படுகிறது.

### 5.1.1.7 சிறையில் இருக்கும் பெற்றோரின் குழந்தைகளுக்கு உதவி

சிறையில் இருக்கும் பெற்றோரின் குழந்தைகளுக்கும் அரசு, பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு

அளித்து வருகிறது. இவ்வாறான சூழ்நிலையில் உள்ள குழந்தைகள், நிதி ஆதரவு, கல்வி, வளர்ப்பு பராமரிப்பு போன்ற உதவிகளைப் பெற்று பயனடைகிறார்கள். சில நேர்வுகளில் அரசால் நடத்தப்பட்டு வரும் குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் அவர்களுக்கு உறைவிடம் வழங்கப்படுகிறது. இதுவரை 2022-2023-ஆம் ஆண்டில் 20 சிறார்களும் மற்றும் 2023-2024-ஆம் ஆண்டில் 41 சிறார்களும் நிதியுதவி பெற்று பயனடைந்துள்ளனர். மேலும், 3 சிறார்கள் வளர்ப்பு பராமரிப்பு மூலம் பயனடைந்துள்ளனர். மாநிலத்தில் உள்ள பல்வேறு குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் 23 சிறார்கள் தங்க வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டுள்ளனர்.

### 5.1.1.6 நிதி ஆதரவுத் திட்டம்

ஒரு குழந்தை குடும்பத்துடன் இருந்து பெற்றோரின் அன்பு மற்றும் அரவணைப்புடன் கல்வியைத் தொடர நிதி ஆதரவுத் திட்டத்தின் கீழ் மாதம் ரூ.4,000/- நிதியுதவி வழங்கப்படுகிறது. இந்தத்

திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு குழந்தையும், 18 வயது நிறைவடையும் வரை பயன் பெறத் தகுதியுடையவர் ஆவர். 2023-2024-ஆம் நிதியாண்டில், மாநிலத்தில் 4,849 குழந்தைகள் ஒன்றிய மாநில அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் நிதி ஆதரவுத் திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர்.

**2024-2025-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.12.98 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 5.1.2 சட்டத்திற்கு முரண்பட்டதாக கருதப்படும் குழந்தைகள்

குற்றம் புரிந்ததாக தெரிவிக்கப்படும் நாளன்று பதினெட்டு வயது நிறைவடையாத, சட்டத்திற்கு முரணான செயல்களை செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட குழந்தைகள், சட்டத்திற்கு முரண்பட்டதாக கருதப்படும் குழந்தைகள் என வகைப்படுத்தப்படுவர்.

### 5.1.2.1 இளைஞர் நீதிக் குழுமங்கள்

இளைஞர் நீதிக் குழுமங்களானது, இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015-ன்படி அமைக்கப்பெற்ற சட்டப்பூர்வமான அமைப்பாகும். இக்குழுமங்கள் குழந்தைகளுக்கென வழங்கப்பட்டுள்ள அதிகார வரன்முறைக்குட்பட்டு சட்டத்திற்கு முரண்பட்டதாக கருதப்படும் குழந்தைகள் தொடர்பான நேர்வுகளைத் தீர்வு செய்வதற்கான அமைப்பாகும். இளைஞர் நீதிக் குழுமமானது, பெருநகர நீதிமன்ற நடுவர் அல்லது முதல் வகுப்பு நீதித்துறை நடுவர் மற்றும் இரண்டு சமூகப் பணியாளர் உறுப்பினர்கள் (ஒரு பெண் உறுப்பினர் உட்பட) ஆகியோரை உள்ளடக்கியது. இளைஞர் நீதிக் குழுமத்தின் அனைத்து நடைமுறைகளும், குழந்தைகளின் அதிகபட்ச நலனை உறுதிசெய்யும் வகையில் குழந்தை நேய அணுகுமுறையில் அமைந்துள்ளது. தமிழ் நாடு அரசு, மாநிலத்தின் 38 மாவட்டங்களுக்கென, 33 மாவட்டங்களில் இளைஞர்

நீதிக் குழுமங்களை அமைத்துள்ளது. இக்குழுக்களின் மூலம் 2023–2024–ஆம் ஆண்டில் 4,470 வழக்குகள் கையாளப்பட்டுள்ளன.

**2024–2025–ஆம் ஆண்டு வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.5.58 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**5.1.2.2 கூர்நோக்கு இல்லங்கள்**

இளைஞர் நீதி முறை அமைப்பின்படி, இளைஞர் நீதிக் குழுமத்தின் முன்பு முன்னிலைப்படுத்தப்படும் சட்டத்திற்கு முரண்பட்டதாக கருதப்படும் சிறார்களுக்கு விசாரணை நடைபெறும் காலங்களில், நிறுவனம் சார்ந்த தற்காலிக சேவையும் பாதுகாப்பும் வழங்க கூர்நோக்கு இல்லங்கள் நிறுவப்பட வேண்டும். தமிழ்நாட்டில் தற்போது 8 கூர்நோக்கு இல்லங்கள் அரசால் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வில்லங்களில் உறையும் சிறார்களுக்கு அடிப்படைத் தேவைகளான தங்குமிடம், உணவு, உடை, படுக்கைகள் மற்றும்

அவர்களின் குறுகிய கால மறுவாழ்வின் ஒரு பகுதியாக முறைசாராக் கல்வி, தொழிற்கல்வி மற்றும் மருத்துவ வசதிகள் ஆகியவற்றோடு, ஆற்றுப்படுத்துதல் போன்ற இதர சேவைகளும் வழங்கப்படுகின்றன. மேம்படுத்தப்பட்ட பாதுகாப்பிற்காக அரசு அனைத்து கூர்நோக்கு இல்லங்களிலும் கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு உபகரணங்களை (CCTV) அமைத்துள்ளது. கூர்நோக்கு இல்லங்களிலிருந்து விடேகும் குழந்தைகள் நன்னடத்தை அலுவலர்களால் கண்காணிக்கப்படுகிறார்கள். 31.03.2024-ன்படி, 140 குழந்தைகள் 8 கூர்நோக்கு இல்லங்களில் தங்கியுள்ளனர்.

**2024-2025-ஆம் ஆண்டு வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் இத்திட்டத்திற்காக ரூ.7.95 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 5.1.2.3 சிறப்பு இல்லங்கள்

சட்டத்திற்கு முரண்பட்டதாக கருதப்படும் குழந்தைகள் உரிய விசாரணைக்கு பின் இளைஞர் நீதிக் குழுமத்தால் குற்றம் உறுதி செய்யப்பட்டவர்கள் என தீர்மானிக்கப்படும் நேர்வில், அவர்களுக்கான நீண்டகால மறுவாழ்வினை சிறப்பு இல்லங்கள் வழங்குகின்றன. இக்குழந்தைகள் 3 ஆண்டுகளுக்கு மிகாமல் இவ்வில்லங்களில் தங்க வைக்கப்பட்டு நீண்டகால மறுவாழ்வு திட்டங்கள் வழங்கப்படுகிறது. சிறப்பு இல்லங்களில், குழந்தைகளுக்கு கல்வி, தொழிற்பயிற்சி, ஆற்றுப்படுத்துதல் மற்றும் இணை பாடத்திட்ட செயல்பாடுகளுக்கான வசதிகள் போன்ற சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. சென்னையில் சிறுமியருக்காகவும், செங்கல்பட்டில் சிறுவருக்காகவும் என இரண்டு அரசு சிறப்பு இல்லங்கள் செயல்பட்டு வருகிறது. சாத்தியமான திறன் மற்றும சுயதொழிலில் ஆர்வமுள்ள குழந்தைகள் சுய வாழ்வாதாரத்தை அடைவதற்காக சுயதொழில் தொடங்குவதற்கான

கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்கு இளைஞர் நீதி நிதியின் கீழ் நிதியுதவி செய்யப்படுகிறது. 31.03.2024–ன்படி, 24 குழந்தைகள் சிறப்பு இல்லங்களில் தங்கியுள்ளனர்.

**2024–2025 ஆம் ஆண்டு வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.3.19 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 5.1.2.4 பாதுகாப்பு இல்லம்

பாதுகாப்பு இல்லம் என்பது 16 வயதிலிருந்து 18 வயதிற்கு இடைப்பட்ட குழந்தை ஒரு கொடுங்குற்றத்தைச் செய்ததாக கருதப்படுபவராகவோ அல்லது தண்டிக்கப்பட்ட குற்றவாளியாகவோ இருப்பவர்களை தங்க வைப்பதற்கான இல்லமாகும். 18 வயதிற்குள் சட்டத்திற்கு முரணாக செயல்பட்டு, 18 வயதை கடந்த நபர்களும் தங்க வைப்பதற்கான இல்லமாகும். இவர்கள், இளைஞர் நீதிக் குழுமம் அல்லது குழந்தைகள் நீதிமன்றத்தின் ஆணையின்படி,

அதிகபட்சமாக 21 வயது நிறைவடையும் வரை பாதுகாப்பு இல்லத்தில் தங்க வைக்கப்படுகின்றனர். தமிழ்நாட்டில் சிறுவர்களுக்கான அரசினர் பாதுகாப்பு இல்லமானது வேலூர் மற்றும் செங்கல்பட்டில் நிறுவப்பட்டுள்ளன. இவ்வில்லத்தில் தங்கியுள்ள காலங்களில் இவர்களுக்கு கல்வி, ஆற்றுப்படுத்துதல், நடத்தை மாற்றம் உள்ளடக்கிய சீர்திருத்த சேவைகள் வழங்கப்படுகின்றன. தற்போது மதுரை சிறுவர் / சிறுமியருக்கான அரசினர் கூர்நோக்கு இல்லத்தின் ஒரு பகுதியை பிரத்தியேகமாக சிறுமியர்களுக்கான பாதுகாப்பு இல்லமாக அங்கீகரித்து அரசு ஆணை வழங்கியுள்ளது. 31.03.2024-ன்படி, 35 குழந்தைகள் பாதுகாப்பு இல்லத்தில் தங்கியுள்ளனர்.

**2024-2025 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.74.32 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 5.1.3 இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015ன் கீழ் அனைத்து குழந்தை பராமரிப்பு நிறுவனங்களை பதிவு செய்தல்

இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015ன் கீழ் அனைத்து குழந்தை பராமரிப்பு நிறுவனங்களும் பதிவு செய்யப்பட வேண்டும். அவ்வாறு பதிவு செய்யப்படாமல் செயல்படும் குழந்தை பராமரிப்பு நிறுவனங்களின் மீது சட்ட ரீதியான தண்டனை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. 2017ஆம் ஆண்டின் தமிழ்நாடு இளைஞர் நீதி விதிகளின் கீழ் குறிப்பிட்டுள்ள குறைந்தபட்ச தரம் / வசதிகளுக்கான வரையறையின்படி, தங்குமிடம், கட்டடத்தின் உறுதித்தன்மை, கட்டட உரிமம், தீயணைப்பு வசதிகள் மற்றும் சுகாதார வசதிகள் போன்ற வசதிகளை பூர்த்தி செய்யும் நிறுவனங்கள் மட்டுமே பதிவு செய்யப்படுகின்றன. 31.03.2024 அன்றுள்ளபடி, 859 குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள் [பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளுக்கான

இல்லங்கள்–846 (குழந்தைகள் இல்லங்கள் 807, திறந்தவெளிப் புகலிடங்கள்–13, சிறப்பு தத்தெடுப்பு முகமைகள்–26) சட்டத்திற்கு முரணாக கருதப்படும் சிறார்களுக்கான இல்லங்கள்–13 (கூர்நோக்கு இல்லங்கள்–8, சிறப்பு இல்லங்கள்–2, பாதுகாப்பு இல்லங்கள்–3)] பதிவு செய்யப்பட்டுள்ளன. சுமார் 27,007 குழந்தைகள் பதிவு செய்யப்பட்ட இல்லங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். குழந்தைகள் இல்லங்களுக்கான பதிவு செயல்முறைகள் முழுவதும் இத்துறையின் குழந்தை பாதுகாப்பு தகவல் மேலாண்மை மற்றும் கண்காணிப்பு அமைப்பின் (CPIMMS) இணைய முகப்பு வழியாக மேற்கொள்ளப்படுகிறது.

### 5.1.4 குழந்தை பராமரிப்பு நிறுவனங்களின் ஆய்வு மற்றும் கண்காணிப்பு

மாநிலத்தில் செயல்படும் குழந்தை பராமரிப்பு நிறுவனங்களை திறன்பட ஆய்வு செய்யவும், நிர்ணயிக்கப்பட்ட தரத்தினை உறுதி செய்யவும்,

ஏற்கனவே ஆய்வு செய்யும் அமைப்புகளான இளைஞர் நீதி குழுமங்கள், குழந்தை நலக் குழுக்கள் மற்றும் மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகுகளுடன் சேர்த்து மாநில மற்றும் மாவட்ட அளவிலான ஆய்வுக் குழுக்களை அரசு அமைத்துள்ளது. **மாநில அளவிலான ஆய்வுக் குழு**, குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை இயக்குநர் / செயலர், மாநில குழந்தை பாதுகாப்பு சங்கம் அவர்களை தலைவராக கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவிலான ஆய்வுக் குழுவானது, மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலுவலரை உறுப்பினர் செயலராகவும், குழந்தை நலக் குழு / இளைஞர் நீதிக் குழுமம், மருத்துவ அலுவலர், மனநல நிபுணர் மற்றும் தன்னார்வு தொண்டு நிறுவன பிரதிநிதி ஆகிய நான்கு பேரை உறுப்பினராக கொண்ட குழுவாக சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரால் அமைக்கப்பட்டுள்ளது.

### 5.1.5 பிற்காப்பு நிறுவனங்கள்

குடும்பம் மற்றும் பிற ஆதரவு இல்லாத நிலையில் உள்ள எந்த குழந்தையும், 18 வயது நிறைவடைந்து நிறுவனங்களிலிருந்து வெளியேறும் போது, அவர்கள் சமூகத்துடன் ஒன்றிணைக்கப்படும் காலம் வரை சுயசார்பு நிலைக்கு தங்களை மாற்றிக் கொள்ள தேவையான இடைப்பட்ட காலத்தில், பிற்காப்பு சேவைகள் வழங்க பிற்காப்பு நிறுவனங்கள் செயல்படுகின்றன. ஆண்களுக்காக, செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள ஆத்தூர் மற்றும் மதுரையிலும், பெண்களுக்காக வேலூரிலும் என 9 பயனாளிகளுடனும் அரசு பிற்காப்பு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் வழங்கப்படும் பிற்காப்பு சேவைகளுக்கு ஒரு சிறாருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.4,000/- வீதம் பிற்காப்பு நிதி வழங்கப்பட்டு வருகிறது. மயிலாடுதுறையில் தன்னார்வ தொண்டு நிறுவனத்தால் குழந்தை பாதுகாப்பு சேவைகள்

திட்டத்தின் கீழ் வயது வந்த மாற்று திறனாளிகளுக்கான பிற்காப்பு நிறுவனம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனத்தில் 40 பயனாளிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

**2024-2025 ஆம் ஆண்டின் வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.2.18 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 5.1.6 குழந்தை பாதுகாப்பு சேவைகள் திட்டம் (Mission Vatsalya)

இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015ன் கீழ் வகுக்கப்பட்ட செயல்பாடுகளை நிறைவேற்ற பரந்த கட்டமைப்பை "குழந்தை பாதுகாப்பு சேவைகள்" திட்டம் ஏற்படுத்தியுள்ளது. குழந்தைகளின் தனிநபர் திட்டத்தினை மனதில் கொண்டு ஒவ்வொரு குழந்தையின் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்காக திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. தகுந்த இடைவெளியில் கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வு

மேற்கொள்ளப்படுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. மாவட்ட அளவில் குழந்தைகள் பாதுகாப்பு சேவைகளை செயல்படுத்துவதை கண்காணிக்க செயல்திறன் மற்றும் மேலாண்மை குறியீடுகளை குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை உருவாக்கியுள்ளது.

ஒன்றிய-மாநில அரசின் பங்களிப்புடனான குழந்தை பாதுகாப்பு சேவைகள் திட்டத்தின் கீழ், மாநில மற்றும் மாவட்ட அளவிலான கட்டமைப்புகளை போதுமான அளவில் அரசு நிறுவியுள்ளது. இத்திட்டத்தின் கீழ் குழந்தைகளுக்கு ஏற்றதான சூழ்நிலையில் சிறந்த வாய்ப்புகளை வழங்கி, அவர்களின் பராமரிப்பு, பாதுகாப்பு, மேம்பாடு மற்றும் மறுவாழ்வினை அளித்து வருகிறது. அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள், சமூகப் பங்களிப்புடன் இத்திட்டத்தினை வெளிப்படைத்தன்மையாக செயல்படுத்துவதால், இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்த முடிகிறது. நிறுவனங்களில் உள்ள குழந்தைகளுக்கு தரமான சேவை வழங்குதல்,

இடர்பாடான சூழ்நிலையில் உள்ள குழந்தைகளுக்கான தலையிட்டு திட்டங்கள், குழந்தைகள் பாதுகாப்பை மேம்படுத்துதல், இல்லத்தில் நிறுத்தி வைத்தலுக்கு மாற்றாக குடும்பம் சார்ந்த பராமரிப்பு, குழந்தைகளுக்கு குடும்பங்களைக் கண்டறிதல், குழந்தை, தகவல் அமைப்புக்கான இணையதளம் மற்றும் காணாமல் போன குழந்தைகளைக் கண்டுபிடிக்கும் திட்டம் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய கூறுகளாகும்.

### 5.1.6.1 குழந்தை பாதுகாப்பு சேவைகள் திட்டத்தின் கீழ் செயல்படும் கட்டமைப்புகள்

குழந்தை பாதுகாப்பு சேவைகளை சிறப்பாக நடைமுறைப்படுத்த, கீழ்க்காணும் சேவை அளிக்கக் கூடிய கட்டமைப்புகளை அரசு உருவாக்கியுள்ளது:-

1. மாநில குழந்தை பாதுகாப்புச் சங்கம்
2. மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகுகள்
3. மாநில தத்தெடுப்பு வள முகமை

குழந்தைகளின் பல்வேறு தேவைகளை நிறைவேற்ற சுகாதாரத்துறை, கல்வித்துறை, நீதித்துறை, காவல்துறை, தொழிலாளர் மற்றும் திறன் மேம்பாட்டுக் கழகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளுடன் இணைந்து செயல்பாட்டாளர்களுக்கு பல்வேறு நிலைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**2024-2025-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.30.80 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**5.1.6.2 குழந்தை பாதுகாப்பு சேவைகளை கண்காணித்தல்**

குழந்தை உரிமை மீறல் சம்பவங்களைத் தடுக்கவும், குழந்தை பாதுகாப்பை உறுதி செய்யவும் கிராமப்புரம் மற்றும் நகர்ப்புரங்களில் புதிய குழந்தை பாதுகாப்புக் குழுக்களை தமிழ் நாடு அரசு அமைத்துள்ளது.

**அ. கிராமப்புரங்களில் உள்ள குழந்தை பாதுகாப்புக் குழுக்கள்:**

1. கிராம அளவிலான குழந்தை பாதுகாப்புக் குழு.
2. வட்டார அளவிலான குழந்தை பாதுகாப்புக் குழு.
3. மாவட்ட அளவிலான குழந்தை பாதுகாப்புக் குழு.

**ஆ. நகர்ப்புரங்களில் உள்ள குழந்தை பாதுகாப்புக் குழுக்கள்:**

1. நகர பஞ்சாயத்து அளவிலான குழந்தை பாதுகாப்புக் குழு.
2. நகராட்சி அளவிலான குழந்தை பாதுகாப்புக் குழு.
3. மாநகராட்சி மண்டல அளவிலான குழந்தை பாதுகாப்புக் குழு.

இக்குழுக்களானது, குழந்தை திருமணம், குழந்தை தொழிலாளர், குழந்தை தொழிலுக்காக இடம் பெயர்தல், சுரண்டப்படுதல், சட்டத்திற்கு புறம்பாக குழந்தைகளை தத்து வழங்குதல், குழந்தை பாதுகாப்பு

மற்றும் குழந்தைகளுக்கெதிரான பாலியல் குற்றங்களைத் தடுத்தல், பெண் கருக்கொலை மற்றும் சிசுக் கொலையைக் குறைத்து, பெண் குழந்தை பாலின விகிதத்தை உயர்த்துதல் போன்ற குழந்தை பாதுகாப்பு சேவை பணிகளை மேற்கொள்கின்றன.

மாநில குழந்தை பாதுகாப்புச் சங்கம், யுனிசெஃப் உடன் இணைந்து, குழந்தை உரிமை மீறல் சம்பவங்களைக் குறைப்பதற்கும், எதிர்த்துப் போராடுவதற்கும், கிராம அளவில் கூட்டங்களை சிறப்பாக நடத்துவதற்கும், கையேடு ஒன்றையும் வெளியிட்டுள்ளது. கூட்டத்தில் கடைபிடிக்கப்பட வேண்டிய வழிமுறைகள் மற்றும் கூட்ட செயல்பாடுகள் /விவாதங்கள் ஆகியவற்றை ஆவணப்படுத்துவதற்கான படிவங்களும் அதில் இடம் பெற்றுள்ளன. ஊரக மற்றும் நகர பகுதிகளில் உருவாக்கப்பட்டுள்ள குழந்தை பாதுகாப்புக் குழுக்களுக்கு, குழந்தை பாதுகாப்பு தொடர்பான பிரச்னைகளை கையாளுவதற்கு திறன் வளர்ப்பு பயிற்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது குழந்தை பாதுகாப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டு 29,045 கூட்டங்கள் நடத்தப்பட்டு உள்ளது. இந்த ஆண்டில்,

- மாவட்ட குழந்தை பாதுகாப்பு அலகு மூலம் 19,533 குழந்தைகளுக்கு எதிரான வழக்குகள் கையாளப்பட்டுள்ளன.
- மாநில அளவில் 5 பயிற்சிகள் மூலம் 402 குழந்தை பாதுகாப்பு தொடர்பான பங்காளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.
- மாவட்ட அளவில் 194 பயிற்சிகள் மூலம் 14,873 குழந்தை பாதுகாப்பு செயற்பாட்டாளர்கள் மற்றும் பங்காளர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.
- 10,076 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மூலம் 20,42,857 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

## 5.2 பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் (போக்சோ) சட்டம், 2012

பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2012, குழந்தைகள் மீதான பாலியல் வன்கொடுமை மற்றும் பாலியல் சுரண்டல்களை திறம்பட கையாண்டு, ஒவ்வொரு நிலையிலும் குழந்தையின் நலனை பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்டது. மேலும், பாலியல் வன்கொடுமை, பாலியல் துன்புறுத்தல் மற்றும் ஆபாசப் படங்கள் ஆகியவற்றிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கிறது. இது குற்றங்களின் தீவிரத்தன்மைக்கு ஏற்ப கடுமையான தண்டனையை வழங்குவதற்கு வழிவகை செய்கிறது. எளிமையானது முதல் பல்வேறு சூழலில் கடுமையான சிறைதண்டனை வரை வழங்கப்படுகிறது. அபராதம் விதிப்பதற்கும் இச்சட்டத்தின் கீழ் வழிவகை செய்யப்பட்டு அத்தொகை நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படுகிறது.

பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2012 ஆனது, பாலியல் குற்றங்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் மறுவாழ்வுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கையாக அவர்களுக்கு இழப்பீடு வழங்க வழிவகை செய்கிறது.

பாலியல் குற்றங்களில் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் மறுவாழ்வு மற்றும் எதிர்கால நலனுக்காக, தமிழ் நாடு அரசு இச்சட்டத்தின் கீழ் இழப்பீட்டு தொகை வழங்கும் பொருட்டு **"தமிழ் நாடு பாதிக்கப்பட்ட குழந்தைக்கான இழப்பீட்டு நிதி"** உருவாக்கப்பட்டு, அதன் மூலம் இதுநாள் வரை 2,445 குழந்தைகளுக்கு ரூபாய் 44.99 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**2024-2025-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.25.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

## 5.3 குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்கள் சட்டம், 2005

தமிழ் நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம், குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்கள் சட்டம் 2005, சட்டப் பிரிவு 17(1)–ன்படி அமைக்கப்பட்டு, நடைமுறையிலுள்ள குழந்தைகள் தொடர்பான பல்வேறு சட்டங்களை நடைமுறைப்படுத்துதலை மேற்பார்வை செய்வதற்காக அமைக்கப்பட்டது. இவ்வாணையம் 18.01.2013 முதல் ஒரு தலைவர் மற்றும் ஆறு உறுப்பினர்களையும் கொண்டு செயல்பட்டு வருகிறது.

இம்மாநில ஆணையத்தின் முக்கிய நோக்கமே தற்போது அமலில் இருக்கும் குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் நலன் சார்ந்த பல்வேறு சட்டங்களை நடைமுறைப்படுத்தப்படுத்தலை மேற்பார்வை செய்தல் மற்றும் அரசுக்கு பரிந்துரைகள் வழங்குவது ஆகும்.

**ஆணையத்தின் செயல்பாடுகள்:**

- குழந்தை தொடர்பான சட்டங்களை நடைமுறைப்படுத்தப்படுவதை கண்காணித்தல்/ மேற்பார்வை செய்தல்.

- குழந்தை உரிமை மீறல் தொடர்பான நிகழ்வுகளில் உரிய ஆவணங்களை காவல்துறை மற்றும் பிற துறைகளிடமிருந்து பெறுதல்.

- குழந்தை உரிமை மீறல் நடைபெறும் நிகழ்வுகளில் முதற்கட்ட விசாரணைகளுக்கு பின் தேவையான மற்றும் உடனடி நடவடிக்கை எடுக்க உரிய அதிகாரிக்கு பரிந்துரை செய்தல்.

- குழந்தை உரிமைகள் பற்றிய விழிப்புணர்வினை பொதுமக்களுக்கு ஏற்படுத்துதல்.

- பொது மக்கள், ஊடகங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட புகார்கள் மற்றும் தாமாக முன்வந்து குழந்தை உரிமை மீறல்களுக்கு எதிராக, தேவைப்படும் உரிய நடவடிக்கைகளை எடுத்தல்.

➢ அரசு மற்றும் அரசு சாரா நிறுவன அமைப்புகளுக்கு குழந்தை உரிமை தொடர்பான பயிற்சிகள் வழங்குதல்.

இந்த ஆணையத்தால் 18.01.2013 முதல் இது வரை கையாளப்பட்ட குழந்தை உரிமைகள் தொடர்பான சுமார் 4,865 வழக்குகள் விவரம் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளன:-

| | | |
|---|---|---|
| 1 | இளைஞர் நீதிச் (குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2015 | 1,786 |
| 2 | குழந்தை திருமணத் தடைச் சட்டம், 2006 | 458 |
| 3 | குழந்தைகளின் கட்டாயம் மற்றும் இலவச கல்வி உரிமைச் சட்டம், 2009 | 928 |
| 4 | பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம், 2012 | 1,513 |
| 5 | குழந்தை தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986 | 180 |

**2024-2025-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.87.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 5.4 ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956

ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956, பெண்களை வணிக நோக்கிலான பாலியல் சுரண்டலுக்கும், கடத்தலுக்கும் உள்ளாக்குவதை தடுப்பதை நோக்கமாக கொண்டுள்ளது. இச்சட்டம், பாதிக்கப்பட்டவர்களை நிறுவனத்தில் தங்க வைத்து கல்வி, பயிற்சி மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றை வழங்குதல் மூலம் குறுகிய மற்றும் நீண்ட கால மறுவாழ்வு அளிக்க வழிவகை செய்கிறது.

#### 5.4.1 மகளிர் காப்பகங்கள் / பாதுகாப்பு இல்லங்கள்

ஒழுக்கநெறி அச்சுறுத்தலுக்குள்ளான/ பாதிக்கப்பட்ட பெண்கள், மகளிர் காப்பகங்கள்/ பாதுகாப்பு இல்லங்களில் தங்க வைக்கப்படுகின்றனர். இவ்வாறு பாதிக்கப்பட்ட பெண்கள் ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956-ன் கீழ் நீதிமன்ற ஆணையின்படி இக்காப்பகங்களில் அனுமதிக்கப் படுகின்றனர். இவ்வில்லங்களில் தங்கியுள்ள மகளிரின் மறுவாழ்விற்கென பராமரிப்பு, மருத்துவ சிகிச்சை,

உளவியல் ஆலோசனை மற்றும் தொழிற்பயிற்சிகள் ஆகிய சேவைகள் வழங்கப்படுகின்றன. "பாதிக்கப்பட்ட பெண்களுக்கான நிவாரண நிதியிலிருந்து" ரூ.10,000/- நிதியுதவி வழங்கப்படுகிறது.

ஒழுக்கநெறி பிறழ்தல் (தடுப்பு) சட்டம், 1956-ன் கீழ் மாநில அரசால் சென்னை, மதுரை, சேலம், கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் பாதிக்கப்பட்ட பெண்களின் மறுவாழ்விற்காக ஐந்து அரசு மகளிர் காப்பகங்கள் / பாதுகாப்பு இல்லங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்நிறுவனத்தில் அனுமதிக்கப்படும் பாதிக்கப்பட்ட மகளிருக்கு இலவச சட்ட உதவி வழங்கப்படுகிறது.

**2024-2025-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.5.26 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 5.4.2 வாழ்வொளித் திட்டம் (Ujjawala Scheme)

பெண்கள் மற்றும் குழந்தைகள் வணிகரீதியான பாலியல் தொழிலுக்காக கடத்தப்படுவது, மனித உரிமைகளுக்கு எதிரான குற்றமாகும். பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு பாதுகாப்பு மற்றும் முறையான மறுவாழ்வை உறுதி செய்வதற்காக ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் உதவியுடன் வாழ்வொளித் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம், பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான வணிக ரீதியான பாலியல் சுரண்டலை தடுக்கவும், கடத்தப்பட்டவர்களை மீட்டு, மறுவாழ்வு அளித்து, சமூகத்துடன் ஒருங்கிணைக்கவும் வழிவகை செய்வதற்குமான ஒரு விரிவான திட்டமாகும். தமிழ்நாட்டில் 3 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**2024–2025–ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.1.14 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**5.5 முதலமைச்சரின் பொது நிவாரண நிதியின் (CMPRF) கீழ் கோவிட் - 19 காரணமாக பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கான நிதி உதவி மற்றும் பல்வேறு நலத்திட்டங்கள்**

1. ஒரு நாட்டின் முன்னேற்றம், குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் நலனை சார்ந்தே அமைகிறது என்பதை தமிழ்நாடு அரசு உறுதியாக நம்புகிறது. அசாதாரண சூழ்நிலை, இயற்கை பேரிடர் மற்றும் பெருந்தொற்று போன்ற காலங்களில் குழந்தைகளைப் பாதுகாப்பதற்கு எப்போதும் உதவிக்கரமாக ஒரு முறையை உருவாக்கி செயல்படுத்தி வருகிறது. அவ்வாறு கோவிட்–19 பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டு பெற்றோர்கள் இருவரையும் இழந்து ஆதரவின்றி தவிக்கும் 382 குழந்தைகளுக்கு அவர்களின் பெயரில் தலா ரூபாய் 5.00 இலட்சம் என மொத்தம் ரூபாய் 19.10 கோடி நிலையான வைப்புத்தொகையாக வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. அக்குழந்தைகள் 18 வயது நிறைவடையும் வரை குடும்ப சூழலில்

வரை மாத பராமரிப்புத் தொகையாக தலா ரூ.3,000/- என ரூ.234.87 இலட்சம் அரசு வழங்கியுள்ளது. மேலும், கொரோனா நோய் தொற்றினால் பெற்றோர் இருவரில் ஒருவரை இழந்து வறுமையில் வாடும் அக்குழந்தைகளை மீட்க உடனடி நிவாரணத் தொகையாக தலா ரூபாய் 3.00 இலட்சம் என 13,682 குழந்தைகளுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியில் இருந்து ரூபாய் 410.46 கோடி நிதியுதவி வழங்கியுள்ளது. இக்குழந்தைகளுக்கு அரசின் அனைத்து நலத்திட்ட உதவிகளிலும் முன்னுரிமை வழங்கியும், அவர்களின் கல்வி தடையின்றி தொடரவும் கல்வி செலவினை அரசே ஏற்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2. பெற்றோர் இருவரையும் இழந்த குழந்தைகளுக்கு அரசு மற்றும் அரசு நிதியுதவி

பெறும் இல்லங்கள் மற்றும் விடுதிகளில் சேருவதற்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

3. பெற்றோர் இருவரையும் இழந்த குழந்தைகளின் பட்டப்படிப்பு வரையிலான கல்விக் கட்டணம் மற்றும் விடுதிக் கட்டணம் உள்ளிட்ட அனைத்து செலவினங்களையும் அரசே ஏற்றுக் கொண்டுள்ளது.
4. இக்குழந்தைகளுக்கும், நோய்த் தொற்றினால் கணவன் அல்லது மனைவியை இழந்து, குழந்தையுடன் இருக்கும் பெற்றோருக்கும் அனைத்து அரசு நலத் திட்டங்களிலும் முன்னுரிமை வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு குழந்தைக்கும் வழங்கப்படும் நிதியுதவி, கல்வி, பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டில் அவர்களின் முன்னேற்றம் ஆகியவற்றை கண்காணிக்க மாவட்ட அளவிலான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் வசிக்கும் இலங்கை தமிழர்களுக்கும் இத்திட்டம் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது.

## 5.6 குழந்தைகள் மற்றும் மகளிருக்காக அரசால் எடுக்கப்பட்ட சிறப்பு முயற்சிகள்

### (அ) தமிழ் நாடு மாநில குழந்தைகளுக்கான கொள்கை

மகிழ்ச்சியான சூழலில் குழந்தைகளின் பராமரிப்பு, பாதுகாப்பு, வளர்ச்சி மற்றும் மேம்பாட்டை உறுதி செய்வதற்காக, தமிழ் நாடு அரசு, தமிழ் நாடு மாநில குழந்தைகளுக்கான கொள்கை 2021–ஐ வெளியிட்டுள்ளது. இதில் ஒவ்வொரு காரணிக்கும் தொடர்புடைய துறைகளின் ஆலோசனையின்படி முக்கிய குறிக்காட்டிகள் உருவாக்கப்பட்டுள்ளது.

### (ஆ) சாலையோரங்களில் உள்ள குழந்தைகளுக்கான மறுவாழ்வுக் கொள்கை

சாலையோரங்களில் உள்ள குழந்தைகளுக்கான 'மறுவாழ்வுக் கொள்கை 2022'–ஐ அரசு உருவாக்கி உள்ளது. சாலையோரங்களில் உள்ள குழந்தைகளைக்

கண்டறிந்து மீட்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பது மற்றும் அவர்களின் தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்ப அவர்களுக்கு பயனுள்ள மறுவாழ்வுக்கான தகுந்த செயல்திட்டத்தினை பரிந்துரைப்பது இக்கொள்கையின் முக்கிய நோக்கமாகும். இக்கொள்கை, சாலையோரங்களில் உள்ள குழந்தைகளைப் பற்றிய தகவல்களை வழங்கவும், அவர்களை கண்காணிக்கவும், பின்தொடர்வதற்கும் பிற மாநிலங்களில் உள்ள செயல்பாட்டாளர்களிடையே பயனுள்ள ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்கும் ஒரு திட்டத்தை வழங்குகிறது.

**(இ) சமூக மேம்பாட்டிற்கான ஒருங்கிணைந்த பயிற்சி மையம்**

தமிழ் நாடு அரசு, பணியாளர் மேம்பாடு, சான்றுகள் அடிப்படையிலான ஆராய்ச்சி, பல துறைகளின் ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல் பொது மற்றும் தனியார் துறைகளுடன் கூட்டாண்மைகளை நிறுவுதல் ஆகியவற்றின் மூலமாக பெண்கள் மற்றும் குழந்தை

பாதுகாப்பு அமைப்பை உள்ளடக்கிய ஒரு முற்போக்கு முன்மாதிரியான பயிற்சி மையத்தை நிறுவியுள்ளது. மேலும், இத்திட்டத்தினை விரிவுபடுத்தி சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் செயல்படும் இயக்குநரங்களில் உள்ள பணியாளர்களுக்கும் குழந்தை மற்றும் மகளிர் நலன், பாதுகாப்பு, உரிமை மற்றும் மேம்பாடு குறித்து பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. செங்கல்பட்டு மாவட்டத்தில் **"சமூக மேம்பாட்டிற்கான ஒருங்கிணைந்த பயிற்சி மையம்"** ரூபாய் 27.00 கோடி செலவில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2023–2024–ஆம் ஆண்டின் **சமூக மேம்பாட்டிற்கான ஒருங்கிணைந்த பயிற்சி மையம்** மூலம் குழந்தைகள் பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ளும் 1,128 பங்குதாரர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

### (ஈ) வாழ்வியல் வழிகாட்டு மையம்

அரசு மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் அனுமதிக்கப்படும் குழந்தைகள், பின்தங்கிய குடும்ப சூழ்நிலையைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். இடர்பாடான குடும்ப பொருளாதார சூழ்நிலையிலும், பெற்றோர்கள் கல்வி அறிவில் பின் தங்கியவர்களாகவும், ஆரோக்கியமற்ற வாழ்க்கை நிலை மற்றும் வறுமை போன்ற காரணங்களால், குழந்தைகள் குடும்பத்திலிருந்து போதுமான உதவியை பெற முடியாது என்பதை உணர்ந்த தமிழ் நாடு அரசு, இத்தகைய சிறார்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கு தேவையான உதவிகளை வழங்குவதற்கு மாநிலத்தின் 6 மாவட்டங்களில் "வாழ்வியல் வழிகாட்டு மையம்" செயல்படுத்தி வருகிறது.

**2024–2025– ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.45.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**(உ) மாநில அளவிலான வருடாந்திர விளையாட்டு போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்துதல்**

குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறையின் கீழ் இயங்கும் 36 அரசு குழந்தைகள் இல்லங்கள் மற்றும் அரசின் மானியம் பெறும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் உள்ள குழந்தைகளின் திறன்களைக் கண்டறிந்து, அவர்களை ஊக்குவிக்க தமிழ் நாடு அரசால், மாநில அளவிலான விளையாட்டு போட்டிகள் மற்றும் கலைநிகழ்ச்சிகள் 2017–ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் ரூ.25.00 இலட்சம் செலவில் நடத்தப்பட்டு வருகிறது.

**2024–2025 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.25.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

குழந்தை பராமரிப்பு இல்லங்களில் தங்கியுள்ள குழந்தைகள் விளையாட்டில் தொடர்ந்து ஈடுபட, விளையாட்டு பொருட்கள் கொள்முதல் செய்ய 2024–2025 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.2.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**5.7 பிற திட்டங்கள்**

**5.7.1 முறைசார் மற்றும் முறைசாராக் கல்வி**

அரசு குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் முறையான கல்வி வழங்குவதற்காக நிறுவனங்களின் வளாகத்திலேயே பள்ளிக் கல்வித் துறையால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகள் செயல்படுகின்றன. அவ்வாறு, வளாகத்திலேயே பள்ளிகளற்ற குழந்தைப் பராமரிப்பு நிறுவனங்களில் உள்ள குழந்தைகள், அருகிலுள்ள பள்ளிகளுக்கு அனுப்பப்படுகின்றனர். கூர்நோக்கு இல்லங்கள் மற்றும் வரவேற்பு பிரிவுகளில் தற்காலிகமாக தங்க வைக்கப்படும் குழந்தைகளுக்கு

முறைசாராக்கல்வி மற்றும் தொழிற்கல்வி அளிக்கப்பட்டு வருகின்றன.

33 அரசு குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் தங்கியுள்ள 642 குழந்தைகளின் திறன், தொழில் விருப்பம் மற்றும் மனநலன் சார்ந்த விருப்பம் ஆகியவற்றை அடையாளம் காணும் வகையில் அவர்களுக்கு தனிப்பட்ட மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் சாத்தியமான தொழில் விருப்பங்களை உள்ளடக்கிய தனி நபர் தொழில் சுய விவரங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

### 5.7.2 தொழிற்பயிற்சி மற்றும் திறன் வளர்ப்பு பயிற்சிகள்

நிறுவனங்களில் உள்ள குழந்தைகளின் திறன்களை மேம்படுத்த தையல், தட்டச்சு பயிற்சி, ஆடைகள் தயாரித்தல், குளிர்சாதனங்கள் பழுதுபார்த்தல், துரித உணவு தயாரித்தல், பிளம்பிங், குடிநீர் சுத்திகரிப்பான் பழுதுபார்த்தல், அடிப்படை

கணினி பயிற்சி, பேக்கரி பொருட்கள் தயாரித்தல் போன்ற குறுகியகால தொழிற்பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. மேலும், அரசு குழந்தைகள் இல்லத்தின் 45 முன்னாள் மாணவர்கள் பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருத்துவத் துறையால் நடத்தப்படும் துணை செவிலியர் (ANM) பயிற்சியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அரசு கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்களில் தங்கியுள்ள குழந்தைகளின் திறன்களை மேம்படுத்தவும், அவர்களை நேர்மறை செயல்பாடுகளில் ஈடுபடுத்தவும் **"அடிப்படை பயிற்சி தொகுதி"** உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அடிப்படை பயிற்சி தொகுதியானது, விளையாட்டு நடவடிக்கைகள் தவிர உடல்நலம் மற்றும் சுகாதாரம், வாழ்க்கைத் திறன்கள், பாலியல் கல்வி, போதைப் பழக்கத்தின் தீமைகள் பற்றிய விழிப்புணர்வு, சமூக மதிப்புகள் மற்றும் முரண்பாடுகளுக்கான தீர்வுகள் பரிமாற்றத் திறன், அடிப்படை கணினி திறன்கள்,

நாடகம், இசை, பாடல், நடனம், புகைப்படம் எடுத்தல் போன்றவற்றை உள்ளடக்கியது. மேற்படி பயிற்சி அரசு கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்கள் ஆகியவற்றில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் குழந்தைகளுடன் பணிபுரிந்த அனுபவமுள்ள தனி நபர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்கள் மூலம் அடிப்படை பயிற்சி தொகுதி செயல்படுத்தப்பட்டுள்ளது.

**2024-2025-ஆம் ஆண்டு வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.37.64 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 5.7.3 குழந்தைகளுக்கான கல்வி சுற்றுலா திட்டம்

தமிழ் நாடு அரசு, குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறையின் கீழியங்கும் 36 அரசு குழந்தைகள் இல்லங்களில் உள்ளுறையும் குழந்தைகள் கல்வி சார்ந்த வெளியுலக அனுபவத்தை

பெறும் வாய்ப்பினை ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் கல்வி சுற்றுலா திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது.

**2024–2025–ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 5.7.4 குழந்தைகளுக்கான உளவியல் சமூக ஆதரவு

குழந்தைகள் குற்றச் செயல்களில் ஈடுபடுவதற்கான காரணிகள் சிக்கலானவையாக உள்ளது. குழந்தை பருவ உளவியல் தாக்கம், நண்பர்களின் உந்துதல், சமூகத்தின் மீதான வெறுப்பு ஆகியவை குறிப்பிடக்கூடிய சில காரணிகளாகும். மறுபுறம், குழந்தைகள் இல்லங்களில் அனுமதிக்கப்படும் குழந்தைகள், பெற்றோரின் கவனிப்பு இல்லாமை மற்றும் உதவியின்மையால் பாதிக்கப்படுகின்றனர். இக்காரணிகள் அவர்களை உணர்ச்சி மற்றும் உளவியல் சிக்கல்களுக்கு

உட்படுத்துகின்றன. உளவியல் சிக்கல்களைச் சமாளிப்பதற்கும், நேர்மறையான அணுகுமுறையைப் பெறுவதற்கும், அரசு குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் உள்ள சட்டத்திற்கு முரணான குழந்தைகள் மற்றும் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளுக்கு தொழில்முறை ஆலோசகர்கள் மூலம் ஆற்றுப்படுத்துதல் சேவைகளை அரசு வழங்குகிறது. 2023-2024 ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்தின் கீழ் 3,781 குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

**2024-2025-ஆம் ஆண்டு வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.64.78 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**5.8 குழந்தை உதவி எண் சேவைகள் (1098)**

குழந்தை உதவி எண் **"பத்து ஒன்பது எட்டு"** என்பது இடர்பாடான சூழலில் உள்ள குழந்தைகளுக்கான 24x7 கட்டணமில்லா அவசர

தொலைபேசி சேவை எண் ஆகும். நெருக்கடி நிலையில் உள்ள குழந்தைகள் அல்லது இக்குழந்தைகளை காணும் எந்தவொரு நபரும் இக்குழந்தைகளை நெருக்கடியிலிருந்து உடனடியாக மீட்டல் அல்லது வழிகாட்டுதலுக்காக **1098** ஐ அழைக்கலாம். தமிழ்நாடு அரசின் கீழ் இச்சேவை 2023, ஆகஸ்டு 01 முதல் செயல்பட்டு வருகிறது. தற்போது, மாநிலம் முழுவதும் 38 மாவட்டங்களிலும் இச்சேவை வழங்கப்பட்டு வருகிறது. மேலும், கூடுதலாக இரயில் மற்றும் பேருந்து நிலையங்களில் காணப்படும் குழந்தைகளை மீட்பதற்காக 14 முக்கிய இரயில் நிலையங்கள் மற்றும் 1 பேருந்து நிலையம் ஆகியவற்றில் குழந்தை உதவி மையங்கள் உள்ளன. 01.08.2023 முதல் 31.03.2024 வரை 21,354 தொலைபேசி அழைப்புகளுக்கு இச்சேவையின் கீழ் உதவி செய்யப்பட்டுள்ளது.

**2024-2025-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.5.51 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 5.9 குழந்தை தகவல் அமைப்பு

குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு குறித்த முழுமையான நம்பத்தகுந்த தரவுகளை சேகரிக்கவும், செயல்பாட்டாளர்களிடையே தரவுகளை பகிரவும், குழந்தைகளுக்கான சேவைகளை கண்காணித்து வலுப்படுத்தவும், இளைஞர் நீதி அமைப்பின் கீழ் குழந்தைகளுக்காக செயல்படுத்தப்படும் திட்டங்களின் உண்மை நிலவரத்தை அறிந்து செயல்படவும், குழந்தை தகவல் அமைப்பு என்ற இணைய முகப்பினை ரூ.65.00 இலட்சம் செலவில் உருவாக்க அரசு ஆணை வழங்கியுள்ளது. குழந்தை பாதுகாப்பு தகவல் மேலாண்மை மற்றும் கண்காணிப்பு அமைப்புக்கான இவ்விணையதளம் 10.09.2023 முதல் செயல்பாட்டில் உள்ளது (https://dsdcpimms.tn.gov.in). இம்மின்னணு

முறை எளிய முறையில் உபயோகப்படுத்தி, குழந்தைகளின் முன்னேற்றத்தை ஒவ்வொரு நிலையில் கண்டறிய உதவுகிறது. தரவுகளை எளிதில் பெறவும், மேலாண்மை செய்யவும் மின்னணு முறையில் தரவுகள் பராமரிக்கப்படுகின்றன.

## 5.10 தனிநபர் பராமரிப்புத் திட்டம்

குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் தங்கியிருக்கும் அனைத்து குழந்தைகளுக்கும் தனிநபர் பராமரிப்புத் திட்டம் தயாரிக்கப்படுகிறது. இவை குழந்தைகளின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கும், நிறுவனங்களில் தலையீட்டு உத்திகளை வடிவமைப்பதற்கும், மறுவாழ்வு, மறுசீரமைப்பு மற்றும் குழந்தைகளை சமூகத்தில் மீண்டும் ஒருங்கிணைப்பதற்கும், திறம்பட திட்டமிடுவதற்கும் பயன்படுகிறது. மாநிலத்தில் செயல்பட்டு வரும் குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில் உள்ள பணியாளர்களுக்கு தரமான தனிநபர் பராமரிப்புத் திட்டத்தைத் தயாரிப்பதற்கான காலமுறை பயிற்சி

அளிக்கப்பட்டு வருகின்றன. தனிநபர் பராமரிப்பு திட்ட படிவத்தை நிபுணத்துவத்துடன் தயாரிப்பதற்கு பயிற்சி வழங்க இத்துறை யுனிசெஃப் உடன் இணைந்து ஒரு அனிமேஷன் வீடியோ மற்றும் ஒரு கையேட்டை தயாரித்துள்ளது.

## 5.11 குழந்தைகளுக்கான போதைத் தடுப்பு மையம்

குழந்தைகளுக்கான போதைத் தடுப்பு மையம். குழந்தைகள் குறிப்பாக சட்டத்திற்கு முரண்பட்ட குழந்தைகளிடையே காணப்படும் போதை மருந்து மற்றும் போதை தரும் பொருட்களுக்கு அடிமையாதல் பிரச்னைகளுக்கு தீர்வு காண்கிறது. தமிழ் நாடு அரசு, குழந்தைகளுக்கான பிரத்தியேக போதைத் தடுப்பு மையங்களை தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் மூலம் ஏற்படுத்தி, செங்கல்பட்டு, மதுரை, நாமக்கல், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி மற்றும் சென்னையில் இரண்டு இடங்களிலும் செயல்படுத்தி வருகிறது. இம்மையங்களில் பல்வேறு போதைப் பொருட்களுக்கு அடிமையாகியுள்ள சிறார்களுக்கு

இலவச சிகிச்சை அளிக்கப்பட்டு ஆலோசனைகள் வழங்குவதன் மூலம் மறுவாழ்வு அளிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 427 குழந்தைகள் பயன்பெற்றுள்ளனர். மேலும் கோயம்புத்தூர், தஞ்சாவூர், வேலூர், சேலம் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் கூடுதலாக 5 மையங்களுக்கு அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

**2024–2025–ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.1.46 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

### 5.12 போதைத் தடுப்பு மையங்கள்

மது மற்றும் போதைப் பொருட்களுக்கு அடிமையானவர்களை உள்நோயாளி மற்றும் வெளிநோயாளிகளாக சிகிச்சை அளிப்பதற்காக மாநிலத்தில் 24 ஒருங்கிணைந்த மறுவாழ்வு மையங்கள் (IRCAS) செயல்பட்டு வருகின்றன. இந்த மையங்கள் 21 மாவட்டங்களில் இந்திய அரசின்

நிதியுதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன. 15 படுக்கை வசதிகள் கொண்ட 19 மையங்களும், 30 படுக்கை வசதிகள் கொண்ட 2 மையங்களும் உள்ளன.

### 5.12.1 போதைப் பொருள் இல்லாத இந்தியாவிற்கான பிரச்சாரம் (Nasha Mukt Bharat Abhiyan)

மது மற்றும் போதைப் பொருட்களின் தீமைகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் குறிப்பாக, பள்ளி / கல்லூரி மாணவர்கள், லாரி / கனரக ஊர்தி ஓட்டுநர்கள், கட்டுமான தொழிலாளர்கள், சுய உதவிக் குழுக்கள் போன்றவர்களுக்கு நடத்தப்பட்டுள்ளன. **இந்திய அரசின் போதைப் பொருள் இல்லாத இந்தியாவிற்கான பிரச்சாரத் (Nasha Mukt Bharat Abhiyan)** திட்டத்தின் கீழ் விழிப்புணர்வு நிகழ்ச்சியினை நடத்துவதற்கு, ஒரு மாவட்டத்திற்கு ரூ.10.00 இலட்சம் வீதம் 20 மாவட்டங்களில் நடத்த 20 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

### 5.12.2 போதைப் பொருள் தடுப்பு குறித்து ஆசிரியர்களுக்கான பயிற்சி

அரசு நடத்தும் குழந்தை பராமரிப்பு நிறுவனங்களில், குழந்தைகளிடையே மது மற்றும் போதைப் பொருள்களின் தீமைகள் குறித்து தடுப்புக் கல்வி விழிப்புணர்வு ஏற்படுத்துதல், மது மற்றும் போதைப் பொருட்களுக்கு அடிமையான குழந்தைகளை முன்கூட்டியே கண்டறியும் ஆசிரியர்களின் திறன் மேம்பாடு ஆகியவை இந்திய அரசின் போதை பொருள் தேவை குறைப்புக்கான தேசிய செயல்திட்டத்தின் (NAPDDR) கீழ் ரூ.61.15 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படுகிறது.

### 5.13 நன்னடத்தை அமைப்பு

நன்னடத்தை என்பது இளைஞர் நீதி அமைப்பின் கீழ் ஒவ்வொரு கட்டத்திலும் குழந்தைகளின் பங்கேற்புடன் கூடிய விரைவான மறுவாழ்வு மற்றும் சமூக இணைப்புக்கு ஒரு பயனுள்ள அமைப்பாகும். சமூக விசாரணை அறிக்கைகளைத் தயாரித்து,

குழந்தை நலக் குழுக்கள் மற்றும் இளைஞர் நீதிக் குழுமங்களுக்கு உதவுவதற்காக நன்னடத்தை அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

குழந்தை நலக் குழுக்கள் மற்றும் இளைஞர் நீதிக் குழுமங்களில் முன்னிலைப்படுத்தப்படும் குழந்தைகளின் தனிப்பட்ட மற்றும் அவர்களின் குடும்ப பின்னணியினை இந்த அறிக்கைகள் விரிவாக எடுத்துரைத்து சரியான ஒரு முடிவை இவ்வமைப்புகள் மேற்கொள்ள உதவுகிறது. குறிப்பிட்ட வழக்குகளில் சட்டத்திற்கு முரணான குழந்தைகள் மற்றும் குழந்தைகள் இல்லங்களில் இருந்து விடேகும் குழந்தைகள் குறித்து பிற்காப்பு தொடர் நடவடிக்கைகளை நன்னடத்தை அலுவலர்கள் மேற்கொள்கின்றனர். குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் இயக்ககம், 32 மாவட்டங்களில் தலா ஒரு நன்னடத்தை அலுவலரைக் கொண்டுள்ளது. சென்னையில் வழக்குகள் அதிகமாக உள்ளதால் கூடுதலாக 3 நன்னடத்தை அலுவலர்கள்

நியமிக்கப்பட்டுள்ளனர். குழந்தைகளுக்கு முறையான மறுவாழ்வு நடவடிக்கைகளை விரைந்து வழங்குவதை உறுதி செய்ய வேண்டி குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் இயக்ககத்தில், காலமுறை ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

## 5.14 குழந்தை பாதுகாப்பிற்கான பிற துறைகளுடனான ஒருங்கிணைப்பு

குழந்தை பாதுகாப்பு பணிகள் என்பது பல்வேறு துறைகளும் இடையே ஒருங்கிணைந்து செயல்பட வேண்டிய ஒன்றாகும். குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறையானது, பல்வேறு துறைகளிலுள்ள குழந்தைகளுக்கான பலதரப்பட்ட சேவைகளை ஒருங்கிணைக்கிறது. சமூக நலன், கல்வித்துறை, தொழிலாளர் நலன், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி (SSA) தேசிய குழந்தைக் தொழிலாளர் திட்டம், இரயில்வே காவல்துறை, வருவாய் துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள், ஊரக வளர்ச்சி துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர்

வழங்கல் துறை, மருத்துவம் மற்றும் சுகாதாரம், காவல் துறை, நீதித் துறை, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் ஆகியவற்றுடன் குழந்தைகள் நலன் மற்றும் சிறப்புச் சேவைகள் துறை திறம்பட ஒருங்கிணைந்து அனைத்து குழந்தைகளின் பாதுகாப்பையும், பராமரிப்பையும் உறுதி செய்கிறது.

மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரை தலைவராகக் கொண்டு மாவட்ட குழந்தை பாதுகாப்பு குழுவிற்கான காலமுறை கூட்டங்கள் நடத்தப்பட்டு, அதில் குழந்தை பாதுகாப்பு தொடர்பான பிரச்னைகளுக்கு தீர்வு எட்டப்படுகிறது.

குழந்தைத் திருமணம், குழந்தை கடத்தல், குழந்தைகளை பிச்சையெடுக்க பயன்படுத்துதல், உடல் மற்றும் மனரீதியாக தீங்கிழைத்தல் மற்றும் குழந்தை தொழிலாளர் ஆகியோரை கண்டறிந்து மீட்பு மற்றும் மறு வாழ்வளிக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்

படுகிறது. மாவட்ட அளவில் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் தொடர்ந்து நடத்தப்படுகின்றன.

*******

## அத்தியாயம்–6

## நிலையான வளர்ச்சி இலக்குகள்

மாநிலத்தின் நிலையான வளர்ச்சி இலக்குகள் என்பது ஒரே சீரான ஒருங்கிணைந்த முறையில் பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்ற முப்பரிமாணங்களில் வளர்ச்சி இலக்குகள் நிர்ணயித்து கண்காணிப்பதாகும். அதற்காக அளவிடக்கூடிய 17 இலட்சிய இலக்குகளும் 169 குறியீடுகளும் தொடர் கண்காணிப்பிற்கு முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மாநில மற்றும் மாவட்ட அளவிலான இலக்குகள், குறியீடுகள் மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் பொறுப்பு NITI ஆயோக்கிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

NITI ஆயோக்குடன் இணைக்கப்பட்ட மாநில அலுவலகங்கள் வளர்ச்சி கண்காணிப்பு மற்றும் மதிப்பீடுகளை அரசின் திட்டங்கள் மூலம் அதன்

சாதனைகள் மற்றும் விளைவுகள் மக்களை முறையாக சென்றடைவதை ஆய்வு செய்கிறது.

இலக்குகள் மற்றும் இலக்குகளின் சாதனைகளை மதிப்பாய்வு செய்யவும் கண்காணிக்கவும் எட்டு கருப்பொருள் கொண்ட பணிக்குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த பணிக்குழுக்கள் குறிப்பிட்ட கால இடைவெளியில் சம்பந்தப்பட்ட துறைகளை அழைத்து ஆய்வுக் கூட்டங்கள் நடத்துவதன் மூலம் பஞ்சாயத்து , மாவட்ட மற்றும் மாநில அளவில் நீடித்த வளர்ச்சி இலக்குகளை எட்ட செய்ய வேண்டிய பணிகள் மற்றும் புதிய உத்திகளை எடுத்துக் கூறி நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அரசின் தலைமைச் செயலாளர் தலைமையிலான உயர் அதிகாரக் குழு தமிழ்நாட்டில் நிலையான வளர்ச்சி இலக்குகள் செயல்படுத்தப்படுவதை மேற்பார்வையிடுகிறது.

இலக்கு 5: பாலின சமத்துவத்தை அடைதல் மற்றும் அனைத்து பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு அதிகாரம் வழங்குதல்

இலக்கு – 5–ன் குறியீடுகளாவன :

5.1. பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளுக்கு எதிரான அனைத்து பாகுபாடுகளையும் முற்றிலுமாக களைதல்

5.2. சமுதாய மற்றும் சொந்த வாழ்விடங்களில் பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளுக்கெதிரான வன்முறை, கடத்தல், பாலியல் மற்றும் அனைத்து வகையான சுரண்டல்களையும் முற்றிலுமாக களைதல்.

5.3. குழந்தை திருமணம், கட்டாய திருமணம், பெண் இன உறுப்புகளை துண்டித்தல் ஆகிய கொடுமைகளை முற்றிலுமாக களைதல்

5.4. பொதுப்பணி கட்டமைப்பு மற்றும் சமூக பாதுகாப்பு கொள்கைகள் மூலம் தேசிய அளவில்

அங்கீகரிக்கப்பட்ட நடைமுறைகளைக் கொண்டு குடும்ப பொறுப்புகளை கையாளுதலில் ஆணுக்கும் பெண்ணுக்கும் சம பொறுப்பு அளிக்கவும், அளவிடப்படாத அங்கீகரிக்கப்படாத பெண்களின் குடும்ப வேலைகளுக்கு மதிப்பீடு செய்தல்

**5.5. அரசியல், பொருளாதாரம் மற்றும் பொது வாழ்வில் பெண்களின் முழு பங்களிப்பு மற்றும் சம வாய்ப்புகளை உருவாக்கி எல்லா நிலைகளிலும் தலைமைத்துவத்தை உறுதி செய்தல்.**

**5.6. பீஜிங் மாநாடு பரிந்துரை அடிப்படையிலும், மக்கட்தொகை மற்றும் வளர்ச்சி குறித்த உலகளாவிய மாநாட்டின் பரிந்துரைகளின்படியும், பாலியல் மற்றும் இனப்பெருக்க உரிமைகளை அனைவருக்கும் உறுதி செய்தல்**

பாலின சமத்துவம் மற்றும் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு அதிகாரமளித்தல் என்பது வாழ்க்கைச் சுழற்சி முறையில் ஒரு குழந்தையின் பிறப்பு முதல்

தொடங்க வேண்டும். பெண்களின் உயிர்வாழ்வு, பாதுகாப்பு மற்றும் அதிகாரமளிப்பை உறுதி செய்ய சமுதாயம் முயற்சிக்க வேண்டும். இலக்கு 5, பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான அனைத்து பாகுபாடுகளையும் முடிவுக்குக் கொண்டு வருவதையும், சுகாதாரம் மற்றும் கல்வியில் சமமான அணுகலை உறுதி செய்வதையும், வேலை வாய்ப்பிற்கான சம வாய்ப்புகளையும், பொருளாதார வளங்களுக்கான சம உரிமைகளையும் உறுதிப்படுத்துகிறது. தமிழ்நாட்டில், சமூக நலம் மற்றும் பெண்கள் அதிகாரமளித்தல் துறை, பாலின சமத்துவத்திற்கான இலக்கு – 5ஐ ஒருங்கிணைக்கும் துறையாகும்.

இலக்கு 5–ஐ நிறைவேற்றும் வகையில் தமிழ்நாடு அரசு கீழ்க்காணும் திட்டங்களை செயல்படுத்துகிறது.

**குழந்தை நலத் திட்டங்கள்**

I. தொட்டில் குழந்தைத் திட்டம்
II. முதலமைச்சர் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டம்

III. பெண் குழந்தைகளை பாதுகாப்போம், பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டம்

IV. சைல்டு ஹெல்ப் லைன் )1098)

V. குழந்தை திருமணத் தடைச் சட்டம், 2006

VI. இளைஞர் நீதிச் சட்டம் 2015

VII. பாலியல் குற்றத்திலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம் 2012

VIII. பெண் குழந்தைகள் முன்னேற்றத்திற்கான மாநில விருதுகள்

IX. குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினருக்கு முறையான கால வரையறைகளில் சுகாதார ஆய்வுகள்

X. முதலமைச்சரின் காலை உணவு திட்டம்

XI. சத்துணவுத் திட்டம்

XII. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்

**மகளிர் நலத் திட்டங்கள்**

I. அனைத்து மகளிர் காவல் நிலையங்கள்

II. பெண்கள் உதவி எண் (181), சைபர் கிரைம் உதவி எண் (1930)

III. காவல் துறை மூலம் காவலன், காவல் உதவி போன்ற கைப்பேசி தொடர்பு எண்கள்

IV. அனைத்து மாவட்ட தலைமையக மருத்துவமனைகளிலும் 39 ஒருங்கிணைந்த சேவை மையங்கள்.

V. ஏழு சேவை இல்லங்கள்

VI. 33 ஸ்வதார் இல்லங்கள்

VII. தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் பெண்கள் இலவசப் பயண வசதி

VIII. பணிபுரியும் மகளிர் விடுதிகள்

IX. பெண்கள் தையல் தொழிற் கூட்டுறவு சங்கங்கள்

X. மாநிலத்தில் உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 50% இடங்களும், வேலைவாய்ப்பில் 33% இட ஒதுக்கீடு

XI. பெண்கள் முன்னேற்றத்திற்கான மாநில விருதுகள்

XII. கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்குதல், பராமரிப்பு, சுகாதார சேவைகள், பேறுகால நிதி உதவி திட்டம்

XIII. பெண்களுக்கு குடும்ப சொத்தில் சம உரிமை

XIV. அரசு/தமிழ்வழி கல்வியில் அரசு உதவிப்பெறும்ப் பள்ளிகளில் பயிலும் மாணவியருக்கு உயர்கல்வி பயில மாதந்தோறும் ரூ.1000 உதவித்தொகை வழங்கும் புதுமைப்பெண் திட்டம்

XV. பெண்களுக்கான பாதுகாப்பு சட்டங்கள்

1. வரதட்சணை தடுப்புச் சட்டம், 1961
2. குடும்ப வன்முறையில் இருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் 2005
3. தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் சட்டம் 2014
4. பணிபுரியும் இடங்களில் பாலியல் துன்புறுத்தல்களிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் 2013

XVI. தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம்

XVII. விதவை மற்றும் ஆதரவற்ற பெண்கள் நல வாரியம்

XVIII. மாநில மகளிர் கொள்கை

XIX. சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்கள்

XX. பாலின சமத்துவத்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் நிதி ஒதுக்கீடு

**மூத்த குடிமக்கள் நலத்திட்டங்கள்**

I. முதியோர் உதவித்தொகை
II. முதியோர் இல்லங்கள்
III. மாநில முதியோர் கொள்கை
IV. நடமாடும் மருத்துவ மையம்
V. பெற்றோர் மற்றும் மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் நலச்சட்டம் 2007
VI. மூத்த குடிமக்களுக்கான மாநிலக்கொள்கை
VII. சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்கள்

**திருநங்கைகள் நலத் திட்டங்கள்**

I. திருநங்கைகள் ஓய்வூதியத் தொகை மாதம் ரூ.1500/-
II. இலவச பயண வசதி
III. சுயதொழில் துவங்க மானியமாக ரூ.50,000/-
IV. பதிவு செய்வதற்கான மொபைல் பயன்பாடு
V. அடையாள அட்டை, சுகாதார அட்டை, குடும்ப அட்டை
VI. திருநங்கைகள் தையல் கூட்டுறவு சங்கம்
VII. வீட்டுமனை பட்டா

VIII. திருநங்கைகள் (உரிமைகள்/பாதுகாப்பு) சட்டம் 2019

IX. திருநங்கைகள் கல்வி கனவுத்திட்டம்

X. தமிழ்நாடு அரசின் மாநில அளவிலான திருநங்கை விருது

பெண்கள் மற்றும் சிறுமியருக்கு அதிகாரம் அளித்தலையும் பாலின சமத்துவத்தையும் உயர்த்துவதை நோக்கமாக கொண்ட நிலையான வளர்ச்சி இலக்குகளில் இலக்கு –5யினை முன்னிறுத்தி இத்துறையின் நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. (இலக்கு 5ன் குறிக்கோள்களை சார்ந்து, எதிர்கால திட்டங்களை வடிவமைப்பதை முதன்மை நோக்கமாக கொள்ளப்படும். இதன் மூலம், சமத்துவ மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய சமுதாயத்தை நடைமுறையாக்குவதில், பெருமளவில் பங்காற்ற இயலும்.

## நிலையான வளர்ச்சி இலக்குகள் – ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்

நிலையான வளர்ச்சி இலக்குகள் 2 மற்றும் 4 குறித்து செயலாற்றும் துறைகளில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்துறையும் ஒன்றாகும். 6 மாதங்கள் முதல் 6 வயது வரையிலான குழந்தைகள், முன்னேற விழையும் மாவட்டங்களில் 14 முதல் 18 வரையிலான வளரிளம் பெண்கள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோர்களின் ஊட்டச்சத்து தேவைகளை நிறைவேற்றும் வகையில் குழந்தைகள் மையங்களை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்துறை செயல்படுத்தி வருகிறது.

கொள்கை அளவிலான செயல்பாடுகள் மற்றும் திட்டங்களின் உள்ளீடுகள் மூலம் நிலையான வளர்ச்சி இலக்குகளை 2030க்குள் அடையும் நோக்கத்துடன் இத்துறை பல்வேறு முயற்சிகளை முன்னெடுத்துள்ளது.

**இலக்கு எண்.2**

இலக்குஎண் 2, பசியை அகற்றுதல், உணவு பாதுகாப்பினை அடைதல், ஊட்டச்சத்தினை மேம்படுத்துதல் மற்றும் நிலையான வளர்ச்சியினை ஊக்குவித்தல் ஆகியவற்றை நோக்கமாக கொண்டுள்ளது. ஊட்டச்சத்து குறைபாட்டின் அனைத்து வகைகளையும், 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கிடையே அதன்விளைவுகளான குள்ளத்தன்மை மற்றும் மெலிவுத்தன்மையினை கையாளுவதற்கும் மற்றும் வளரிளம் பெண்கள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் 14-49 வயதுக்குட்பட்ட பெண்கள் ஆகியோரின் ஊட்டச்சத்து தேவைகளை நிறைவேற்றிடவும் இத்துறை கடுமையாக முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

- இணைஉணவு ஊட்டச்சத்து திட்டத்தின் (SNP) கீழ் சுமார் 28.52 இலட்சம் பயனாளிகள் பயனடைகின்றனர். சுமார் 1000 கோடி ரூபாய் செலவினம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- முன்னேற விழையும் மாவட்டங்களான இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் ஆகிய இரண்டு மாவட்டங்களில் வளரிளம் பெண்களுக்கான திட்டத்தின் (SAG) கீழ் 14–18 வயதுக்குட்பட்ட சுமார் 42,000 வளரிளம் பெண்களுக்கு இணை உணவு வழங்கப்பட்டு பயனடைந்து வருகின்றனர்.
- தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள செறிவூட்டப்பட்ட உணவுகள், இந்திய தரநிர்ணய சான்று வழங்கப்பட்ட சத்துமாவு, கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகளுக்கு செறிவூட்டப்பட்ட பிஸ்கட்ஸ், சூடான சமைத்த முட்டையுடன் கூடிய மதியஉணவு ஆகியவை குழந்தைகள் மற்றும் பெண்களிடையே ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் நுண்ணூட்டச் சத்துகுறைபாட்டின் தாக்கத்தினை குறையச் செய்ததுடன் தற்போது இதன் சதவீதம் தேசிய சராசரி அளவினைவிட குறைவாக உள்ளது

| தேசிய குடும்ப நல ஆய்வு | | | | |
|---|---|---|---|---|
| குறிக்காட்டிகள் | NFHS–4 (2016) | | NFHS–5 (2019–21) | |
| | அனைத்து இந்தியா | தமிழ்நாடு | அனைத்து இந்தியா | தமிழ்நாடு |
| குள்ளத்தன்மை (%) | 38.4 | 27.1 | 35.5 | 25 |
| மெலிவுத்தன் மை (%) | 21 | 19.7 | 19.3 | 14.6 |
| குறைந்த எடை (%) | 35.7 | 23.8 | 32.1 | 22 |
| இரத்த சோகை உள்ள 6–59 மாத வயதுடைய குழந்தைகள் (%) | 58.6 | 50.7 | 67.1 | 57.4 |

- **"ஊட்டச்சத்தை உறுதி செய்"** திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, ஊட்டச்சத்திற்கான சிறப்பு உள்ளீடு திட்டமாக, உண்பதற்கு தயாராக உள்ள சிகிச்சை உணவு (RUTF) மற்றும் ஊட்டச்சத்து பெட்டகங்கள், கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுள்ள குழந்தைகள் மற்றும் அவர்களின் தாய்மார்களுக்கும் வழங்கப்பட்டன. இதன் மூலம் சுமார் 74% குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டு நிலையிலிருந்து வெளிக் கொணரப்பட்டுள்ளனர்.

❖ PICME செயலிமூலம் பெறப்படும் எடைகுறையுடன் பிறந்த குழந்தைகளை கண்காணித்தல், குழந்தைகளின் வளர்ச்சியை கண்காணித்தல் மற்றும் Poshan Tracker செயலியில் நிகழ் நேரகண்காணிப்புக்காக தரவுகளை உள்ளீடு செய்தல், ஆகியவை ஒட்டுமொத்தமாக குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்தியுள்ளன.

**இலக்கு 4**

இலக்குஎண். 4 குழந்தைகளுக்கு தரமான கல்வியை வழங்குவதை நோக்கமாக கொண்டுள்ளது.குழந்தைகள் மையங்களில் முன்பருவக்கல்விக்கு வருகைபுரியும் குழந்தைகளது உடல், மொழி, அறிவாற்றல் மற்றும் சமூக மனஎழுச்சி வளர்ச்சிக்கான ஆரம்ப கால பராமரிப்பு மற்றும் கல்வியினை வழங்குவதை இத்துறை நோக்கமாக கொண்டுள்ளது. குழந்தைகள் பள்ளி செல்ல தயாராகுவதற்கு ஆயத்தப்படுத்திட இது உதவுகிறது. உயர்தரத்திலான முன்பருவக்கல்வியானது குழந்தைகளை பள்ளிக்கு தயார்படுத்துவதுடன்,

கல்வியில் வெற்றி பெறுவதற்கான அதிகவாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கும், குழந்தைகள் பள்ளியில் இணக்கமுடன் இருப்பதை விரைவுபடுத்துவதற்கும், அவர்களது நடவடிக்கைகளில் பிரச்சனைகளை குறைப்பதற்கும் உதவும் என்பதால், குழந்தைகளின் ஆரம்பகல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு அதிகளவில் முதலீடு செய்துள்ளது.

- 2 முதல் 6 வயதுடைய சுமார் 12 இலட்சம் குழந்தைகள் முன்பருவக் கல்விக்காக குழந்தைகள் மையங்களில் பதிவு செய்துள்ளனர்.
- அரசால் தயார் செய்யப்பட்டுள்ள "**ஆடிப்பாடி விளையாடு பாப்பா**" எனும் வயதிற்கேற்ற வளர்ச்சிக்கான சிறப்பு பாடத்திட்டமானது குழந்தைகள் மையங்களில் நாள்தோறும் 4 மணிநேரம் நடத்தப்பட்டு வருகிறது.
- குழந்தைகளுக்கு வயது வாரியான செயல்பாட்டு புத்தகங்கள், முன்பருவக்கல்வி உபகரணங்கள், குழந்தைகளுக்கான சீருடை, மதிப்பீட்டு அட்டை, பள்ளி முடிவுற்றுச் செல்லும் போது வழங்கப்படும் சான்றிதழ் ஆகியவை சிறப்பு முன்னெடுப்புகளாகும்.

❖ ஆரம்பகால குழந்தை பராமரிப்பு மற்றும் கல்வி (ECCE) குறித்த பயிற்சி அங்கன்வாடி பணியாளர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

❖ பெண்கள் முழுமையான வளர்ச்சி மற்றும் மேம்பாடு பெறுவதற்கும், வளர்ச்சி இலக்குகள் மற்றும் குறியீடுகளை அடைவதற்கும் நலத்திட்டங்களை உருவாக்கி செயல்படுத்துவதில் இத்துறை கவனம் செலுத்துகிறது.

* * * * *

## அத்தியாயம்-7

## சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்கள்

தமிழ் நாடு அரசு, சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினர்களான மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள், விதவைகள், விவசாயத் தொழிலாளர்கள், ஏழை விவசாயிகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் மற்றும் 50 வயதை கடந்த ஆதரவற்ற திருமணமாகாத ஏழைப் பெண்கள் ஆகியோர் நலனில் அக்கறை கொண்டு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டங்களின் கீழ் ஓய்வூதியம் பெறும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாதாந்திர ஓய்வூதியமானது 01.01.2023 முதல் ரூ.1,500/- ஆகவும், இதர ஓய்வூதியத் திட்டங்களின் (மாற்றுத்திறனாளிகள் ஓய்வூதியத் திட்டங்கள் தவிர்த்து) கீழ் பயன்பெறும் பயனாளிகளுக்கான மாதாந்திர ஓய்வூதியமானது 01.08.2023 முதல் ரூ.1,200/- ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

2023–24–ஆம் ஆண்டிற்கான ஓய்வூதியத் திட்டங்களுக்கு ரூ.5337.18 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 31.03.2024 அன்று உள்ள பதிவுகளின்படி, 34,90,969 பயனாளிகள் கீழ்காணும் திட்டங்களின் மூலம் பயன்பெற்று வருகின்றனர்.

| வ. எண் | திட்டங்களின் பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை (31.03.2024 வரை) |
|---|---|---|
| 1 | இந்திராகாந்தி தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்டம் | 14,18,073 |
| 2 | இந்திராகாந்தி தேசிய மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதியத் திட்டம் | 62,109 |
| 3 | இந்திராகாந்தி தேசிய விதவையர் ஓய்வூதியத் திட்டம் | 5,08,042 |
| 4 | மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் | 4,39,178 |
| 5 | ஆதரவற்ற விதவைகள் ஓய்வூதியத் திட்டம் | 6,67,036 |
| 6 | முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் | 2,48,262 |
| 7 | ஆதரவற்ற / கணவரால் கைவிடப்பட்ட | 1,18,407 |

| | | |
|---|---|---|
| | பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | |
| 8 | 50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | 26,542 |
| 9 | இலங்கை அகதிகளுக்கான ஓய்வூதியத் திட்டம். | 4,320 |
| | **மொத்தம்** | **34,90,969** |

**<u>அட்டவணை</u>**

## ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் வழங்கப்படும் நிதி பங்கீடு

| **வ.எண்.** | **<u>திட்டத்தின் பெயர்</u>** | **ஒன்றியஅரசின் பங்கீடு ரூ** | **மாநில அரசின் பங்கீடு ரூ** |
|---|---|---|---|
| 1. | இந்திராகாந்தி முதியோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | **200/-** | **1000/-** |
| | | **500/-** | **700/-** |
| 2. | இந்திராகாந்தி மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | **300/-** | **1200/-** |
| 3. | இந்திராகாந்தி விதவையர் ஓய்வூதிய தேசியத் திட்டம் | **300/-** | **900/-** |

| | | | |
|---|---|---|---|
| 4. | மாற்றுத் திறனுடையோர் ஓய்வூதியத் திட்டம் | - | 1500/- |
| 5. | ஆதரவற்ற விதவையர் ஓய்வூதியத் திட்டம் | - | 1200/- |
| 6. | முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு திட்டம். | - | 1200/- |
| 7. | ஆதரவற்ற / கணவரால் கைவிடப்பட்ட பெண்கள் ஓய்வூதியத் திட்டம் | - | 1200/- |
| 8. | 50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கான ஓய்வூதியத் திட்டம் | - | 1200/- |
| 9. | இலங்கை அகதிகளுக்கான ஓய்வூதியத் திட்டம் (OAP, DWP, DDWP) | - | 1200/- |
| 10. | இலங்கை அகதிகளுக்கான ஓய்வூதியத் திட்டம் (DAPS) | - | 1500/- |

**சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் மூலம் வழங்கப்படும் ஓய்வூதியத்தை பெற இணையதளம் மூலம் விண்ணப்பித்தல்**

சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் எந்தவொரு திட்டத்திலும் ஓய்வூதியம் பெற விரும்புவோர் இணைய வழியில் சமர்ப்பிக்க ஏதுவாக எளிய ஒரு பக்க

வடிவமைப்பை வருவாய்த்துறை செயல்படுத்தியுள்ளது. இவ்விண்ணப்பம் சம்பந்தப்பட்ட வருவாய் அலுவலர்களுக்கு கணினி மூலம் சரிபார்ப்புக்காக அனுப்பப்படும். சரிபார்ப்புக்குப் பிறகு தகுதியுள்ள மனுக்கள் தனி வட்டாட்சியர்களின் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) ஆய்வு மற்றும் ஓய்வூதிய ஆணை பெறுவதற்கு அனுப்பப்படும். தகுதியுள்ள மனுதாரருக்கு தனி வட்டாட்சியர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) மூலமாக ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

**ஓய்வூதியதாரர்களுக்கு இதர பயன்கள்**

ஆண்டுக்கு இருமுறை பொங்கல் மற்றும் தீபாவளிப் பண்டிகைகளின் போது, சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களின் கீழ் ஓய்வூதியம் பெறும் ஆண் ஒருவருக்கு ஒரு வேட்டியும், பெண் ஒருவருக்கு ஒரு சேலையும் வழங்கப்படுகிறது.

பயனாளிகள் கீழ்காணும் விதிமுறைகளின்படி சன்னரக அரிசியை இலவசமாக பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள்:-

அ) அங்கன்வாடி மையங்களில் உணவு உட்கொள்ளாதவர்களுக்கு மாதம் 4 கிலோ சன்னரக அரிசியும்

ஆ) அங்கன்வாடி மையங்களில் உணவு உட்கொள்பவர்களுக்கு மாதம் 2 கிலோ சன்னரக அரிசியும் வழங்கப்படுகிறது.

சமூகப் பாதுகாப்புத் திட்ட பயனாளிகளுக்கு உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013-ன்படி, 5 கிலோ அரிசி வழங்கப்படுகிறது.

******

## அத்தியாயம்-8

## சமூக சீர்திருத்தத் துறை

### துறை உருவாக்கம் – ஓர் அறிமுகம்

மாண்புமிகு முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையில் 1998 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நடைபெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் மத நல்லிணக்கத்தை காக்கவும் சமுதாய ஒற்றுமையை மேம்படுத்தவும் 1999-ஆம் ஆண்டு சமூக சீர்திருத்தத் துறை உருவாக்கப்பட்டது. இத்துறை 2002-ஆம் ஆண்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையுடன் இணைக்கப்பட்டு. பின்னர் 2006-ஆம் ஆண்டு அப்போதைய மாண்புமிகு முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் அறிவிப்பின்படி புதுப்பிக்கப்பட்டு. இயங்கி வருகிறது.

**சமூக நீதிக் கண்காணிப்புக் குழு அமைத்தல்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சமூக நீதி அரசாணையின் நூற்றாண்டு நாளினையொட்டி தமிழ்நாடு அரசால் **"சமூக நீதிக் கண்காணிப்புக் குழு"** அமைக்கப்படும் என்று அறிவித்திருந்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இவ்வறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு 2021–ஆம் ஆண்டில் தலைவர் மற்றும் ஏழு உறுப்பினர்கள் அடங்கிய **"சமூக நீதிக் கண்காணிப்புக் குழு"** அமைக்கப்பட்டது.

**குழுவின் பதவிக் காலம் நீட்டிப்பு**

சமூக நீதிக் கண்காணிப்புக் குழுவின் கடந்த இரண்டாண்டு செயலாக்கத்தினை கருத்தில் கொண்டும், அதன் நோக்கத்தினை எய்தும் பொருட்டும் தற்போதுள்ள தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அடங்கிய குழுவின் பதவிக் காலம் அரசாணை (நிலை)

எண் 07, சமூக சீர்திருத்தத் துறை, நாள் 27.11.2023-ன்படி மேலும் இரண்டாண்டுகள் நீட்டிக்கப்பட்டுள்ளது.

**சமூக நீதிக் கண்காணிப்புக் குழுவின் நோக்கம்**

சமூக நீதி அளவுகோலானது சட்டப்படி முழுமையாகச் செயல்படுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணிப்பதற்காகவும் கல்வி, வேலைவாய்ப்பு, பதவிகள், பதவி உயர்வுகள், நியமனங்கள் ஆகியவற்றில் சமூகநீதி அளவுகோல் முறையாக முழுமையாக பின்பற்றப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்கும், வழிகாட்டும், செயல்படுத்தும் பணிகளை மேற்கொள்ளவும் இவை சரியாக நடைமுறைப்படுத்தப்படாவிட்டால், உரிய நடவடிக்கை எடுக்க அரசுக்கு பரிந்துரை செய்யவும் சமூக நீதிக் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

**பணியிடங்கள் தோற்றுவித்தல்**

சமூக நீதிக் கண்காணிப்புக் குழுவின் நோக்கத்தினை பூர்த்தி செய்யும் பொருட்டு அதற்கான பணிகளை மேற்கொள்ள, ஒன்பது பணியிடங்கள்

உருவாக்கப்பட்டு, இப்பணியிடங்களுக்கு ஊதியம் உட்பட தொடர் மற்றும் தொடராச் செலவினங்களுக்கு நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

இக்குழு சென்னை-600 002 , அண்ணா சாலையில் உள்ள தேவநேய பாவாணர் நூலகக் கட்டடத்தின் இரண்டாவது தளத்தில் செயல்பட்டு வருகிறது.

**சமூக நீதிக் கண்காணிப்புக் குழுவின் கூட்டங்கள்**

சமூக நீதிக் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டதில் இருந்து இதுவரை 11 அமர்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

**கடந்த இரண்டாண்டுகளில் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகள்**

**1. ஆய்வுகள்**

**(அ) பல்கலைக்கழக ஆய்வுகள்**

சமூக நீதிக் கண்காணிப்புக் குழு 2022-ஆம் ஆண்டில் பெரியார் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், தமிழ்நாடு வேளாண்மைப்

பல்கலைக்கழகம், டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகம் ஆகியவற்றிலும் 2023–ஆம் ஆண்டில் சென்னை பல்கலைக்கழகம், தமிழ்நாடு உடற்கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் ஆகியவற்றிலும் ஆய்வுகள் மேற்கொண்டு அவற்றிற்கான ஆய்வறிக்கைகள் மற்றும் பரிந்துரைகளை அரசுக்கு சமர்ப்பித்துள்ளது.

மேலும் நடப்பாண்டில் சமூக நீதிக் கண்காணிப்புக் குழு பாரதிதாசன் பல்கலைக்கழகம் மற்றும் தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகம் ஆகியவற்றிலும் ஆய்வு மேற்கொண்டுள்ளது.

**(ஆ) பொதுத்துறை நிறுவனங்களில் ஆய்வுகள்**

பொதுத்துறை நிறுவனங்களில் ஆய்வுகள் மேற்கொள்வது தொடர்பாக சமூக நீதிக் கண்காணிப்புக்

குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் முதற்கட்டமாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் ஆய்வுப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**2. இறையூர் வேங்கைவயல் கிராம நிகழ்வு தொடர்பான கள ஆய்வு**

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தாலுகா, இறையூர் வேங்கைவயல் கிராமத்தில், ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள நீர்த்தேக்கத் தொட்டியில் அடையாளம் தெரியாத சில நபர்களால் மனித கழிவு கலக்கப்பட்டது தொடர்பாக சமூக நீதிக் கண்காணிப்புக் குழு இக்கிராமத்தில் 13.01.2023 அன்று கள ஆய்வு மேற்கொண்டு, அதன் ஆய்வறிக்கையினையும் பரிந்துரைகளையும் 20.01.2023 அன்று அரசுக்கு சமர்ப்பித்துள்ளது.

**3. சென்னிமலை கிராம நிகழ்வு தொடர்பான ஆய்வு**

17.09.2023 அன்று ஈரோடு மாவட்டம், சென்னிமலைப் பகுதியில் திரு. ஜான் பீட்டர் என்ற போதகர் மற்றும் அவரது குடும்பத்தினர் இறை

வணக்கம் மேற்கொண்டபோது 30 பேர் கூட்டமாக வந்து தாக்குதல் நடத்தியதாக தகவல் வரப் பெற்றதைத் தொடர்ந்து, 25.09.2023 அன்று சமூக நீதிக் கண்காணிப்புக் குழு தலைவர் அவர்களால், மேற்படி தாக்குதலுக்கு உட்பட்ட நபர்களை நேரில் சந்தித்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வு தொடர்பாக காவல் துறையினால் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**கலைஞர் நூற்றாண்டு விழா**

சமூக நீதிக் கண்காணிப்புக் குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, சென்னை மாநகர நூலக ஆணைக் குழுவுடன் இணைந்து **கலைஞர் நூற்றாண்டு விழா** கொண்டாட முடிவு செய்யப்பட்டுள்ளது. அரசால் ஜுன் 2024 வரை கலைஞர் நூற்றாண்டு நிகழ்ச்சியினை நடத்திட ரூ. 3.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. அதன்படி,

02.09.2023 அன்று கலைஞர் நூற்றாண்டு தொடக்க விழா சென்னை 2, அண்ணா சாலையில் உள்ள தேவநேயப் பாவாணர் கூட்ட அரங்கில் நடைபெற்றது. 27.11.2023 அன்று கோட்டூர்புரம், அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கிலும் 09.01.2024 அன்று சென்னை மாநிலக் கல்லூரியிலும், 27.02.2024 அன்று தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத்திலும், 09.03.2024 அன்று சென்னை பாரதி மகளிர் கல்லூரியிலும் கலைஞர் நூற்றாண்டு விழா நடத்தப்பட்டுள்ளது.

**பி.கீதா ஜீவன்**

**சமூக நலன் – மகளிர் உரிமை**

**அமைச்சர்**

## இணைப்பு – 1
## முக்கிய தினங்கள்

| வ. எண் | தினம் | நாள் |
|---|---|---|
| 1. | தேசிய பெண் குழந்தைகள் தினம் | ஜனவரி 24 |
| 2. | மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு தினம் | பிப்ரவரி 24 |
| 3. | உலக மகளிர் தினம் | மார்ச் 8 |
| 4. | திருநங்கையர் தினம் | ஏப்ரல் 15 |
| 5. | அன்னையர் தினம் | மே-இரண்டாவது ஞாயிறு) |
| 6. | குழந்தைத் தொழிலாளர் எதிர்ப்பு நாள் | ஜூன் 12 |
| 7. | முதியோர்க்கு எதிரான கொடுஞ்செயல் எதிர்ப்பு தினம் | ஜூன் 15 |
| 8. | உலக முதியோர் தினம் | அக்டோபர் 1 |
| 9. | உலக பெண் குழந்தைகள் தினம் | அக்டோபர் 11 |
| 10. | குழந்தைகள் தினம் | நவம்பர் 14 |
| 11. | பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ஒழிப்பு சர்வதேச தினம் | நவம்பர் 25 |
| 12. | வரதட்சணை தடுப்பு தினம் | நவம்பர் 26 |
| 13. | மனித உரிமை தினம் | டிசம்பர் 10 |

## இணைப்பு – 2

## வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு – 2024–2025

## மானியக் கோரிக்கை எண்.45
## சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை

2024–2025–ஆம் ஆண்டிற்கான
வரவு–செலவுத் திட்ட மொத்த ஒதுக்கீடு
**ரூ.7,829.93 கோடி**

| 2024–2025–ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு | | |
|---|---|---|
| **கணக்குத் தலைப்பு** | | **(ரூ. இலட்சத்தில்)** |
| **வருவாய் பகுதி** | | **ஒதுக்கீடு** |
| 2059 | பொதுப் பணிகள் | 280.38 |
| 2225 | சமூக நல இயக்ககம் | 0.42 |
| 2235 | சமூகப் பாதுகாப்பு இயக்ககம் | 25,872.56 |
| 2235 | சமூக நல இயக்ககம் | 90,283.48 |
| 2235 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்ககம் | 15,130.65 |
| 2236 | தலைமைச் செயலகம் | 38.68 |
| 2236 | சமூக நல இயக்ககம் | 3,36,952.39 |
| 2236 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்ககம் | 3,06,679.52 |

| 2024-2025-ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு | | |
|---|---|---|
| கணக்குத் தலைப்பு | | (ரூ. இலட்சத்தில்) |
| வருவாய் பகுதி | | ஒதுக்கீடு |
| 2251 | தலைமைச் செயலகம் | 1,007.14 |
| 2551 | சமூக நல இயக்ககம் | ---- |
| வருவாய் பகுதி மொத்தம் | | 7,76,245.22 |
| மூலதனப் பகுதி | | |
| 4235 | சமூக நல இயக்ககம் | 360.02 |
| 4235 | சமூகப் பாதுகாப்பு இயக்ககம் | 1,137.32 |
| 4236 | சமூக நல இயக்ககம் | 0.02 |
| 4236 | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட இயக்ககம் | 5,160.00 |
| மூலதனப் பகுதி மொத்தம் | | 6,657.36 |
| கடன் பகுதி | | |
| 7610 | அரசு பணியாளர்களுக்கான கடன்கள் | 90.00 |
| கடன் பகுதி மொத்தம் | | 90.00 |
| முழு மொத்தம் | | 7,82,992.58 |

**முழு மொத்தம்**

| | | (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| வருவாய் பகுதி | : | 7,76,245.22 |
| மூலதனப் பகுதி | : | 6,657.36 |
| கடன் பகுதி | : | 90.00 |
| மொத்தம் | : | **7,82,992.58** |
| | | **அல்லது** |
| | | **7,829.93 கோடி** |

2023-2024-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் வருவாய்த் துறை மானியக் கோரிக்கை எண்.41-ன் கீழ் ரூ.5337.18 கோடி சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

******

# சேவைகள்

மகளிர் உதவி எண்
181

(இணையதளம்: https://tn181whl.org/)

(https://www.facebook.com/181Tamilnadu/)

(https://twitter.com/whl181)

(https://www.youtube.com/channel/)

(UCQ7_mJrhmhZNa4YfDXRrYfQ)

(www.instagram.com/whl181tn/)

குழந்தைகள் உதவி எண்
1098

******

மாணவர்களுக்கான தேர்வு உதவி எண் 14417

******

முதியோர் உதவி எண்
14567

******

இணையதள குற்றத் தடுப்பு எண்
1930

******

காவல் உதவி செயலி
(குழந்தைகள், பெண்கள், முதியோர்களுக்கான அவசர தேவைக்கான செயலி)

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை–600 001.